Sangathamil

சங்கத்தமிழ்

குரல் – 25 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15.மே. 2022

13 ஆம் ஆண்டு தமிழீழ தேசிய துக்க நாள்

தமிழ் இன அழிப்பு நாள்

Genocide Day

National Mourning Day of Thamileelam

மே May 18



Only In 2009 Over 146, 6797 Eelam Thamils Murdered, 70,000 Thamils unaccounted

Ontario Government Recognized Thamil Genocide Education Week (12 May to 18 May) in Canada

கனடாவில் மே 18 முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நாள் நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியேற்றம் நடை பெறவேண்டும் என்பதை உலகத்தமிழர்கள் சார்பில் முன்வைக்கிறோம்

இன்றைய இலங்கையின் நிலைக்கு தமிழினத் துரோகிகளான கருணா, டக்ளஸ் தேவானந்தா மற்றும் பிள்ளையான ஆகியோரின் ஆலோசனையில் ஆட்சி செய்த இராஜபக்சா குடும்பத்தினர் நாட்டையும், நாட்டுமக்களையும் ஒருவேளை உணவுக்கு கூட கையேந்தும் நிலையில் விட்டுள்ளனர்.

முதலில் தூக்கிவீசப்படவேண்டியவர்கள் கருணா, டக்கிளஸ் தேவானந்தா, சம்பந்தன், பிள்ளையான் மற்றும் சுமந்திரன் பேன்றவர்களே...
இலங்கை மக்களே விழித்துக்கொள்ளுங்கள்!

தற்போது பதவியேற்றுள்ள மிகவும் ஆபத்தான நரி இரணில் விக்கிரமசிங்கவும் இராஜபக்சா குடும்பத்தினரிற்கு மிகவும் முக்கியமாக வேண்டப்பட்ட ஒருவரே. ஆகையால் இலங்கையில் எந்த மாற்றமும் வருவதற்கான சாத்தியம் இல்லை பொருளாதார வளர்ச்சியோ, மக்களின் வாழ்வில் மலர்ச்சியோ ஏற்படப்போவதில்லை என்பது திண்ணம். தற்போதைய நிலையை விட வீழ்ச்சியை நோக்கிய செல்லப்போகிறது.

சம்பளக் கொடுப்பனவுகளின் எதிரொலி!

ஆசிரியர்கள், ஓய்வுதியம் வழங்கப்படுபவர்கள் மற்றும் இராணுவம், பொலிசார் ஆகியோர்களில் கீழ் மட்டங்களில் இருப்பவர்களின் கொடுப்பனவுகள் நிறுத்தம்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

RANI TAILORS & FASHIONS

25 வருடம் அனுபவம் மிக்க மற்றும்
Sri Lanka, India, Germany போன்ற
நாடுகளில் தையல் கலையில் பிரபலமான
புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது
Canadaவில் சேவையாற்றுகிறார்



தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

NISHANTHAN LAW OFFICE

SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES




Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com

1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.



We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.

Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
விருகள், கொண்டோக்கள், வாடகை வசியிடங்கள், வீட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...

இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது

416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.



MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1 647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்

Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236

Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

K.S PAINTING & HARDWOOD

PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

GRAND OFFER
this Offer Only December 31th to January 31th, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
¢ $ 310.00
+ Graphic Extra....
Large Format Digital Printing
Design Only
¢ $ 9.99 / Sq. Ft (¢$ 34.99 / h.)

We print all kind of products

1000 Business Cards
with out design ¢ $ 59.99
One Side - 16pt Card Stock
with out design ¢ $ 29.99
One Side,10pt Card Stock

Call Me : Silver Print House - 647 712 1266

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM

AC	$99.99 +
OIL CHANGE	$39.99 +
USED TIRE	$49.99 +
BRAKES JOB	$249.99 +

Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்

Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com



RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கு அழையுங்கள்

Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)



RE/ON வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை

Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

* AUDIT	* CORPORATE TAXES
* REVIEW ENGAGEMENT	* PERSONAL TAXES
* NOTICE TO READER	* FINANCIAL PLANNING
* BUSINESS ADVISORY	* CRA AUDITS
* CONTROLLERSHIP SERVICES	* PAYROLL
	* BOOKKEEPING



Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM



தேசிய தலைவர்
மேதகு
வே. பிரபாகரன்
அவர்களின்
சிந்தனையிலிருந்து

ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ ஆயுத பலமோ அல்ல: அசைக்க முடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப்பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்.





சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபோசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

முகநூல் (Facebook)

Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



லெப். கேணல் ராதா

யார் இந்த ராதா?

தமிழீழ போராட்ட வரலாற்றை தெரிந்து கொண்டவர்கட்கு ராதாவை தெரியாமல் இருக்க முடியாது. யாழ். இந்துக் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் போதே ஆற்றலும் ஆளுமையும் மிக்க இளைஞனாயிருந்த ஹரிச்சந்திரா தான் 1983ல் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண் டதும் தலைவரினால் ராதா எனப் பெயரிடப்பட்டு எமது விடு தலைப் பயணத்தில் தளபதி ராதா ஆகினார்.

கல்லூரியில் படிக்கும் காலத்திலும், பின்னரும் தான் ராதா எப்போதும் அழகான ஆடம்பரமற்ற உடைகளை உடுத்தும் பழக்கம் உடையவர். இதனால் யாழ். வீதிகளில் உந்துருளியில் உலா வந்த ராதாவைப் பார்ப்பவர்கட்கு அவர் ஓர் அரச மேலாள ரைப் போலவோ அல்லது மருத்துவரைப் போலவோ தோன் றினாரே அன்றி வேறு வகையான பார்வையைக் கொடுக்க வில்லை.


அமைதியும் கவர்ச்சியும் கொண்ட அவரது தோற்றத்தைப் போலவே அவரது அணுகுமுறைகளும் அமைந்திருந்தன. 08ம் வகுப்பில் படிக்கும் போதே சாரணர் இயக்கத்தில் சேர்ந்து கொண்ட ராதா உயர்தர வகுப்பு படிக்கும் வரை சாரணர் இயக் கத்தில் இருந்து கல்லூரியின் பயிற்சிப் பாசறைக்கே தலைவ னாக இருந்ததினால் கல்லூரிக் காலத்தில் இருந்தே அவரிடம் செயலாணை (நிர்வாக) ஒழுங்குகளும் கட்டுப்பாடுகளும் நிறைந்து காணப்பட்டன.

யாழ். இந்துக் கல்லூரியில் மாணவ தலைவர்கட்கு முதன்மை மாணவத் தலைவனாக இருந்த ராதா வகுப்பறைகளின் நடை பாதைகளில் நடந்து வந்தாலே மாணவர்கள் பள்ளி முதல் வரைக் கண்டதுபோல் அமைதியாகி விடுவார்கள். இது ராதா மாணவப் பருவத்து நினைவுகள்.


கல்வி, விளையாட்டு, செயலாணை என்று எல்லாத் துறை களிலும் சிறந்து விளங்கிய ராதா தனது கல்லூரி வாழ்வை முடித்துக் கொண்டு கொழும்பில் வைப்பகம் ஒன்றில் பணி புரிந்தார். 1983ல் நடைபெற்ற இனப்படுகொலைகளை கண் களினால் கண்ட ஹரிச்சந்திரா உடனடியாகத் தன்னை விடுதலைப்புலிகள் இயக்கத்தோடு இணைத்துக்கொண்டார்.

அறிவும், ஆற்றலும், வீரமும், விவேகமும் ஒருங்கே கொண்ட ஒரு வித்தகனை விடுதலைப்புலிகள் இயக்கம் பெற்றுக் கொண்டது. இந்த வேறுபாடுடைய வீரனை, நடமாடும் பல் கலைக்கழகத்தினை இனங்கண்டுகொண்ட தேசியத்தலைவர், ராதாவின் ஆற்றலும், ஆளுமையும் அவரைப் போல பல நூறு போராளிகளை உருவாக்கும் என்பதை உணர்ந்து கொண்டு பயிற்சி முகாமினை நடாத்தும் பணியினை ராதாவிடம் ஒப் படைத்தார். அந்தப் பல்கலைக்கழகத்திடம் இருந்து விடுதலைப் புலிப் போராளிகள் படித்துக்கொண்ட பாடங்கள் தான் எத்தனை? எத்தனை?

பயிற்சி முகாமில் புலிக்கொடி பறக்கிறது. போராளிகள் அணி வகுத்து நிற்கின்றார்கள். இப்போது கல்லூரியில், வீதிகளில் கண்ட ஹரிசந்திராவை அங்கே காணமுடியவில்லை. ஆங் கிலப் படங்களில் வெறுமனே வேசமிட்டு வரும் ஒரு பெரிய படை



மறைப்பு உடைகள் உரசும் சத்தத்துடனான படைய நடையும் அவருக்கே உரியவை. பயிற்சிக் கழகத்தில் ராதாவைப் பார்த் தாலே பயமாக இருக்கும். அவ்வளவு கடுமை, மிக வேகம். அதுதான் ராதா.




மேலாளரைப்போல் ஒருவனை அங்கே காணமுடிந்தது.


"Scout Attention" என்ற மேலாண்மை அறைகூவலும், உரு

ராதா அசைக்க முடியாத தன்னம்பிக்கை மிக்கவர். அதேபோல் தலைவரும் ராதா மேல் நம்பிக்கை கொண்டிருந்தார். பயிற்சி முகாம்களில் பயிற்சி பெறும் போராளிகள் கடுமையான கொமாண்டோ பயிற்சிகளை பெறும்போது அவர்களின் பின்னே போலிக்குண்டுகளைப் பயன்படுத்தி போர்க்கள நிலைமையைப் போன்ற மனமயக்கத்தை உருவாக்கும் போர்ப்பயிற்சி மரபு முறை. ஆனால் ராதா இந்த மரபுகளை மீறினார். தான் போலிக் குண்டுகளை பயன்படுத்த விரும்பவில்லை, உண்மையான குண்டுகளை பயன்படுத்தப் போவதாக ராதா தலைவரிடம் இசைவு வேண்டினார். ராதாவின் திறமையிலும் நம்பிக்கை யிலும் நம்பிக்கை கொண்டிருந்த தலைவர் ராதாவிற்கு இசைவு கொடுத்தார்.

"படுத்து நிலையெடு" (Down Position) இது ராதாவின் கட்டளை. பயிற்சி பெறும் போராளிகள் வேகமாக நிலை எடுத்து நகர் கிறார்கள். அப்போது அவர்களின் பின்னே நின்ற ராதா எம்-16 ரகத் துப்பாக்கியினால் அவர்களின் பாதணிகளைக் குறிபார்த்துச் சுடுகிறார். உண்மையான ரவைகள் பாதணிகளில் பட்டும் படாததுமாய் செல்கின்றன. அருகே நின்று பயிற்சியை மேற் பார்வை செய்துகொண்டிருந்த பொன்னம்மான் சொல்கிறார் "அது தான் ராதா". அன்றைய பயிற்சி முடிந்து போராளிகள் தங்கள் தங்குமிடங்களுக்கு செல்கின்றார்கள். அங்கே தங் களது இரும்பிலான அடிப்பாகங்களைக் கொண்ட பாதணி களைக் கழற்றிப் பார்க்கிறார்கள். சிலரது பாதணிகளை எம்-16 ரவைகள் துளைத்திருந்தன. இந்த ஓய்வு நேரத்தில் அந்த "மேலாளரைக் ராதா"வைக் காணவில்லை. ஒரு நல்ல நண் பனை அங்கே காணமுடிந்தது. "என்ன ஐ சே கஸ்டமா இருக்கா, துன்பந்தான்". இப்படிக் கதைப்பது ராதாவின் வழமை.

பள்ளிக்கால காதல் கதை கேட்கும் அளவிற்கு பழகுவார் ராதா. ஒரு மாலை நேரம் பயிற்சி முடிந்து எல்லோரும் கலகலப்பாக பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு போராளி தனது பள்ளிக் காதலியின் பெயர் இராசாத்தி என்றும் அவளைப் பற்றிய கதை





விக்டர் வீரச்சாவடைந்த பின் மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி யாகப் பொறுப்பேற்ற ராதா உலகில் கண்ணிவெடியால் தகர்க்கப் படாதென புகழ்பட்ட “பவள்” கவச ஊர்தியைத் தகர்த்து விடு தலைப்புலிகளின் தொழில்நுட்பத் திறனை உலகிற்குக் காட்டினார்.

கேணல் கிட்டு அவர்கள் காலை இழந்த பின் யாழ். மாவட்ட சிறப்புத் தளபதியாக பொறுப்பேற்ற ராதா குறுகியகால இடை வெளியில் குரும்பசிட்டி படைமுகாம், மயிலியதனை படை முகாம், காங்கேசன்துறை காபர்வியூ படைமுகாம் என பல முகாம்களைத் தாக்கிப் பல வெற்றிகளைக் குவித்தார். பல முனைகளிலும் திறமை கொண்ட இந்த நடமாடும் பல்கலைக் கழகம் இன்னும் சில காலம் இருந்திருந்தால்... இது தலைவர் உட்பட எல்லோர் மனதிலும் எழும் கேள்வி. “சண்டைக்கு எண்டு போய் சாகிறதெண்டால் ஐ சே எங்களுக்கெண்டு ஒரு றவுண்ஸ் அல்லது ஓர் செல் துண்டு இருக்கு அது வந்தால் தான்

களையும் ராதாவோடு கதைத்திருந்தான். சிறிது நேரத்தில் முகாமின் ஒலிபெருக்கி “இராசாத்தி உன்னை காணாத நெஞ்சு” என்ற பாடல் மெதுவாக ஒலித்துக்கொண்டிருந்தது. இப்படி ராதா வேறுபாடானவர்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் என்று மூன்று மொழிகளையும் அறிந்திருந்த ராதாவின் மிசையத்தில் (மேசை) நூல்கள் குவிந் திருக்கும். அவர் தெரிந்து வைத்திருக்காத துறையே இல்லை என்று துணிந்து கூறலாம். ராதாவின் ஆற்றல் கண்டு தலை வரே ஒரு தடவை வியந்து புகழ்ந்ததுண்டு.

அடர்ந்த காடு குறிப்பிட்டளவு போராளிகள், பொன்னம்மான், விக்டர் உட்பட சில தளபதிகள் அவர்களோடு தலைவர். இவர் களுடன் கையில் தொலைத் தொடர்பு கருவியுடன் ராதா. எல் லோரும் மிகுந்த மகிழ்வோடு தலைவரும், பொன்னம்மானும் கூறும் கதைகளைக் கேட்டபடியே காட்டின் வழியே நடந்து கொண்டிருந்தார்கள். எல்லோரோடும் சேர்ந்து சிரித்துக் கதைத்தபடி நடந்து கொண்டிருந்த ராதா திடீரென “Down Postion” என உரத்த குரலில் கட்டளை பிறப்பித்தான். தலைவர் உட்பட எல்லோரும் கட்டளைக்குப் பணிந்தார்கள். தலைவனும் தளபதிகளும் உள்ளிருந்து வெளிநோக்கி வியூகம் அமைக்கு மாறு சைகையால் கட்டளை கொடுத்தார்கள். அதுவரை எதுவுமே நடக்கவில்லை. சிறிது சிறிதாக கேட்ட ரீங்கார சத்தம் ஒன்று மட்டும் கூடிக்கொண்டு வந்தது. அதுவரை ராதாவைத் தவிர எவருக்கும் எதுவும் புரியவில்லை. சிறிது நேரத்தில் காட்டுத் தேனீக்களின் பெரிய கூட்டமொன்று பேரிரைச்சலுடன் எல்லோரையும் கடந்து சென்றது.



தேனீக்கள் கண்களில் இருந்து மறைந்ததும் எல்லோரும் எழுந்தார்கள். பொன்னம்மானும் தலைவரும் ராதாவைப் பார்த் தார்கள். “காடு பற்றிய புத்தகம் ஒன்றில் படிச்சனான் அண்ணை. சத்தம் சிறிதாக இருக்கும் போதே இதுவா இருக்குமோ என்று நினைச்சுத்தான் கட்டளை (Command) கொடுத்தனான். அது போலவே நடந்துவிட்டது. இந்தத் தேனீக்கூட்டம் பாதை மாறா தாம் வந்த வழியே பறக்குமாம். நாங்கள் கீழே படுக்காமல் நடந்து வந்திருந்தா இண்டைக்கு எங்களிலே கனபேருக்குக் கண் பறந்திருக்கும்” என்று ராதா கூறி முடித்தார்.

ராதாவைத் தொடர்ந்து பொன்னம்மான் போராளிகளைப் பார்த்து “இண்டைக்கு இதிலை இரண்டு விசயம் படித்திருக் கிறியள். ஒரு திடீர் கட்டளை வந்தால் எப்படி நிலை (Position) எடுக்கிறது ஒன்று கட்டளை (Order) வந்தால் கேள்வி கேட்கக் கூடாது எண்டது இரண்டாவது. ஏன் படுக்க வேணும் எதற்குப் படுக்க வேணும் என்று யாரும் கேட்டுக் கொண்டு நின்றிருந் தால் இப்ப கண் போயிருக்கும் Down என்றால் Down தான்” என்று சொல்லிச் சிரித்தார்.



சா வரும். இல்லையெண்டால் ஒரு போதும் சாகேலாது I Say” இது ராதா போராளிகளைப் பார்த்து அடிக்கடி கூறும் வசனம். ஆம் அவர் கூறியது போல் 20-05-1987ல் அவரைத் தேடி எதிரி ஏவிய குண்டொன்று அவரது மார்பினைத் துளைத்தது.



இவ்வாறு எண்ணற்ற திறமைகளைக் கொண்டிருந்த ராதா தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெற்ற சிறப்புக் கொமாண்டோ அணியிற்கும் பயிற்சி அளித்தார். பயிற்சி யாளனாக இருந்த ராதா லெப்.கேணல் விக்டருடன் மன்னார்க் களம் நோக்கிச் சென்று சாதனைகள் செய்யத் தொடங்கினான். மன்னார் காவல்துறை நிலையத் தாக்குதலில் ராதாவின் திறமையை விக்டர் பல இடங்களிலும் குறிப்பிடுவது வழக்கம்.

ஹரிச்சந்திரா என்ற ராதா காவியமாகி ஆண்டுகள பல தாண்டிய போதும் அவரது நினைவுகள் எம் மண்ணில் இருக்கும். ராதாவின் சாதனைகளில் இன்னும் ஊமையாய் இருக்கும் உண்மைகள் சில, எம் தேசம் மீண்ட பின்பே பேசப்படும்.

நன்றி: மே 1997, எரிமலை - பேபி

தமிழ்மி செய்திகள்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் 1900 ஆவது நாளை எட்டியது!

மே 04. 2022

பொருளாதார நெருக்கடியை நிறுத்த “தமிழ் இறையாண்மைக்கு” சிங்களவர்கள் ஆதரவளிக்க வேண்டும். என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் வவுனியாவில் பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் முன்னெடுக்கப்பட்டுவரும் தொடர்ச்சியான போராட்டத்துக்கு இன்றுடன் 1900ஆவது நாளாகும்.

இதனையடுத்து இன்று அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இவ்வாறு கருத்து தெரிவிக்கப்பட்டது.
தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,
கொழும்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் முழக்கம் “தமிழர்கள் தங்கள் தாயகத்தை ஆளட்டும்” என்பதாக இருக்க வேண்டும்.தமிழ்ப் பகுதிகளை சிங்களர்களின் கட்டுப் பாட்டில் வைத்திருப்பதன் மூலம், ஒவ்வொரு சிங்கள அரசியல்வாதிகளும், இந்தியா, சீனா உள்ளிட்ட சர்வதேச சமூகமும் இலங்கையை ஸ்திரமற்ற நாடாக மாற்ற விரும்புகிறது.

இவர்கள் அனைவரும் சிங்கள-தமிழர் மோதல் தொடர வேண்டும் என்று விரும்புகிறார்கள்.அவர்கள் அனைவரும் இலங்கையை கட்டுப்படுத்த சிங்கள-தமிழர் மோதலை பயன்படுத்துகின்றனர்.

தமிழர் மீதான அடக்குமுறைகளை சிங்கள வாக்காளர்களை கவருவதற்காகவே சிங்கள அரசியல் வாதிகள் செய்கின்றனர். சிங்களவர்களில் பெரும்பாலோர் மகாவம்சத்தை நம்புகிறார்கள், வடக்கு கிழக்கு சிங்கள பௌத்த பூமியாக இருக்க வேண்டும் என்று அது கூறுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் சிங்கள மக்களின் அன்றாட வாழ்க்கையை அவல நிலைக்குத் தள்ளுகின்றன.

எல்லாவற்றையும் தாண்டி சிங்கள அரசியல்வாதிகள் தமிழர்களுக்கு செய்த ஒவ்வொரு படுகொலையும் கர்மாதான். இப்போது அந்த கர்மா தன் வேலையைச் செய்ய ஆரம்பித்துவிட்டது.

சிங்கள-தமிழ் மோதலை சீனா தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தியது. தமிழர்களைக் கொல்ல சீனர்கள் ஆபத்தான ஆயுதங்களைக் கொடுத்தனர். இப்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் கொழும்பு துறைமுகத்தையும் சீனர்கள் கைப்பற்றினர்.

சிங்கள - தமிழ் - மோதலுக்கு 13 வது திருத்தம் என்று இந்தியா போலியாக உருவாக்கியது. இலங்கையை கட்டுப்படுத்த இந்தியா 13வது திருத்தத்தை பயன்படுத்துகிறது. இந்தியா கூட இலங்கையை இந்தியாவுடன் இணைக்கப் பேசுகிறது. மற்ற எல்லா நாடுகளையும் எடுத்துக் கொள்ளுங்கள், அவர்கள் ஒருபோதும் சிங்கள-தமிழ் மோதலை தீர்க்க மாட்டார்கள். சிங்களம் மற்றும் சிறீலங்காவில் இருந்து ஆதாயம் பெற இதைப் பயன் படுத்துகிறார்கள்.

தமிழர்கள் காலங்காலமாக அவதிப்பட்டு வருகின்றனர். நமக்கு துன்பம் என்பது அன்றாட நிகழ்வு. அனைத்து சிங்கள-தமிழர் முரண்பாடுகளும் சிங்களவர்களையும் தமிழர்களையும் அழித்துவிடும். அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

எனவே, கொழும்பில் உள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் “தமிழ் இறையாண்மைக்கு” அழைப்பு விடுக்க வேண்டும், அது சிங்கள மக்களை எந்தவித முரண்பாடுகளும் துன்பங்களும் இன்றி சுதந்திரமாக வாழ அனுமதிக்கும்.

தமிழர்களும் சிங்களவர்களும் பழங்காலத்தில் நட்புறவாக, மிக நெருங்கிய அண்டை நாடுகளாக இருந்தனர். நாம் இரண்டு இறையாண்மை கொண்ட அண்டை நாடுகளாக தொடரலாம். செக்கோஸ்லோவாக்கியாவின் மாதிரியைப் பின்பற்றுவோம், ஒருவருக்கொருவர் இறையாண்மை அந்தஸ்தை இணக்கமாக அனுமதிப்போம். என்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவப் பேரிடர் ஏற்படும் அபாயம் பிரதிப் பணிப்பாளர் எச்சரிக்கை

மே 07, 2022

யாழ் போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதுடன் இது ஓர் மருத்துவப் பேரிடரினைக் கட்டியம் கூறியுள்ளது என யாழ் போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரும் மருத்துவருமான சி.யமுனாநந்தா தெரிவித்தார்.



அவர் நேற்றைய தினம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் அந்த அறிக்கையில், சத்திர சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் பல பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது. இதனால் அவசர சத்திரசிகிச்சை, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சத்திரசிகிச்சை தவிர்ந்த ஏனைய சத்திரசிகிச்சைகள் செய்யமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

மயக்கமருந்துகள், சேலைன், சத்திரசிகிச்சையில் அதிகமாகத் தேவைப்படும் பெட்டடின் உட்பட பல மருந்துகள் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே உபயோகிக்கக் கூடியதாக உள்ளது. புற்றுநோய்களுக்கான சிகிச்சை உட்பட பல சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளமுடியாத சூழ் நிலையே காணப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் பொதுமக்களை விழிப்படைய வைத்தல் அவசியம் தேவை. விபத்துக்கள், குழு மோதல்கள் கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்து தற்போதைய சூழலை எதிர்கொள்ள அனைவரும் உதவுதல் வேண்டும். மேலும் வைத்தியசாலைச் சமூகம் மருத்துவ சேவையினைத் தொடர மனித நேய மருத்துவ அவசர உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது என்றுள்ளது.

காலிமுகத்திடல் போராட்டத்தில் இசைப்பிரியாவின் நிதிக்கான ஒளிப்படம்!

மே 03, 2022

காலிமுகத்திடலில் நடைபெறும் தன்னெழுச்சிப் போராட்டம் நடைபெறும் இடத்தில் இறுதிப் போரின்போது படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஊடகவியலாளரான இசைப்பிரியாவின் ஒளிப்படமும் காட்சிப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதி, அரசாங்கத்தை பதவி விலக வலியுறுத்தி காலிமுகத்திடலில் நடைபெறும் தன்னெழுச்சிப் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை 25ஆவது நாளாக தொடர்ந்தது. கோட்டா கோ கம என்று பெயரிடப்பட்டு நடைபெறும் இந்தப் போராட்ட களத்திலேயே நேற்று இசைப்பிரியாவின் ஒளிப்படம் தாங்கியவாறு போராட்டம் நடைபெற்றது.

தமிழீழத் தேசிய தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாள



ராகவும், ஊடகவியலாளராகவும், நிதர்சனம் திரைப்பட பிரிவின் கலைஞராகவும் பரிணமித்தவர் இசைப்பிரியா.

இறுதிப் போரின்போது இவர் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுப் படுகொலைசெய்யப்பட்டார் என்பதும் குறிப்



வவுனியாவில் தனது மகன், மருமகன் மற்றும் பேரனைத் தேடிய தாயார் சாவு!

ஏப்பிரல் 26, 2022

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகன், மருமகன், பேரன் ஆகிய மூவரையும் தேடிவந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்று இரவு (01) சாவடைந்துள்ளார்.

வவுனியா கிறிஸ்தவகுளம் பகுதியை சேர்ந்த செல்லையா செல்வராணி (வயது 75) என்ற தாயே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரது மகன் - தங்கராசா தயாபரன் (வயது 41), மருமகன் - தம்பு தியாகராசா (வயது 56), பேரன்- தியாகராசா மனோகரன் (வயது 31) ஆகிய மூவரும், கடந்த 2008 ஆம் ஆண்டு வவுனியா செட்டிகுளத்தில் விறகுவெட்ட சென்ற போது இராணுவத்தினரால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

அவர்களைத்தேடி வவுனியாவில் கடந்த 1898 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறை உணவுத்தவிர்ப்பு போராட்டத்திலும் குறித்த தாய் கலந்து கொண்டு தனது மகன், மருமகன், பேரன் ஆகிய மூவரையும் கண்டு பிடித்து தருமாறு கோரி போராடியிருந்தார்.

இந்நிலையில் மூவரையும் காணாமலேயே அவர் நேற்று மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சிறீலங்கா அரச பயங்கரவாதத்தால் வலிந்து காணாமலாக்கப்பட்ட தங்களது உறவுகளைத் தேடிவந்த பல பெற்றோர்கள் தங்களது உறவுகளின் நிலையை



செல்லையா செல்வராணி (வயது 75),
கிறிஸ்தவகுளம், வவுனியா

அறியாமலேயே மரணமடைந்துள்ளனர்.

தையிட்டியில் தனியார் காணியில் அமைக்கப்படும் விகாரை சிங்கள இராணுவத் தளபதி நேரில் ஆராய்வு!

மே 08, 2022

வலி.வடக்கு தையிட்டியிலுள்ள தனியார் காணியொன்றில் அமைக்கப்பட்ட திஸ்ஸ ரஜமஹா விகாரைக்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா இன்று நேரில் வருகை தந்தார்.

பலாலியில் அமைந்துள்ள யாழ்பாணம் படைத் தலைமையகத்துக்கு இன்று காலை வருகை இராணுவத் தளபதி, விகாரைக்குச் சென்று கட்டுமானப் பணிகளை நேரில் ஆராய்ந்தார்.

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விகாரையை அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன் கட்டுமானப் பணிகளை அனுமதிப் பதில்லை என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

எனினும் கடும் எதிர்ப்பையும் மீறி காங்கேசன்துறை திஸ்ஸ ரஜமஹா விகாரை அமைக்க இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவால் அடிக்கல் நடப்பட்டது.

விகாரை கட்டுமானப் பணிகளுக்கு தடை விதிக்கக் கோரி நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில் விகாரையின் கட்டுமானப் பணிகள் தொடர்பில் இராணுவத் தளபதி என்று கள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.



இலங்கையிலிருந்து தமிழகம் வர முயன்ற 12 பேர் சிங்கள கடற்படையால் கைது!

மே 04, 2022

இலங்கை மன்னாரில் இருந்து தமிழகத்திற்கு படகில் வர முயன்ற மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் மற்றும் படகோட்டிகள் இருவர் உட்பட 14 பேரை தாழ்வுபாடு கடற்பரப்பில் வைத்து இன்று அதிகாலை சிறீலங்கா சிங்கள கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரண மாக திருகோணமலையை சேர்ந்த 7 சிறுவர்கள், 3 பெண்கள், 2 ஆண்கள் என 3 குடும்பத்தை சேர்ந்த 12 நபர்கள் மற்றும் மன்னாரை சேர்ந்த படகோட்டிகள் இருவர் ஒரு பைபர் படகில் தனுஷ்கோடி நோக்கி இன்று காலை வந்து கொண்டிருந்தபோது, மன்னார் மாவட்டம் தாழ்வுபாடு கடற்பரப்பில் ரோந்தில் ஈடுப்பட்டிருந்த சிறீலங்கா கடற்படையினர் படகுடன் அவர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 14 பேரும் முதல் கட்ட விசாரணைக்கு பின் சிறீலங்கா போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.



தமிழ் இளைஞர்கள் மிகவும் நிதானத்தோடு செயற்படவேண்டும்!

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்

மே 10, 2022

இத்தகைய நிலைக்குக் காரணமான ஜனாதிபதியே முதலில் பதவி விலகியிருக்க வேண்டும் எனவும் சமகால நிலை தொடர்பில் தமிழ் இளைஞர்கள் அமைதி காக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலு வலகத்தில் சமகால நிலை தொடர்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது நாடு மிக மோச மான நிலையை எட்டியிருக்கின்றது. வன்முறை உச் சத்தை தொட்டிருக்கின்றது. ராஜபக்சக்களின் குண்டர்கள் நியாயமான போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் இடங்களுக் குள் புகுந்து அவர்களை தாக்கியிருக்கின்றார்கள்.

அதனால் கோபம் கொண்ட எமது மக்கள் மாவட்டங்கள் தோறும் வன்முறைகளை கையில் எடுத்திருக்கின் றார்கள். சட்டம் ஒழுங்கு நிலைகுலைந்திருக்கின்றது. இந்த நாடு மிக மோசமான நிலைக்குள் தள்ளிச் சென்றுள்ள நிலையில் வடக்கு கிழக்கு மாத்திரமல்ல மலையகம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மக்களிடம் நான் ஒரு அன்பான வேண்டுகோளை விடுக் கின்றேன்.

நாங்கள் இந்த இடைக்காலத்தில் நிதானமாகவும், பொறு மையாகவும் எங்களது நிலைகளை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக காலி முகத்திடலில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தமிழ் இளைஞர்கள் கடைப்பிடித்த அமைதியும் நிதானமும் எங்களுக்கு ஒரு பெரு வெற்றியைத் தந்திருக் கின்றது.

தொடர்ந்து அந்த வெற்றியை தக்கவைக்க வேண்டு மானால், இன்னும் சிறிது நாட்கள் நாங்கள் மிகவும் நிதானமாக நடக்க வேண்டும். ஏற்கனவே பல கொலை களையும் அராஜகங்களையும் சந்தித்த நாங்கள், தற் பொழுது அரசு இருக்கும் நிலையில் தமிழ் இளைஞர்கள் துப்பாக்கி வைத்திருந்தார்கள் அல்லது போராடினார்கள் என்பதை காண்பித்து அவர்கள் மீது தாக்குதல் மேற் கொள்ளக்கூடிய சூழல் உள்ளது.

இந்த நிலையில் இளைஞர்கள் நிதானமாக செயற்பட வேண்டும் என்று வினயமாக கேட்டுக்கொள்கின்றேன். அதிலும் குறிப்பாக, இலங்கையில் நடப்பது வன் முறைக்கு பதில் வன்முறையாக இருக்கக்கூடாது.

அதற்கு பதிலாக அரசாங்கத்தை ஜனநாயக வழியிலே வீட்டுக்கனுப்ப முயற்சித்தவர்கள் வன்முறையை கையில் எடுத்திருப்பதானது மிக மோசமானது.

இவ்வாறான நிலையில் எங்களையும் வலிய இழுத்து செல்லக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உண்டு ஆகவே, வடக்கு கிழக்கு மலையகத்தில் உள்ள இளைஞர்கள் மிக நிதானத்தோடு செயற்பட வேண்டும் என கரிசனையோடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிரதமர் மஹிந்த பதவியிலிருந்து விலகியிருப்பதென்பது இந்த நாட்டிற்கு பெரிய விடயமாக நான் பார்க்கவில்லை. இந்த நாட்டினுடைய ஜனாதிபதி உடனடியாக பதவி விலகியிருக்க வேண்டும். அப்படி விலகியிருந்தால்தான் நாட்டில் இருக்கக்கூடிய நெருக்கடிக்கு தீர்வினை கொண்டு வந்திருக்க முடியும்.

ஆனாலும் அவர் பதவி விலகியிருப்பது ஏனைய அமைச்சர்களும் இயல்பாகவே பதவி விலகுவதற்கான சூழலாக இருக்கின்றது. இந்த நிலைமை இலங்கையின் தற்போதைய நிலை அரசியல் களச்சூழலில் ஒரு சிறிய ஆறுதலை தரும் என்று எதிர்பார்க்கின்றோம்.

குறிப்பாக கோட்டாபாய ராஜபக்ஷ நாட்டை தவறாக வழி நடத்திய பொறுப்பை தானே ஏற்று பதவி விலகிச் செல்ல வேண்டியவர். அவர் அதனை செய்ய வேண்டும். செய்யவில்லை எனில் இன்னும் இந்த நாடு திருத்தத் திற்குள் வரவில்லை என்பதுதான் ஜதார்த்தமான உண் மையாகும்" என அவர் தெரிவித்தார்.

கொழும்பு வன்முறைக்கு அரசாங்கமே முழு பொறுப்பு – சி. வி. விக்னேஸ்வரன் எம். பி.

மே 10, 2022

இன்றைய தினம் கொழும்பில் இடம்பெற்ற வன்முறைக்கு அரசாங்கமே முழு பொறுப்பேற்க வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கை...


இன்றைய கொடூரமான தாக்குதல் (09.05.2022)

கொழும்பு காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது குண்டர்களை ஏவி தாக்குதல் நடத்திய சம்பவத்துக்கு அரசாங்கமே முழு பொறுப்பையும் ஏற்கவேண்டும். அரசாங்கத்துக்கு சார்பாக அலரி மாளிகையில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் காலி முகத்திடலில் கடந்த 30 நாட்களாக போராட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தமிழ் மக்கள் மீது கடந்த 65 வருடங்களாக மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட அரச பயங்கர வாதத்தை நினைவுபடுத்துகின்றன.



தமது உரிமைகளுக்கு எதிராக சாத்வீக வழியில் போராட் டம் மேற்கொண்ட தமிழ் மக்கள் மீது படையினரை ஏவி தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் வன்முறையை கட்ட விழ்த்து விட்டிருந்தன. இதுவே பின்னர் ஆயுத போராட் டத்துக்கு தமிழ் மக்களை தள்ளியது. அதேபோல, உணவு, எரிபொருள், மருந்துப்பொருட்கள் ஆகியவற்றுக்கான தமது உரிமைகளை வலியுறுத்தி அமைதியான வழியில் போராட்டம் நடத்தும் அப்பாவி மக்களின் மீது குண்டர் களை ஏவியும் படையினரின் உதவியுடனும் அரசாங்கம் இன்று மேற்கொண்ட வன்முறை மேலும் வன்முறையை தூண்டும் ஒரு செயற்பாடாகவே அமைகின்றது. ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் இந்த சம்பவங்களில் இருந்து தூர விலகி நின்று மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அரசாங்கம் இன்றைய சம்பவத்துக்கு பொறுப்பு ஏற்க வேண்டும். தமிழ் மக்கள் மீது முள்ளிவாய்க்கால் இனப்படு கொலையை நிகழ்த்தி பல்வேறு ஆதாரங்களின் மத்தி யிலும் தாம் எந்த ஒரு படுகொலையிலும் ஈடுபடவில்லை என்று அரசாங்கம் இன்றுவரை எவ்வாறு வாதாடு கின்றதோ, அதேபோல, இன்றைய சம்பவத்துக்கும் தமக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று (பல்வேறு காணொளி ஆதாரங்கள் இருக்கின்றபோதிலும்) வாதாடும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.




அவசர காலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் போன்றவற்றை திடீரென்று கொண்டு வந்தது இவ்வாறு மக்களை அடித்துத் துன்புறுத்தி இராணுவ அரசாங்கம் ஒன்றை கொண்டு வரவோ என்ற சந்தேகம் எழுகின்றது. தமிழ் மக்களை எவ்வாறு பயங்கரவாதிகள் என்று சித்திரித்து அவர்கள் மீது வன்முறையை ஏவி விட்டார்களோ அதே போல் இனி சிங்கள மக்களுக்கும் எதிராக பயங்கரவாதிகள், தீவிர வாதிகள் என்று ஏதேனும் ஒரு சொல்லைப் பாவித்து வன் முறை அரசாங்கம் ஒன்றை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று சந்தேகப்படுகின்றேன். ஆகவே தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இல்லையேல் இவை யாவும் தமிழ்ப் பயங்கரவாதிகளின் சூழ்ச்சி என்று அரசாங்கம் தமிழர்கள் மேல் அல்லது முஸ்லீம்களின் மேல் பாரத்தைப் போட்டு விடுவார்கள்.

யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஆரம்ப நிகழ்வு!

மே 12, 2022





முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரத்தின் 12.05.2022 இன்று முதலாம் நாள் நினைவு வணக்கம், யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி வளாகத்தில் இன்று ஆத்மார்த்தமாக யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

அகவணக்கத்துடன் ஆரம்பமாகிய நினைவேந்தலைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர் சங்க பிரதிநிதிகளால் மலர் வணக்கம் செலுத்தப்பட்டதோடு ஈகைச்சுடரும் ஏற்றப்பட்டது.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகம் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இன அழிப்பின் இறுதி நாட்களை முன்னிட்டு இவ்வாரம் இன அழிப்பு வாரமாக நினைவேந்தல்கள் வடகிழக்கு தமிழர் தாயகமெங்கும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாரத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தாலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி மற்றும் நினைவேந்தலை தமிழர் தாயகம் இதயபூர்வமாக கடைப்பிடிக்கவேண்டும் என பல்கலைக்கழக மாணவ சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட மாணவ ஒன்றிய தலைவர், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர், யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்து பீட மாணவர்கள், யாழ் பல்கலை ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் இன்று ஆரம்பம் அதனையடுத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது 12.05.2022









சிங்கள பௌத்த பேரினவாதம் பலவீனம் அடைந்துள்ளது தமிழ் மக்கள் தற்போது ஒன்று பட வேண்டிய காலம்!

மே 12, 2022

சிங்கள பௌத்த பேரினவாதம் பலவீனம் அடைந்துள்ளது. தமிழ் மக்கள் தற்போது ஒன்றுபட வேண்டிய காலம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

இன்றைய தினம் தியாக தீபம் திலீபனின் நினைவு ஆலயத் திற்கு முன்னால் இனப்படுகொலைகளை ஆவணப்படுத்தி காட்சிப்படுத்தலை ஆரம்பித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் பயணத்தில் உயிர்நீத்த ஆன்மாக்கள் மாவீரர் களின் தியாகங்கள் வீண் போகவில்லை என்பது இன்று தென் இலங்கையில் நடைபெறுகின்ற சம்பவங்களின் மூலம் நம்பிக்கை கொள்ளக் கூடியதாகவுள்ளது.

எங்கள் மீது இனப்படுகொலை செய்து அந்த ராஜபக்ச சொந்த மக்களாலேயே துரோகி என்றும் கள்ளன் என்றும் கொலை காரன் துரோகி என்றும் தூற்றப்பட்ட பதவியில் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட சம்பவம் கண் முன்னே நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்சவும் விரைவிலேயே வீட்டுக்கு செல்ல வேண்டும் என்பதே எமது விருப்பம்.

அவர் வீட்டுக்குச் செல்வது மட்டுமல்ல அவர் மேற்கொண்ட இனப்படுகொலைக்காக சர்வதேச சட்டங்களின் முன் நிறுத்தப் பட்டு அவர் தண்டிக்கப்பட வேண்டும் என்பது தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

அந்த வகையில் தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டிய காலம் சிங்கள பௌத்த பேரினவாதம் பலவீனமடைந்திருக்கின்றது தங்களுக்குள் மோதிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் இந்த ஒற்றையாட்சிக்குட்பட்ட 13வது திருத்தச் சட்டத்தின் பிடியில் இருந்து வெளிவந்து ஒற்றையாட்சியை நிராகரித்து ஒரு தீர்வுக்காக ஒன்றுபட்டு தமிழ் தலைமைகள் இந்தியாவினுடைய கூலிகளாக இருக்கின்ற தமிழ் தலைமைகள் இந்தியாவுக்காக 13வது திருத்தச்சட்டத்தை முன்னெடுக்காது கை விட்டு ஒதுங்க வேண்டும்.

தமிழ் மக்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கரத்தை பலப்படுத்தி சர்வதேச நீதியினைப் பெற்றுக் கொள்வதற்கும் தமிழ் மக்களின் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கும் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்.

தமிழ்மக்கள் மீது சிறீலங்கா அரசாங்கம் இனப்படுகொலை மேற்கொண்டு இன்றுடன் 13 வருடங்கள் நிறைவு பெறு கின்றது.

கோத்தபாய மகிந்த அரசானது தமிழ் மக்கள் மீது மாபெரும் இனப்படுகொலையினை அரங்கேற்றியிருந்தது. மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகவும் அவரது சகோதரரும் பாதுகாப்புச் செயலராகவும் இருந்து இனப்படுகொலை அன்று அரங்கேற்றப் பட்டது.

அது ஒரு மாபெரும் மனிதப் படுகொலை நடந்து முடிந் திருக்கிறது. அது உட்பட கடந்த74ஆண்டுகளாக தமிழ் மக்கள் மீது சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கமானது இனப் படுகொலையினை கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

இன்றிலிருந்து 18ஆம் தேதி வரை இனப்படுகொலை வாரம் நடைபெறுகின்றது. இன்று அந்த இனப்படு கொலைவாரம் ஆரம்பிக்கின்றது. 18 ஆம் திகதி இனப்படுகொலை நினை வேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ளது.

இனப்படுகொலைகளை ஆவணப்படுத்தி காட்சிப்படுத்துகின்ற காட்சிப்படுத்தல் ஒன்றை இன்று ஆரம்பித்து வைத்திருக் கின்றோம்.

நல்லூரில் தியாகி தீபம் திலீபனின் நிரைவிடத்தில் காட்சி படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த காட்சிப்படுத்தலின்நோக்கம் எங்களுடைய இனத்தின் மீது சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த இனப்படுகொலை வரலாற்றை எங்களுடைய இளைய சந்ததியினருக்கு கொண்டு செல்வதும் இந்த இனப்படு கொலைக்கு ஒரு நீதிக்காக நாங்கள் தொடர்ந்தும் போராட வேண்டும் என்பதும் அதற்கு தமிழர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு தொடர்ச்சியாக குரல் கொடுக்க வேண்டும் என்பதும் இந்த இனப்படுகொலையை மேற்கொண்ட மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட சிங்கள ஆட்சியாளர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு அவர்கள் தூக்கிலிடப்பட வேண்டும். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களுடைய நீதிக்கான போராட்டத்தின் முக்கியமான பொருளாகும் என்றார்

தமிழினப் படுகொலையை நினைவுகூரும் வகையில் 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' நல்லூரில் வழங்கப்பட்டது!

மே 12, 2022





மே-18 முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு தமிழினப் படுகொலையை நினைவுகூரும் வகையில் நல்லூரில் "முள்ளிவாய்க்கால் கஞ்சி" காய்ச்சி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் அமைப்பின் யாழ். மாவட்ட உறவுகளால் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயத்திற்கு முன்பாக "முள்ளிவாய்க்கால் கஞ்சி" காய்ச்சி வழங்கப்பட்டது.

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் முதலாவது நாள் நிகழ்வுகள் இன்று முன்னெடுக்கப்பட்டு வருவதையடுத்து நல்லூரில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் அமைப்பின் யாழ். மாவட்ட உறவுகளால் "முள்ளிவாய்க்கால் கஞ்சி" காய்ச்சி வழங்கப்பட்டது.

நல்லூர் தியாக தீபம் திலீபன் நினைவாலய பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளால் "முள்ளிவாய்க்கால் கஞ்சி" வழங்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டு. கொக்கட்டிச்சோலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரம்!

மே 13, 2022

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வாரம் இன்று ஆரம்பித்துவைக் கப்பட்டது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலை நடைபெற்ற மகிழடித்தீவு சந்தியில் உள்ள கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவுத்தூபி முற்றத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரம் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது கிழக்கில் நடைபெற்ற படுகொலைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் முள்ளிவாய்க்கால் பேரவல காட்சிகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முள்ளிவாய்க்கால் உட்பட அனைத்து பகுதிகளிலும் இடம்பெற்ற படுகொலைகளில் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.



முள்ளிவாய்க்கால் கஞ்சிகள் மக்களுக்கு வழங்கப் பட்டதுடன் முள்ளிவாய்க்கால் தொடர்பில் கருத்துகளும் பரிமாறப்பட்டன.இந்த நிகழ்வில் கோறளைப்பற்று பிர தேசசபை உறுப்பினர் சேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்நாட்டுக்கு மீண்டும் மீண்டும் கடன் களை வழங்கி தமிழினத்தை அழிப்பதற்கு சர்வதேச சமூகம் உதவக்கூடாது. என்பதுடன் இன அழிப்புகான நீதி விசாரணைக்கான அழுத்தங்களை சர்வதேசம் வழங்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

தென்தமிழீழம் அம்பாறையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

மே 13, 2022

'கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்' என்ற தலைப்பில் முள்ளி வாய்க்கால் அவல நிலை குறித்து அதனை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க் கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (மே -12) அம்பாறை – திருக்கோவில் பகுதியில் இடம்பெற்றது.





சிங்கள படைகளால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான பேரணி இன்று (15.05.2022) தென் தமிழீழம் பொத்துவிலில் ஆரம்பம்!

மே 14, 2022

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான பேரணி நாளை பொத்துவிலில் (15) ஆரம்பம்.



நாளை 2022.05.15ம் திகதி பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான நடைபவணி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் எற்பாட்டில் முன் னெடுக்கப்படவுள்ளது. இந்தப் பேரணியில் அனைத்து உறவுகளும் கலந்து கொண்டு வலுசேர்க்குமாறு அழைக் கின்றோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க அம்பாறை மாவட்டத் தலைவி த.செல்வராணி தெரிவித்தார்.



இன்று மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந் திப்பிக் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர் பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தினை அனுஸ்டிக்கும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரம் அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது. நாளை 2022.05.15ம் திகதி பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரை யான நடைபவணி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் எற்பாட்டில்தொ முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பொது அமைப்பினர், சர்வமதப் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனை வரும் தங்கள் ஆதரவினை தரவுள்ளார்கள். எனவே பொதுமக்களும் இந்நடைபவணிக்கு தங்கள் முழுமை யான ஆதரவைத் தருமாறு எட்டு மாவட்டங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரி உறவுகள் சார்பில் கரம் கூப்பி அழைக்கின்றோம்.

நாளைய தினம் காலை 09.30 மணிக்கு பொத்துவில்லில் இருந்து எமது நடைப் பேரணி தொடங்கி திருக்கோவில், அக்கறைப்பற்று. கல்முனை, களுவாஞ்சிக்குடி ஊடாக மட்டக்களப்பு கல்லடிப்பாளத்தினை வந்தடைந்து அங்கு



முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்து அருந்தலுடன் நிறை வடையும், மறுநாள் 2022.05.16ம் திகதி மட்டக்களப்பில் இருந்து ஆரம்பித்து திருகோணமலை மாவட்டத்தைச் சென்றடையும், 2022.05.17ம் திகதி திருகோண மலையில் இருந்து முல்லைத்தீவு வரை சென்று மறுநாள் 2022.05.18ம் திகதி முள்வாய்க்காலில் எமது நடை பவணி சென்றடைந்து அங்கு உயர்நீத்த எமது உறவுக ளுக்காக சுடரேற்றி எமது நினைவு நாளை முடித்து வைப்போம்.

அதுமட்டுமல்லாது இதே விதத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்தும் இவ்வாறானதெரு நடைபவணி மேற் கொள்ளப்பட்டு அவர்களும் முள்ளிவாய்க்காலை வந்தடை வார்கள்.

எமது உறவுகளின் இறப்பினை மறவாது எமது இளை ஞர்கள், உறவுகள் இந்த மண்ணிலே நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காகவே நாங்கள் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். காணாமல ஆக்கப்பட்டது எங்களது உறவுகள், உயிர்கள். அவர்களை மறப்பதற்கோ கிழத்தெறிவதற்கோ அவர்கள் போப்பர் துண்டுகளும் அல்ல கசக்கி எறிவதற்கு வேறு பொருட் களும் அல்ல விலைமதிப்பற்ற உயிர்களையே நாங்கள் தொலைத்து நிற்கின்றோம்.

இறுதி யுத்தத்தின் போது ஒரு இலட்சத்து நாற்பத் தோழாயிரம் உறவுகளை நாங்கள் இழந்து நிற்கின்றோம். இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நடக்கக் கூடாது. எமது உறவுகளுக்கு இவை மீள இடம்பெறக் கூடாது.

எனவே நாளை நடைபெறவுள்ள இந்தப் பேரணியில் அனைத்து உறவுகள், சர்வமதப் பிரதிநிதிகள், பல்கலைக் கழக மாணவர்கள், பொது அமைப்பினர், ஊடக வியலாளர்கள் என அனைவரும் கட்டாயம் கலந்து கொண்டு எமது போராட்டத்திற்கு வலுசேர்த்து அந்த இறுதி அஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவித்தார்.

கனடிய செய்திகள்

ஐந்து தமிழர்கள் ஒன்ராறியோ மாகாண தேர்தல் களத்தில்

ஏப்பிரல் 13, 2022

யூன் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் ஐந்து தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.





ஒன்ராறியோ மாகாண தேர்தலில் புறொகிறசிவ் கென்சவேடிவ் கட்சியின் சார்பில் ஸ்காபரோறூஜ்பாரக் (Scarborough-RougePark) தொகுதியில் விஜய் தனிகாசலமும் மார்க்கம் தோன்கில் தொகுதியில் (Markham—Thorn-hill) லோகன் கணபதியும் போட்டியிடுகின்றனர். இவர்கள் இருவரும் ஏற்கனவே ஒன்ராறியோ சட்டமன்றில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் என்பது குறிப்படத்தக்கது.



லிபரல் கட்சியின் சார்பில் அனிதா ஆனந்தராஜன் ஸ்காபரோ வடக்கு (Scarborough North) தொகுதியில் போட்டியிடுகிறார்.

புதிய ஜனநாயக்கட்சியின் சார்பில் மார்க்கம் யூனியன்வில் (Markham Unionville) தொகுதியில் வேட்பாளராக செந்தில் மகாலிங்கமும் ஸ்காபரோ மத்தியில் (Scarborough Center) தொகுதியில் நீதன் சானும் போட்டியிடுகின்றனர்.





மொத்தம் ஐந்து தமிழர்கள் வேட்பாளர்களாக ஒன்ராறியோ மாகாண தேர்தலில் அறிவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் வெற்றியடைய வாழ்த்துக்கள்.

உக்ரைனுக்கு சென்றார் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ரூடோ

மே 08, 2022

"கொடூரமான போர்க்குற்றங்களுக்கு புடின் (Vladimir Putin) தான் பொறுப்பு" என்று ஜஸ்டின் ரூடோ (Justin Trudeau) கூறினார்.

கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடோ உக்ரைன் மற்றும் ரஷ்யப் படைகளுக்கு இடையிலான கடுமையான சண்டை யால் அழிக்கப்பட்ட நகரமான இர்பினை நேற்று பார்வை யிட்டார்.

இர்பின் மேயர் ஒலெக்சாண்டர் மார்குஷின் (Alexander Markhushin) இது குறித்து தனது அதிகாரப்பூர்வ சமூக ஊடகத்தில் படங்களை வெளியிட்டார்.

அவர் கூறியதாவது, "ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்கள் எங்கள் நகரத்திற்குச் செய்த அனைத்து பயங்கரங்களையும் தனது கண்களால் பார்க்க கனடா பிரதமர் இர்பினுக்கு வந்தார்" என்று பதிவிட்டுள்ளார்.

ஜி7 நாடுகள் கூட்டத்திற்குப் பிறகு உக்ரைன் தலைவ ருடனான செய்தியாளர் சந்திப்பில் ரூடோ கூறியதாவது "கொடூரமான போர்க்குற்றங்களுக்கு விளாடிமிர் புடின் தான் பொறுப்பு என்பது தெளிவாகிறது.

ரஷ்யாவின் சட்டவிரோதப் போரின் கொடூரத்தை நான் நேரடியாகக் கண்டேன். நமது வெற்றிக்குப் பின், உக் ரேனிய நகரங்களின் புனரமைப்புக்கு எங்கள் நாடு களுக்கு இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்பு இருக்கும் என்பதை நாங்கள் நம்புகிறோம்.

"கனடா கீவில் இன்று மீண்டும் செயல்பாடுகளை தொடங்கியுள்ளது" என்று கூறினார். புச்சாவில் நடந்ததைப் போல, இர்பின் நகரில் அப்பாவி குடிமக்களுக்கு எதிராக ரஷ்யப் படைகள் அட்டூழியங்கள் செய்ததாக உக்ரைன் குற்றம் சாட்டுகிறது.



இந்நிலையில் நூற்றுக்கணக்கான பொதுமக்களைக் கொன்றதாக ரஷ்யப் படைகள் குற்றம் சாட்டப்பட்ட இர்பினுக்கு சென்று ஐநா பொதுச்செயலாளர் அன் டோனியோ குட்டெரஸ் (Antonio Guterres) பார்வையிட்டார்.

அதே போல, பல மேற்கத்திய அரசியல் தலைவர்கள் சமீபத்தில் இர்பினுக்கு பயணம் செய்துள்ளனர்.

வருமான வரி சேவை Income Tax preparation
100% FREE For Health Care Workers
50% OFF For Frontline Workers & First Time Filers
SCAN ME
File Your TAXES Remotely www.etaxcan.ca
Walk-In & Online Services Are Available - 7 Days 9am to 9pm
etaxcan
ETAXCAN FINANCIAL CORP.
10 MILNER BUSINESS COURT, 3RD FLOOR
SCARBOROUGH ON M1B 3C6
416-869-8265

146, 679

Killed by Sri Lanka Government

Not Just War Crime, It's Genocide

Mr. Prime Minister, Don't Turn your Back!

RECOGNIZE

TAMILEELAM GENOCIDE

தமிழக செய்திகள்



இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலையால் கைக்குழந்தையுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5பேர் அகதிகளாக இராமேஸ்வரத்துக்கு வருகை

மே 02 2021

இராமேஸ்வரம் அடுத்த சேரான்கோட்டை கடற்கரை பகுதியில் 2 மாத கைக்குழந்தை மற்றும் ஒரு சிறுமி உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 நபர்கள் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, பால், பெட்ரோல், டீசல் உள்ளிட்ட பொருட்கள் விலை கிடுகிடு என உயர்ந்து மக்கள் வாழ்வதற்கே வழியில்லாமல் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்த நிலையில் ஆளும் அரசுக்கு எதிராக இலங்கை மக்கள் வீதியில் இறங்கி கடுமையான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதையடுத்து இலங்கையில் வாழ வழியின்றி ஈழத் தமிழர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு வருவது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

இந்த நிலையில் ஏற்கனவே 21 குடும்பத்தைச் சேர்ந்த 75 பேர் வந்துள்ள நிலையில் தற்போது இராமேஸ்வரம் அடுத்த சேரான்கோட்டை கடற்கரைப் பகுதியில் 2 மாத கைக்குழந்தை மற்றும் ஒரு சிறுமி உட்பட ஒரே குடும்பத் தைச் சேர்ந்த 5 பேர் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் மற்றும் கியூ பிரான்ச் போலீசார் அகதிகளாக வந்த ஈழத் தமிழரிடம் உரிய விசாரணை நடத்துவதற்காக மண்டபம் மரைன் காவல் நிலையத் திற்கு அழைத்துச் சென்று பின்னர் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட உள்ளனர்.

தமது ஒரு மாத சம்பளத்தை இலங்கை உதவிக்கு வழங்கவுள்ள தமிழ்நாட்டு எம்.பி.க்கள்!

மே 05, 2022

இந்திய நாடாளுமன்றத்தில் உள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்களது ஒரு மாத ஊதியத்தை, பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவியாக வழங்குவார்கள் என்று அக்கட்சி இன்று வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

இந்த நோக்கத்துக்காக ஏற்கனவே ஒரு கோடி ரூபா அறிவிக்கப் பட்டுள்ள நிலையில், இலங்கை மக்களுக்கு உதவ நன்கொடை வழங்குமாறு ஆளும் திமுகவின் தலைவரும், தமிழக முதல் வருமான மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



திமுகவின் லோக்சபா மற்றும் ராஜ்யசபா எம்.பி.க்கள் தங்களது ஒரு மாத சம்பளத்தை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்குவார்கள் என அக்கட்சியின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்பில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவ, உணவு போன்ற அத்தியாவசிய பொருட்களை வாங்கவும், அவற்றை இலங்கைக்கு அனுப்பவும் தமிழக அரசுக்கு நன்கொடை அளிக்குமாறு முதல்வர் ஸ்டாலின் கடந்த செவ்வாய்க்கிழமை வேண்டுகோள் விடுத்தமை குறிப் பிடத்தக்கது.

திருச்சி சிறப்பு முகாமில் இலங்கைத் தமிழர் மரத்தில் ஏறி போராட்டம்!

மே 05, 2022

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர் பாண்டியன் என்பவர் மரத்தில் ஏறி போராட்டம் செய்தார்.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றது உள்ளிட்ட குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் மற்றும் வெளிநாட்டினர் திருச்சி சிறப்பு முகாமில் உள்ளனர். இவர்களில் இலங்கைகைச் சேர்ந்த கெட்ட யான் பாண்டியன் என்பவரும் உள்ளார்.

இவரது குடும்பத்தினர் நாமக்கல்லில் உள்ளனர். இந்நிலையில், நாமக்கலில் இருந்து பாண்டியனை சந்திக்க சிறப்பு முகாமிற்கு பாண்டியனின் மனைவி அனு இன்று சென்றுள்ளார். சிறை வளாகத்தின் நுழைவாயிலில் பாண்டியன் மனைவியை போலீசார் தகாத வார்த்தைகளில் திட்டியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இது குறித்து அனு, தனது கணவர் அனுவிற்கு தகவல் சொல் லியுள்ளார். இதைக் கண்டித்து, சிறப்பு முகாமில் உள்ள 50க்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது, பாண் டியன் திடீரென சிறை வளாகக்த்தில் உள்ள மரத்தில் ஏறி, உச்சிக்கு சென்று அமர்ந்து கொண்டார். போலீசாருக்கு எதிராக முழக்கமிட்டு, போராட்டம் நடத்தினார்.



ஒரே குடும்பத்தை சேர்ந்த 05 இலங்கை தமிழர்கள் தமிழகத்துக்கு அகதிகளாக!

மே 02, 2022

இரண்டு மாத கைக்குழந்தையுடன் ஒரே குடும்பத்தை சேர்ந்த மேலும் 5 இலங்கை தமிழர்கள் தமிழகம் வந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக வவுனியா மாவட்டத்தில் இருந்து ஒரே குடும் பத்தைச் சேர்ந்த இரண்டு மாத கைக்குழந்தை உட்பட ஐந்து பேர் அகதிகளாக இராமேஸ்வரம் அடுத்த சேராங்கோட்டை கடற்கரைப் பகுதியில் வந்து இறங்கி உள்ளனர்.

இலங்கை தமிழர்களை மீட்ட மெரைன் போலீசார் மண்டபம் மெரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற் கொண்டுவருகின்றனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22ம் தேதியில் இருந்து இன்று வரை 80 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளனர்.



ஈழத் தமிழர்களுக்குத் தேவை சோறு அல்ல விடுதலைப்பெற்ற தாய்நாடு முதலமைச்சர் தனது நிலைப்பாடினை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

வ. கௌதமன் –தமிழ்ப் பேரரசு கட்சி

மே 06, 2022

2009 முள்ளிவாய்க்கால் மண்ணில் உலகம் இதுவரை கண்டி ராத, உலகத்தால் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகளை யும், ரசாயனக் குண்டுகளையும், பிஞ்சுப் பிள்ளைகள், பெண்கள் வயோதிகர்கள் என வித்தியாசம் பார்க்காமல் வீசி, இரத்த சகதியிலாழ்த்திய ராஜபக்சே, கோத்தபயாவின் குரூர கூட்டத்திற்கு உலகத்தாரோடு போட்டி போட்டுக்கொண்டு தமிழ் நாடு அரசும் பொருளாதார உதவி செய்வதென்பது, கடும் கண்டனத்திற்குரியது. **ஈழத்தமிழர்களுக்கு தேவை சோறு அல்ல, விடுதலைப் பெற்ற தாய் நாடு என்பதனை உறுதிசெய்து தமிழ் நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக தீர்மானம் இயற்ற வேண்டும்** எனவும், இலங்கை மக்களுக்காக பொருளாதார உதவி செய்வதென்பது ஒரு போதும் அங்கு வாழும் ஈழத் தமிழர்களுக்கு அது போய் சேராது என்கிற பேருண்மையையும், உணர்ந்து தனது நிலைப்பாட் டினை மறு மறுபரிசீலனை செய்யும்படி, தமிழ்ப் பேரரசு கட் சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

2000 இந்து கோயில்களை இடித்த வெறிபிடித்த ராஜபக்சே கூட்டத்திற்கு இந்தியாவும், இறுதி யுத்தத்தை நிறுத்தும்படி துள்ளத் துடிக்க 20க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டுத் தமிழர்கள், தலையில் எண்ணெயை ஊற்றிக் கொண்டு எரிந்து கரிந்து சாம்பலானதோடு மட்டுமல்லாமல், இதுவரை மூன்றரை லட்சத் திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கைக்கு தமிழ்நாடு அரசும் உதவி செய்கிறது என்றால், இதற்குப் பெயர் ஈரம் என்று ஒரு போதும் எடுத்துக்கொள்ள முடியாது. சுனாமி காலகட்டத்திலேயே உலக நாடுகள் கொடுத்த நிதியினை மூன்று பங்கு நீரால் சூழப்பட்டு பேரழிவில் பெருமள வில் சிக்கிய ஈழத்தமிழர்களுக்கு செலவழிக்காத சிங்களக் கூட்டமா, இப்பொழுது நீங்கள் கொடுக்கின்ற பொருளாதாரத்தில் உதவி செய்யப் போகிறது? தமிழ்நாட்டிலிருந்தும் கொடுக்கிற பணத்தில், அந்தக் கொலைகார கூட்டம் தங்களது கட்டமைப்பை மீளெழுப்பி மீண்டும் தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து, இந்து கோயில்களை அடித்து நொறுக்கி தமிழ் ஈழத் தமிழர்களை கொன்று புதைத்து, கோரத்தாண்டவம் ஆடுமே தவிர, ஒரு போதும் அது அறம் காக்காது. மாறாக 2009ல் திமுகவின் மீது ஏற்பட்ட கறையை விடவும் மீண்டும் பிரம்மாண்டமான இன் னொரு கறையை சுமக்க வேண்டி வரும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன். இடையில் வேறு காமாட்சி என்கிற ஒரு கோமாளி எங்களின் வாரிசுகள்தான் சிங்களர்கள் என்றும்,



எங்களின் உறவினர்தான் இப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் என்றும், பினாத்தி கொண்டிருப்பது தமிழர் களுக்குள் உங்களைப் பற்றிய மாபெரும் உறவுச் சிக்கலை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் தாங்கள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த ராஜபக்சேவை, சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும், தனித்தமிழீழமே ஒரே தீர்வு என தீர்மானம் நிறைவேற்றினார். ஆனால் நீங்கள் இலங்கைக்கு பொருளாதார உதவி செய்வதாக அறிவித்து, அதற்கு இலங்கை அதிபர் ராஜபக்சே நன்றி சொல்லி தமிழில் கடிதம் எழுதுவதென்பதெல்லாம் தமிழினம் தாங்கிக் கொள்ள முடியாத ஒரு மாபெரும் தலைக்குனிவு என்பதையும் தங்கள் பார்வைக்கு கொண்டு வருகிறேன்.

முதல்வர் அவர்கள் உடனடியாக தனது நிலைபாட்டை மறு பரிசீலனை செய்ய வேண்டும். கடந்த 40 ஆண்டுகளாக போரினால் மூன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட எம் தமிழீழ உறவுகள் கொல்லப்பட்டது போக, பல்லாயிரக்கணக்கில் பட்டினி சாவினாலும் செத்திருக்கிறார்கள். அப்போ தெல்லாம் ஈரம் கசியாத நாம் இன்று சிங்கள மக்களுக்கும் சேர்த்து உதவ நிற்பதென்பது நேர்மையற்றது. முற்றாக அழிந்த நிலையில் எவ்வகையிலும் மீளமுடியாமல் கிடக்கும் எம் தமிழினத்திற்கு இனியும் எப்பொழுதுதான் நேர்மையோடும், உண்மையோடும் நாம் நிற்கப் போகிறோம்? போரின் போது ராணுவத் தால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலங்கள் இதுவரை மீளப் பெறப்பட வில்லை. தமிழர் கோயில்கள் இடிக்கப்பட்டு புத்த விகாரைகள் முளைத்துக் கொண்டே இருக்கின்றன. தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் இன்றும் நடந்து கொண்டேதான் இருக்கின்றது. ராணுவ அச்சுறுத்தலில் இருந்து எங்கள் வீட்டுப் பெண்கள் இன்னும் முற்றாக விடுபடவில்லை. யுத்தம் நடந்து 12 ஆண்டுகள் கடந்த நிலையிலும், தமிழர்களுக்கென்று ஒரு சிறிய அளவில் கூட விடியல் இல்லை என்றால் உலகம் முழுக்க 12 கோடி தமிழர்கள் வாழ்ந்து என்ன பயன்? தமிழர்களுக்கென்று தமிழ்நாடு அரசொன்று இருந்து என்ன பயன்?

மீண்டும் சொல்கிறேன்.

எம் தமிழீழ மக்களுக்கு தேவை திண்பதற்கு சோறு அல்ல. சுயமரியாதையோடு தலைநிமிர்ந்து வாழ்வதற்கான விடுதலை பெற்ற தனித் தமிழீழ நாடு. வலியோடு சேர்ந்த இயல்பரிந்து மே-10 இக்கூட்டத் தொடருக்குள்ளாகவே தீர்மானம் இயற்றி, இந்திய ஒன்றிய அரசுக்கு நெருக்கடிகள் தருவதோடு 50க்கும் மேற்பட்ட எம்பிக்கள் இதற்கான தீர்வை உறுதிசெய்ய வேண்டுமென்றும், இது ஒன்றே நடந்து முடிந்த அனைத்து பேரிழப்புகளுக்கெல்லாம் ஒரே தீர்வாக அமையும் என்றும் உரிமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வ. கௌதமன்
பொதுச் செயலாளர்
தமிழ்ப் பேரரசு கட்சி
"சோழன் குடில்"
06.05. 2022



உலக செய்திகள்

கியூபா தங்கு விடுதியில் வெடி விபத்தில் 22 பேர் பலி 74 மேல் படுகாயம்!

மே 07, 2022

கியூபா நாட்டின் தலைநகர் ஹவானாவில் சரடோகா என்ற நட்சத்திர தங்குவிடதியில் உள்ளது. 86 அறைகள் கொண்ட இந்த தங்குவிடுதியினை புதுப்பிக்கும் பணி நடந்து வந்தது.

இந்த நிலையில் தங்குவிடுதியில் பயங்கர சத்தத்துடன் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் தங்குவிடுதியில் கட்டிடம் சேதமடைந்து இடிந்து விழுந்தது. இயற்கை எரிவாயு செல்லும் குழாயில் கசிவு ஏற்பட்டு வெடித்துச் சிதறியது





தெரிய வந்தது.

தங்குவிடுதியில் புதுப்பிக்கும் பணி நடந்ததால் அங்கு சுற்றுலாப் பயணிகள் யாரும் தங்கவில்லை. ஆனால் சக்திவாய்ந்த வெடி விபத்தால் தங்குவிடுதியை சுற்றியுள்ள கட்டிடங்களும் சேதமடைந்தன. விபத்து குறித்து தகவ லறிந்த மீட்புக்குழுவினர் அங்கு விரைந்து சென்று, இடிபாடுகளில் சிக்கி படுகாயம் அடைந்த பலரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். இறந்தவர்களின் உடல் கள் மீட்கப்பட்டு பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைக் கப்பட்டன.

இன்று அதிகாலை நிலவரப்படி 8 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் அடுத்தடுத்து உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், இன்று காலை நிலவரப்படி 14 குழந்தைகள் உள்பட 22 பேர் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. 74 பேர் மேல் காயமடைந்துள்ளனர். அவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். மீட்பு பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

இது குறித்து ஜனாதிபதி மிகுவல் டயஸ் கேனல் கூறும் போது, 'இது குண்டு வெடிப்போ அல்லது தாக்குதல் சம்பவமோ கிடையாது. இது ஒரு சோகமான விபத்து. ஹோட்டலை சுற்றியுள்ள கட்டிடங்களில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர்' என்றார்.

இந்த விபத்து தொடர்பாக கியூபா டி.வி. சேனல் கூறும் போது, லொறியில் இருந்து தங்குவிடுதிக்கு எரிவாயு விநியோகித்த போது கசிவு ஏற்பட்டு விபத்து ஏற்பட்டதாகத் தெரிவித்தது.

ஊடக சுதந்திர தர வரிசையில் 146 ஆம் இடத்தில் இலங்கை!

மே 05, 2022

உலக ஊடக சுதந்திர தர வரிசையில் இலங்கை 19 இடங்கள் பின்தங்கியுள்ளது.

செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, உலக ஊடக சுதந்திர சுட்டெண்ணில் இலங்கை 146 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

உலகில் உள்ள 180 நாடுகளின் அடிப்படையில் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளது, இதில் நோர்வே முதலிடத்தில் உள்ளது.

இரண்டாம் இடம் டென்மார்க்கிற்கும், மூன்றாம் இடம் சுவீடனுக்கும் கிடைத்தது.

2021ஆம் ஆண்டில், உலக பத்திரிகை சுதந்திர சுட் டெண்ணில் இலங்கை 127ஆவது இடத்தில் இருந்தது. 2020 இல் 127ஆவது இடத்திலும் 2019 இல் 126ஆவது இடத்திலும் 2018 இல் 131ஆவது இடத்திலும் இருந்தது.

இந்த ஆண்டு, உலக ஊடகக் குறியீட்டில் இந்தியா 150ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 162ஆவது இடத்திலும், மியான்மர் 176ஆவது இடத்திலும் உள்ளன.



உலகத் தொழிலாளர் நாள்
மே 01







"இரண்டு மாதங்களாக சூரிய வெளிச்சத்தைப் பார்க்கவில்லை"

மே 02, 2022

யுக்ரேனின் தெற்கு துறைமுக நகரமான மேரியோபோலில் ரஷ்யப்படையினரால் முற்றுகையிடப்பட்ட அஸவ்ஸ்டால் இரும்பு ஆலையிலிருந்து பல வாரங்களுக்குப் பின்னர் டஜன் கணக்கிலான குடிமக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இரு மாதங்களாக தான் சூரிய வெளிச்சத்தைப் பார்க்க வில்லை எனவும், தான் உயிர்பிழைக்க மாட்டேன் என எண்ணியதாகவும், அங்கிருந்து வெளியேறிய பெண் ஒருவர் தெரிவித்தார்.

ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கிராமத்திற்கு டஜன் கணக்கான பொதுமக்கள் வந்துள்ளதாக ரஷ்யா தெரிவித் துள்ளது.

மேலும், அதிக எண்ணிக்கையிலான மக்கள் யுக்ரேன் கட்டுப்பாட்டில் உள்ள ஸாப்போரீஷியாவுக்கு வந்துகொண் டிருப்பதாக, யுக்ரேன் அதிபர் வொலாடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்தார்.

"100 பேர் அடங்கிய முதலாவது குழுவினர் யுக்ரேன் கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்துகொண்டிருக்கின்றனர்" என அவர் ட்வீட் செய்துள்ளார்.

"அவர்களை திங்கள்கிழமை (இன்று) ஸாப்போரீஸியா



வில் சந்திப்போம். எங்கள் குழுவினருக்கு பாராட்டுகள்! அந்த ஆலையில் உள்ள மற்றவர்களையும் வெளியேற்ற ஐநாவுடன் இணைந்து அக்குழு பணியாற்றிவருகிறது" என அவர் தெரிவித்தார்.

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

Allstate.
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316




BOROS CANADIAN
PAPER CONVERTING INC.





















Alan Maniam 647 299 2450
Director

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com



தமிழின அழிப்பின் நினைவாக மே 18 அன்று ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’ உண்போம்!






நீண்ட இனவழிப்புப் போரின் இறுதி கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல்மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காக பட்டினி கிடந்து பதுங்குகுழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான்.

மாத்தளன், வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்த போது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள் தான் கஞ்சிக் கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறதளவு பால், சீனி என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு லட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்த கஞ்சியை “முள்ளிவாய்க்கால் கஞ்சி“ என்ற பெய ருடன் அந்த மாபெரும் அவலத்தின் நினைவை வருடாந்தம் உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்கு கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து சீயோனுக்கு திரும்பினார்களோ அதுபோல் எம்மினத்தின் வீர மும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக்கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பை தக்கவைக்கும் நினை வாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே 18 இல் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!

◆ அன்றைய நாளில் எமது வீடுகளில் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந் ததிக்கு கடத்துவோம்!

◆ ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக்கொட்டில் அமைத்து “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ அனை வருக்கும் வழங்கி உணர்வுகளைப்பகிர்ந்து கொள்வோம்!

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியே எம்மக்களுக்கான மீட்சியின் வழியென உணர்ந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தலை முன்னெடுப்போம்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்



இயலாமை ஏற்படும்போது ஒடுக்குமுறையாளர் வெகுசனங்கள்மீது இலக்கு வைக்கின்றனர்

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



இனவாரியாக எமது கழுத்தைத் திருகி எம்மைத் துன்பத்தின் எல்லைக்குத் தள்ளி, எமது உறுதிப்பாட்டை உடைத்து, எமது சுதந்திரவேட்கையைக் கொன்று, எம்மை மண்டியிடச் செய்வதுதான் எதிரியின் பிரதான நோக்கம். தமிழினத்தின் தேசிய ஆன்மாவை ஆயுத பலாத்காரத்தின் மூலம் அடிமைகொள்வதே எதிரியின் திட்டம். ஒடுக்குமுறையாளன் தனது ஆற்றாத் தன்மையால், தனது கையாலாகாத் தனத்தால், தனது பல வீனத் தால் வெகுசனத் திற்கு எதிராகத் தனது அடக்குமுறையை முடுக்கிவிடுகிறான். இது உலகளாவிய வரலாற்று உண்மை. முதிர்ச்சிபெற்று முன்னேற்றம் கண்டு வரும் எந் தவொரு விடுதலைப் போராட் த் திலும், எதிரியானவன் தனது இயலாத் தன்மையால் வெகுசனம் மீது மூர்க்கமாகப் பழிதீர்த்துக் கொள்ளத் தயங்குவதில்லை. விடுதலைப்போராட்டத்திற்கு வெகுசன ஆதரவும் பங்களிப்பும் பெருகும் போது, வெகுசனத் தி லிருந் து விடுதலைப் போராளிகளை இனங் காண முடியாத போது ஒடுக்கு முறையாளன் வெகுசனத்திற்கு எதிராகத் திரும்புகின்றான். சிங்கள இனவாத அரசம் இந்த இறுதிக் கட்டத்திற்குத் தள்ளப்பட்டதால்தான் அப்பாவிகளாகிய உங்கள் மீது அதர்ம யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

நாம் தர்மத்திற்காக, தன்மானத்திற்காக, சுதந்திரத்திற்காக ஆயுதம் ஏந்தியிருக்கிறோம். எமது இலட்சியப் பயணமும் அதற் காக நாம் புரிந்துவரும் உன்னத தியாகங்களும்



உங்களுக்குப் புரியும். ஆதலால் தான் நீங்கள் எம்மை அரவணைத் துக்கொள்கிறீர்கள், ஆதரவு அளிக் கிறீர்கள். எமக்குப் புகலிடம் தரு கிறீர்கள், நாம் மக்கள் சமுத்திரத்தில் சங்கமமாகியுள்ளோம். இதனால் பொதுமக் களாகிய உங் களிட மிருந்து எம்மைப் பிரித் துவைக்கும் தந் திரோபாயங் கள் எதுவும் பயனளிக் கவில் லை. இதனால் விரக்தியுற்று ஆத்திரங்கொண்ட சிங்கள இனவாத அரசு வெகு சனம்மீது போர் தொடுத்திருக்கிறது.

1984 ஆம் ஆண்டு இன்னாறய போர்ச் சூழலைப்பற்றிய தலைவரின் விளக்கம் இன்னும் பொருத்தப்பாடாகிறது.

(தேசியத் தலைவரின் "எனது மக் களின் விடுதலைக் காக..." கருத்துத் தொகுப்பு நூலிலிருந்து)

TAX ANALYST

ACCOUNTING | BOOKKEEPING | & MORE



- Affordable and Reliable Services
- Experienced Accountants
- Presonal & Corporate Tax
- Tax Planning / Audit Appeal
- HST/GST/WSIB
- Bookkeeping & Payroll
- UBER/LYFT Tax Filling

CRB/CERB HELP

OFFICE
416-898-8879

CALL FOR APPOINTMENT
416-838-2826

105Consumers Drive.
Whitby ON L1N 1C4

115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6

www.taxanalyst.ca
taxmatters@kannantax.com



சிவஶ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com

HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS

24h EMERGENCY SERVICES

ALL MAKES & MODEL Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer

up to **$5000 REBATE**

0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty



WHY UPGRADE TO TANKLESS?

- Endless Supply of Hot Water
- No Up-front Equipment Cost
- Save Up To 40%
- Save Money & Space Design
- 15 Years Warranty
- No More Risk of Flooding or Explos

KD Navien®
The Leader in Condensing Tankless Technology

FREE ESTIMATE
Sales, Service & Repair

S.Kumar
416-993-8001
geansam@yahoo.com

FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000

PEEL TAE KWON DO
Family Martial Arts

Trusted Local Taekwon - Do Training School




- Over 20+ Years Taekwon-Do Training Experience
- For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
- Top Quality Training for Kids, Teens and Adults

2016 READERS' CHOICE AWARDS



Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571

Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268





கிளிநொச்சி சமர் ஓயாத அலைகள் 02



27.09.1998 அன்று கிளிநொச்சி படைத்தளம் மீது "ஓயாத அலைகள் 2" படை நடவடிக்கை விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையின்போது 2000 வரையான படையினர் கொல்லப்பட்டதுடன் பெருமளவானோர் படுகாயமடைந்தனர். பெருமளவான போர் ஆயுதங்கள், வெடிபொருட்கள், படை ஊர்திகள் என்பன விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன.

கிளிநொச்சிப் பகுதி சிறிலங்கா படைகளின் வல்வளைப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட "ஓயாத அலைகள் - 2" நடவடிக்கையின் வெற்றிக்காக 400 வரையான போராளிகள் தமது இன்னுயிர்களை ஈகம் செய்தனர்.

ஓயாத அலைகள் - இரண்டு என்பது இலங்கை அரசபடையினரால் கைப்பற்றப்பட்டிருந்த முக்கிய நகரமான கிளிநொச்சியை மீளக் கைப்பற்றும் நோக்குடன் தமிழீழ விடுதலைப் புலிகளால் திட்டமிட்டு நடத்தப்பட்ட வலிந்த இராணுவ நடவடிக்கையைக் குறிக்கும்.

பின்னணி

1996 ஆம் ஆண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து விடுதலைப்புலிகள் முற்றாகப் பின்வாங்கியிருந்த நிலையில் வினியோகப் பாதையையும் கைப்பற்றுவதே அரசபடையின் நோக்கமாக இருந்தது. நீண்ட காலமாக நிகழ்ந்த இந்த ஜெயசிக்குறு படை நடவடிக்கை நிகழ்ந்துகொண்டிருந்த போதே, விடுதலைப்புலிகள் கிளிநொச்சி நகரை மீளக் கைப்பற்றத் திட்டமிட்டு ஒரு தாக்குதலைத் தொடுத்தனர்.

பெப்ரவரி 2, 1998 அன்று நடத்தப்பட்ட கிளிநொச்சி நகர் மீதான தாக்குதல் புலிகளுக்கு எதிர்பார்த்தளவு வெற்றி தராதபோதும் குறிப்பிட்ட சில பகுதிகளைக் கைப்பற்றித் தக்க வைத்துக் கொண்டனர். அதன்பின்னும் ஜெயசிக்குறு நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருந்தது. மீண்டும் ஒருதடவை கிளிநொச்சியைக் கைப்பற்றும் நடவடிக்கையை புலிகள் மேற்கொண்டனர். இம்முறை புலிகளுக்கு முழுமையான வெற்றி கிடைத்தது.

தாக்குதல்

செப்டம்பர் 26, 1998 அன்று இந்திய அமைதிகாக்கும் படைக்கு எதிராக அகிம்சை முறையில் உண்ணாநோன்பு இருந்து உயிர்துறந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் லெப்.கேணல் திலீபனின் பதினோராம் ஆண்டு நினைவுநாளின் இரவில் ஓயாத அலைகள் இரண்டு என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளால் தொடங்கப்பட்டது. செப்டம்பர் 27ம் நாள் அதிகாலை தொடக்கம் மூன்றுநாட்கள் நடந்த கடும் சண்டையின் பின் கிளிநொச்சி நகரம் முழுமையாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.



அதேயாண்டு ஜூலையில் முல்லைத்தீவுப் படைத்தளத்தை அரசபடையினரிடமிருந்து ஓயாத அலைகள் - ஒன்று நடவடிக்கை மூலம் கைப்பற்றியிருந்தனர். முல்லைத்தீவு நகரம் பறிபோனதைத் தொடர்ந்து அவ்வாண்டின் இறுதிப்பகுதியில் 'சத்ஜெய' என்று பெயரிட்டு மூன்று கட்டங்களாக பாரிய படைநகர்வைச் செய்து தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுபாட்டிலிருந்த கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியது இலங்கை அரசபடை. அதன்பின்னர் ஜெயசிக்குறு என்று பெயரிட்டு மிகப் பெரிய இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது அரசபடை. தமது கட்டுப்பாட்டிலிருக்கும் வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்குடையில் இருக்கும் நிலப்பகுதியையும் முக்கிய

கிளிநொச்சி நகரம் மீட்கப்பட்டதெப்படி? ஓயாத அலைகள் - 02 கிளிநொச்சி மீட்பு நடந்தது எவ்வாறு?

சிறீலங்கா இராணுவத்தின் 54 ஆவது டிவிசனின் 3 ஆவது படைப்பிரிவு, பிரிகேடியர் உபாலி எதிரிசிங்கவின் தலைமையில் கிளிநொச்சிப் பகுதியை 1996 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் தமது ஆக்கிரமிப்புக்குள்ளாக்கியிருந்தது.

1996-07-26 அன்று ஆரம்பமான 'சத்ஜெய" எனும் இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளுக்கெதிரான இறுதி யுத்தம் எனக்கூறிக் கொண்டு 70 நாட்கள் மூன்று கட்டங்களாக 12 கிலோமீற்றர் பகுதிக்குள் ஆமை வேகத்தில் முன்னேறி 22.09.1996 அன்று கிளிநொச்சியை ஆக்கிரமித்தன சிறிலங்காப்படைகள்.

இவ் ஆக்கிரமிப்பினால் அன்று ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்தனர். 1,279 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே ஆனையிறவு, பரந்தன் படைத்தளங்கள் அமைந்திருந்த நிலையில் சத்ஜெய 60 சதுர கிலோமீற்றர் நிலத்தை விழுங்கிக் கொண்டது.

"ஓயாத அலைகள் 2"

இந்நடவடிக்கைக்கெதிராக புலிகள் 15 நாட்கள் தான் எதிர்சமரை மேற்கொண்டனர். இதன்போது நாளொன்றுக்கு 3,000 எறிகணைகள் என்ற வீதத்தில் புலிகள் மீது எறிகணைகளை ஏவியும், நாளொன்றுக்கு நான்கு தடவைகள் இரண்டு கிபிர் விமானங்கள் குண்டுகளை வீசியும் தாக்குதலை நடாத்தியே ஆக்கிரமிப்பை நடத்தின. இதன்போது சிறிலங்காப் படைகள் பயன்படுத்திய எறிகணைகளின் எடை மட்டும் 500 தொன் எனவும் கிபிர் குண்டுகளின் எடை 325 தொன் எனவும் மொத்தமாக சத்ஜெயவிற்கு 825 தொன் வெடிபொருட்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் ஆய்வு ஒன்று குறிப்பிடுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மரபுவழிச் சமரை வெற்றிகரமாகக் கையாண்ட சமராக இது அமைவதோடு, 120 மில்லி மீற்றர் மோட்டார் உட்பட பெயர் குறிப்பிடாத பல சுடுகலன்களை விடுதலைப் புலிகள் முதன்முதல் பயன்படுத்திய சமராகவும் இது அமைகிறது. எனினும் புலிகள் தமது ஆட்பலத்தைத் தக்கவைப்பதற்காக தற்காலிக பின்வாங்கல்களையும் மேற்



கொள்ள நேர்ந்தது.

இச்சமரில் 700 இற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட 2,500 இற்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்திருந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் 254 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இவ்வாறு ஆக்கிரமித்திருந்த படைகளுக்கு இடி விழுந்த நாள் 27.09.1998 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் பல உயிர்த்தியாகங்களைச் செய்து கிளிநகரை மீட்பதற்கான ஓயாத அலைகள் - 02 ஐ ஆரம்பித்தனர். இன்று நீரோடும் கால்வாய்கள் அன்று மாவீரரின் குருதி சிந்திக்கிடந்த கால்வாய்களாகக் காணப்பட்டன. இன்று நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் அன்று பல புலி வீரர்களின் உடல்கள் சரிந்த நிலங்களாகக் காணப்பட்டன. இற்றைக்கு ஏழு வருடங்களுக்கு முன் நடந்த ஓயாத அலைகள் - 02 சமர் எவ்வாறு நடைபெற்றதென்பதை அன்றைய சமர்க்களங்களில் எதிரியைப் புறமுதுகிட்டு ஓடச்செய்த வீரர்கள் நினைவுபடுத்துகிறார்கள்.

ஓயாதஅலை - 02 சமரின் வெற்றிக்கு வலுச் சேர்த்தவர்களில் எதிரியின் முகாம்களுக்குள் ஊடுருவி தாக்குதலுக்கான தரவுகளையும் உள்ளே எதிரியின் ஒவ்வொரு அசைவையும் அவதானித்த வேவு வீரர்கள் தாம் எவ்வாறு எதிரியின் நிலைகளுக்குள் ஊடுருவினார்கள் என்பதையும், தாக்குதலுக்கான தகவல்களை எவ்வாறு திரட்டினார்கள் என்பதையும் இது வரை வெளியிடாத தகவல்களை வேவுப்புலி வீரர்கள் ஓயாத அலைகள் - 02 இன் 07 ஆவது ஆண்டு நினைவுநாளில் பகிர்ந்து கொள்கின்றார்கள். அதில் வெற்றிக்கு வழி வகுத்த அம்சங்களை - பல புதிய தகவல்களை வேவு வீரர்களை நெறிப்படுத்தியவரும் அன்றைய விசேட வேவுப் பிரிவின் தளபதிகளில் ஒருவராகவும் இருந்த லெப்ரினன்ட் கேணல் ஜெரி இவ்வாறு கூறுகிறார்.

'ஓயாத அலை இரண்டுக்கான வேவு நடவடிக்கையை ஆரம்பிக்கும் முன்பே நாங்கள் கிளிநொச்சிப் பகுதியை அண்டிய இராணுவ காவலரண்களைச் சுற்றி ஓரளவு கண்காணிப்பை வைத்திருந்தோம் கிளிநொச்சி முகாமை அடிக்க வேண்டுமென்று எல்லாரும் உறுதியோடு இருந்தோம் ஆனால் எப்போது அடிக்கிறதென்ற திட்டம் எங்களுக்குத்தரப் படவில்லை.

ஓயாத அலை - 02 நடவடிக்கைக்கு ஒரு மாதத்திற்குள்தான் இந்த வேவு நடவடிக்கையை வேகப்படுத்தினோம். ஆரம்பத்தில் விசேட வேவுப்பிரிவினர்தான் இதைப் பார்த்தார்கள். சண்டைக்கு அணிகளை இறக்குவதற்கான வேவுக்காக ஒவ்வொரு படையணிகளையும் இந்த வேவு நடவடிக்கையில் ஈடுபடுத்தியே இதனை முழுமைப்படுத்தினோம்.

ஆரம்பத்திலே வேவு பார்த்ததற்கும் கடைசிக் கட்டங்களில் வேவு பார்த்ததற்கும் நிறையப் பிரச்சினைகள் இருந்தன. என்னவென்றால் வேறு நடவடிக்கைகளுக்கு வேவு பார்க்கும் போது குறிப்பிட்ட இடத்தில் சிக்கல் என்றால் 500 அல்லது 600 மீற்றர் விலத்தியும் பார்ப்போம். ஆனால் இந்தப் பிரதேசத்தைப் பொறுத்த மட்டில். எங்களுக்கென குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட இடத்தில் பாதை எடுத்து கொடுக்க வேண்டிய தேவை இருந்தது. ஏனென்றால் அந்த இடத்தில் உடைப்பை ஏற்படுத்தினால் மட்டும்தான் இலகுவான முறையில் கைப்பற்ற முடியும் என்ற நிலை இருந்தது. இதே நேரத்தில் எதிரியும் எதிர்



பார்க்கக்கூடிய இடத்தில்தான் உடைப்பு பகுதியும் இருந்தது. மூன்று பேரைக் கொண்ட வேவு அணி உட்புகுந்து வேவு பார்க்க முடியும். ஆனால் பெரும் அணி நகரும் போது எதிரி அவதானிக்காதவாறும் வேவுபார்க்க வேண்டியிருந்தது.

வேவின் ஆரம்பத்தில் சிக்கல் குறைவாக இருந்தாலும் அடுத்தடுத்து வந்த நாட்களில் எல்லாப் பாதைகளிலும் எதிரியின் பதுங்கித் தாக்கும் அணிகளின் அச்சுறுத்தல்கள் அதிகமாக இருந்தது. பகல் வேளைகளிலும் இரவிலும் எதிரி தனது அரணுக்கு வெளியிலும் அவதானிப்பு நடவடிக்கைகளை அதிகப்படுத்தியிருந்தான். இதற்கும் பின்புதான் நாங்கள் முழுமையான வேவுகளை பார்க்க வேண்டியிருந்தது. அதாவது எமது அணிநகரும் போது அவர்களுக்கு பாதுகாப்பாக மற்றுமொரு அணியை நகர்த்த வேண்டிய நிலையும் ஏற்பட்டது. கூடிய பாதைகளால் அணிகளை நகர்த்துவதற்கான வேவுகளைப் பார்த்து நகர்த்தியதென்பதும் எமக்கு பெரும் வெற்றி என்றே கருதலாம். இதில் எல்லா வேவுப் போராளியும் கடுமையாக உழைத்தார்கள்.

இதில் ஈடுபடுவார்கள் ஒரு சண்டையில் வெற்றியடைந்தால் அதனுடைய ஆரம்ப வெற்றி வேவுவீரனையே சாரும்.

இந்த ஓயாத அலை - 02 ஐப் பொறுத்த வரையில் முழுப்பாதையாலும் குறித்த நேரத்திற்கு சண்டை தொடங்கி முழுப்பாதைகளையும் உடைத்து அணிகள் உட்புகுந்தன. ஒருபாதையால் 50 பேர் கொண்ட அணி அமைதியாக உள்ளே சென்றுதான் சண்டையில் ஈடுபட்டன.

வேவுப் போராளிகளுக்கு இந்தப் பிரதேசத்தில் அமைந்த சாதகம் என்னவென்றால் நடை தூரம் குறைவாக இருந்தது. இந்த போராளிகளுக்கு வேவின் கடைசிக்கட்டங்களில் ஓய்வு கொடுக்க முடியாதிருந்தது. ஏனென்றால் ஓய்வெடுத்தால் சண்டையில் பெரும் மாற்றம் ஏற்படும் அவர்களும் ஓய்வினை எதிர்பார்க்க மாட்டார்கள். ஏனென்றால் சண்டைக்கு முதல் நாள் நகர்விற்கான பாதையில் சிக்கல் ஏற்பட்டால் மற்றுமொரு பாதையை அவர்தான் எடுக்கவேண்டும் இந்த சண்டையிலும் சண்டைக்கு முதல் நாள் ஒரு பாதையில் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் அந்தபாதைக்குரியவர் அடுத்தநாள் நான்கு மணிக் கிடையில் இன்னுமொரு பாதையை எடுத்தார்.



கடைசிக் கட்டங்களில் இரவு, பகல் முழுமையாக ஓய்வின்றி செயற்பட்டார்கள். ஏனென்றால் சண்டையினுடைய முழுப்பொறுப்பும் வேவு வீரனுக்குரியதாக இருக்கும். உண்மையில் ஒரு வேவுப் போராளி தனது உயிரை மதிக்காமல் கடும் ஆபத்தான பகுதிகளுக்குள் சென்று வருகிறானென்றால் அதன் உண்மையான நோக்கம் தான் உயிரோடு திரும்பினால் அந்தப் பாதையில் ஏனைய போராளிகளின் இழப்புக்களை குறைப்பது தான் வேவுப் போராளியின் நோக்கமாக இருக்கும்.

நகர்வுப்பாதைகளை எடுப்பதிலும் நிறைய விடயங்களை அவதானிக்க வேண்டும். ஒவ்வொரு பாதையும் எங்களுக்கு சாதகமான முறையில் இருக்க வேண்டும் பாதையால் அணிகள் நகரும் போது எதிரி அவதானிக்காதவாறிருக்க வேண்டும். எதிரியின் பதுங்கித் தாக்கும் அணிகளின் நடமாட்டமற்ற பகுதியாக இருக்க வேண்டும். இது போன்ற பல விட



வேவில் பிரச்சினைகள் இருந்தால் இழப்புக்கள் கூடும் ஆகவே வேவுப் போராளிகள் சரியாக இதை உணர்ந்து கொண்டுதான் யாங்களை அவதானித்துத் தான் பாதை எடுக்க வேண்டும். அதாவது இராணுவம் எந்த உசார் நிலையிலிருந்தாலும் தேவைக்கேற்ப பாதை எடுத்தே ஆகவேண்டும்.

ஓயாத அலை - 02 இல் குறிப்பிட வேண்டிய ஒரு விடயம் உண்டு அதாவது பயிற்சி முடித்த குறுகிய காலத்திற்குள்ளேயே ஓர் அணியையும் இந்த வேவில் ஈடுபடுத்தினோம். இவர்களுக்கு வேவுப்பயிற்சியை வழங்கும்போது அதிலே சில போராளிகளின் திறமையான செயற்பாடும் இந்த சண்டையில் முக்கியத்துவம் பெறுகிறது.

2 ஆம் லெப்டினன் ரகுவரன் எனும் போராளி ஆரம்பத்தில் வேலைத் திட்டங்களுக்கு அனுப்பும்போது ஒரு வித்தியாசமான துணிச்சல், நகர்வு, பண்பு என்பவற்றை கொண்டிருந்தார். அவரின் திறமையை அவதானித்து இந்த பாதை எடுக்கும் செயற்பாட்டில் அவரையும் ஈடுபடுத்தினோம். பாதைகள் எடுக்கப்பட்ட பின் மேற்கொண்ட பகுப்பாய்வில் அவரின் செயற்பாடு மிகவும் வித்தியாசமானதாகவிருந்தது. ஒரு அனுபவமுள்ள வேவுவீரன் எவ்வாறு செயற்படுவாரோ அதேபோல் இவர் பயிற்சியையும் பொறுப்பாளர்களால் விளங்கப் படுத்தப்பட்ட விடயத்தையும் வைத்து இராணுவத்தின் நடவடிக்கைகளை மிகவும் நுணுக்கமாக அவதானித்திருந்தார். அவ்வாறுதான் ஒவ்வொரு வேவுப் போராளிகளும் செயற்பட்டிருந்தார்கள்.

சண்டை நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களில் வேவுப்போராளிகளின் பணி என்ன வென்றால் திட்டத்திற்கேற்ப அணிகளை நகர்த்தி சண்டையை தொடங்கி மண் அரண்களில் ஏறி காப்பரண்களைக் கைப்பற்றியவுடன் வெளி லைனுக்குரியவர்கள் அங்கு நிற்க உள்ளே அணிகளை கொண்டு செல்ல வேண்டியவர்கள் அணிகளுடன் உட்செல்வார்கள்.

சில பாதைகளை எடுக்கும் காலத்தில் எங்களுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. ஏனென்றால் அப்பகுதிகள் வெளியான பிரதேசம், அங்கு எதிரியின் அணிகள் வந்து பதுங்கியிருந்து தாக்குதல்களை பெருமளவில் மேற்கொண்டு வந்தன. இந்த நிலையில் சண்டைக்கு முதல் நாள் அப்போது பொறுப்பாக இருந்தவரால் சொல்லப்பட்டது இந்தப்பகுதியால் பாதை எடுக்கப்படா விட்டால் சண்டையை நிறுத்த வேண்டிய சூழல் ஏற்படுமென்று இதனை அந்த பாதைக்குரிய போராளிகளுக்கு தெரியப்படுத்தினோம். அதாவது இந்தப்பாதை தளபதி பால்ராஜ் அண்ணாவின் அணி போகவேண்டிய பாதை இந்த அணிதான் கட்டவுட்போட வேண்டிய அணி.

எனவே ஒரு புதுவிதமான முறையில் இதில் வேலையை மேற்கொண்டோம். அதாவது நாங்கள் ஒரு அணியை தயார்ப்படுத்தி நகர்ந்து சண்டை ஏற்பட வேண்டிய நிலை உருவானால் சண்டையிட்டாவது பாதையை எடுப்பது என்ற நிலையில். மிகக்கூடிய ஆபத்துக்களை சந்திக்க வேண்டிய சந்தர்ப்பத்திலும் அந்த போராளிகளின் திறமையான செயற்பாட்டினால் அந்தப்பாதையை எடுத்து அதனூடாகவே மறுநாள் அணிகளை நகர்த்தினோம்.

ஒரு பகுதிக்கு சுகந்திரன் என்ற போராளி பொறுப்பாக நின்று செயற்பட்டார். அவர்கள் மாலை 6.30 இற்கு குளத்து தண்ணிக்குள் இறங்கினால் காலை 4.30 இற்கு பிறகுதான் அவர்கள் கரைக்கு வருவார்கள் 10 மணித்தியாலம் வரையில் தண்ணிக்குள் ளிருந்து நீண்டநேரம் அவதானித்தார்கள் அதாவது சில இடங்களில் தாழ்வான பகுதியும் சில இடங்களில் தாழ்வற்ற பகுதியுமாக இருந்தது. அதற்குள் சத்தமின்றி அணிகள் நகர்வது என்றால் மிகக் கடினம் அதற்கேற்றவாறு வேவு பார்க்க வேண்டியிருந்தது. இதன்படி இப்பகுதியால் குறிப்பிட்ட நேரத்திற்குள் அணிகள் நகர்த்தப்பட்டன.

சண்டைக்கான பயிற்சிகளை அணிகளுக்கு வழங்கும் போது வேவுப் போராளிகளும் ஈடுபடுவார்கள் ஏனென்றால் இவர்களின் வழிகாட்டல் அணிகளுக்கு அவசியமானதாக இருக்கும். ஒரு பகுதியால் சண்டை அணிகள் நகர்ந்து கைப்பற்ற வேண்டிய அரண்கள் எல்லாம் பிடிக்கப்பட்டு விட்டன. இதற்கு லெப். கேணல் சித்தா பொறுப்பாக சென்றார். பின்பு பகலில் இராணுவம் மிக முனைப்பாக சண்டையிட ஆரம்பிக்கும் போது இந்த அணியினரின் துப்பாக்கிகள் நீருக்குள்ளால் சென்ற தால் செயற்படாது போனது இதனால் அணிக்கு இழப்பு அதிகரிக்க தொடங்கியது லெப். கேணல் சித்தா உட்பட 40 பேர் வரை குளத்து பண்டில் வீரச்சாவடைந்தனர். இதேபோன்று இன்னுமொரு பாதையிலும் குழப்பங்கள் ஏற்பட்டன. இவ்வாறு இராணுவம் அதி உசார் நிலையில் இருந்த போதும் வேவு வீரர்களின் திறமையான வேவுச் செயற்பாட்டினால் தான் ஓயாத அலைகள் - 02 சமரை வெற்றி கொள்ள முடிந்ததென அன்று பொறுப்பாக இருந்த தளபதிகள் கூறினார்கள் அது உண்மையும் கூட.

ஓயாத அலைகள் - 02 இல் உள்வேவு என்பதும் முக்கியமானதொன்று இதை பொறுத்த வரையில் வேவுப்போராளிகள் முகாமிற்குள் ஊடுருவி விட்டார்கள் என்பதை எதிரி அறிந்திருந்த நிலையிலும் போராளிகள் உட்புகுந்து மிகவும் துல்லியமாக வேவு பார்த்திருந்தார்கள். அதாவது எதிரியின் முகாமுக்குள் அவனது கட்டளைத் தளங்கள், ஆயுத களஞ்சியங்கள், முக்கிய தளங்கள், மோட்டார் தளங்கள், உள் அரண்கள் முட்கம்பி வேலிகள் அனைத்தும் எவ்வாறு எந்த அளவு உசார் நிலையில் இருக்கின்றன என்பதையும் உள் அரண்கள் எத்தனை எந்த அளவு தூரத்தில் உள்ளன என்பனவற்றைக் கூட வேவுப் போராளிகள் தெளிவாக அவதானித்திருந்தார்கள்.

வேவைப் பொறுத்த வரையில் தடையங்களை விட்டால் அந்த சண்டையே குழம்பிவிடும். அதற்கேற்றவாறு வேவு வீரன் செயற்பட வேண்டும். உண்மையில் வேவு வீரன் விசுவாசமானவனாகவும் நம்பிக்கையுடையவனாக துணிச்சல் நிறைந்தவனாக இல்லாதிருந்தால் அந்த வேவு வீரனாலேயே பல போராளிகள் வீரச்சாவடைய வேண்டிய நிலை ஏற்படும் ஆகவே இந்த சண்டையில் அவ்வாறு எந்த செயற்பாடும் நடைபெறாதது வேவு வீரரின் திருப்திகரமான செயற்பாட்டையே வெளிப்படுத்துகின்றது.

பொதுவாக சண்டை ஆரம்பிக்கின்ற நேரத்தில் அனைத்து பாதைகளும் ஒழுங்கமைக் கப்பட்டு குறித்த நேரத்திற்குள் அணிகள் நகர்ந்து சண்டையில் ஈடுபட்டன. இந்த சண்டையில் தடை உடைப்பிற்கான செயற்பாட்டில் வீரச் சாவுமிக்குறைவாகவே இருந்தது.

பொதுவாக வேவு வீரர்கள் திரட்டும் தகவல்கள் அனைத்தும் தளபதிகளுடாக தேசியத் தலைவருக்கு அனுப்பப்பட்டு தேசியத் தலைவராலேயே சண்டைக்குரிய திட்டங்கள் வகுக்கப்படும் அவரின் திட்டத்திற்கேற்பதான் மாற்றங்கள் மேற்கொள்வதானால் செய்வோம். இந்த சண்டையில் ஏற்கனவே நாங்கள் தெரிவு செய்த சில பாதைகளை தலைவர் நிறுத்தினார். அதற்கேற்ப அடுத்த பாதைகளை எடுத்துத்தான் அணிகளை நகர்த்தினோம்.

இவ்வேவுப்புலி வீரர்களின் அணிகளின் துணிகரச் செயற்பாட்டுக்கு வித்திட்டவர்கள் வீரச் சாவைத் தழுவிய வேவுப்புலி மாவீரர்கள் என்பதே மிகப்பொருத்த முடையது. ஏனெனில் வேவுக்காக செல்கின்ற ஒவ்வொரு போராளியும் வீரச்சாவடைகின்ற பொழுது அடுத்த வேவு வீரனுக்கு ஏற்படுகின்ற உணர்வு எதிரியின் மீது தாக்குதலை நடத்தவேண்டுமென்ற உத்வேகத்தை அதிகரிக்கும். ஆகவே எமது விடுதலையின் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னும் வீரச்சாவடைந்த ஒவ்வொரு மாவீரனின் தியாகமும் விடுதலை உணர்வுமே உத்வேகத்தை அளிக்கின்றன.

27.09.1998 அன்று ஓயாத அலைகள் - 2 நடவடிக்கையின் முதல் நாள் சமரில் வீரச் சாவை தழுவிய 293 மாவீரர்களின் விபரம் வருமாறு :

லெப். கேணல் ***மணிமேகலன்*** (முரளி) (துரைசாமி நாகராசா - பதுளை)
லெப். கேணல் ***ஞானி*** (பேரின்பநாயகம் சூரியகுமாரி - மட்டக்களப்பு)
லெப். கேணல் ***சித்தாத்தன்*** (கந்தசாமி கலைநேசன் - மட்டக்களப்பு)
லெப். கேணல் ***ஈஸ்வரகாந்தன்*** (காளியன்) (பொன்னம்பலம் ஜீவரட்ணம் - பதுளை)
லெப். கேணல் ***காந்தசீலன்*** (ஜெனா) (நடேசன் ஜெயந்தன் - யாழ்ப்பாணம்)
லெப். கேணல் ***மைந்தன்*** (கோபி) (செல்லையா ரவீந்திரன் - முல்லைத்தீவு)
லெப். கேணல் ***விசு*** (அருமை) (நடராசா குகேந்திரன் - யாழ்ப்பாணம்)
லெப். கேணல் ***செல்வி*** (றியன்சி) (சிவஞானம் ஜெனிற்றா - மன்னார்)
மேஜர் ***விமலச்சந்திரன்*** (அஜித்) (சிங்கராசா நிமால் - மட்டக்களப்பு)
மேஜர் ***குணசீலன்*** (சீலன்) (பொன்னுச்சாமி கணேஸ்நாதன் - மட்டக்களப்பு)
மேஜர் ***மயூரன்*** (லோகன்) (வீரக்குட்டி பேரின்பநாதன் - அம்பாறை)
மேஜர் ***கேதீஸ்*** (பார்த்தீபராஜ்) (கைலாயப் பிள்ளை உதயகுமார் - மட்டக்களப்பு)
மேஜர் ***சூரியவதி*** (வைத்தியநாதன் வசந்தகலா - யாழ்ப்பாணம்)
மேஜர் ***சிவாகந்தினி*** (சிவசுந்தரம் திருமகள் -

யாழ்ப்பாணம்)
மேஜர் ***இளங்கீரன்*** (குணா) (பிரான்சிஸ் சேவியர் டனிஸ்ரன் விஜயகுமார் - யாழ்ப்பாணம்)
மேஜர் ***செழியன்*** (அருணா) (பாப்பா) (குணசிங்கம் சிவகுருநாதன் - யாழ்ப்பாணம்)
மேஜர் ***சிவமோகன்*** (மகேந்தி) (எழிலன்) (முத்துசாமி ரமேஸ்குமார் - வவுனியா)
மேஜர் ***கைலை*** (சின்னத்துரை பாஸ்கரன் - முல்லைத்தீவு)
மேஜர் ***ரவிசங்கர்*** (தணிகாசலம்) (செல்வரத்தினம் மணிமாறன் - யாழ்ப்பாணம்)
மேஜர் ***பிரியக்கோன்*** (திருஞானச்செல்வன் நற்குணராஜ் - மன்னார்)
மேஜர் ***அன்பன்*** (அக்பர்) (அருளம்பலம் சிவகுமார் - யாழ்ப்பாணம்)
மேஜர் ***நந்தினி*** (கிருஸ்ணப் பிள்ளை கமலாதேவி -மட்டக்களப்பு)
மேஜர் ***வானதி*** (வான் மதி) (மாதவன் தர்மபுத்திரி - வவுனியா)
மேஜர் ***கனிபா*** (இராசமாணிக்கம் சகாயலுட்ஸ் - மட்டக்களப்பு)
மேஜர் ***இசையமுது*** (நவரத்தினராசா நளாயினி - யாழ்ப்பாணம்)
கப்டன் ***மணிவண்ணன்*** (கணபதிப்பிள்ளை இலங்கேஸ்வரன் - மட்டக்களப்பு)
கப்டன் ***தமிழ்ச்செல்வன்*** (தேவா) (பேரின்பம் ரவி - மட்டக்களப்பு)
கப்டன் ***நல்லையா*** (ஆபிரகாம் லவன் - மட்டக்களப்பு)
கப்டன் ***தமிழ்முதல்வன்*** (சங்கரப்பிள்ளை நவேந்திரன் - மட்டக்களப்பு)
கப்டன் ***புஸ்பலிங்கம்*** புஸ்பராஜ் (றைமன் சுரேஸ் - அம்பாறை)
கப்டன் ***மலையூரான்*** (நாகராஜா முருகமூர்த்தி - அம்பாறை)





கப்டன் ***மேகன்*** (அருச்சுணன் தயானந்தன் - அம்பாறை)
கப்டன் ***துளசிதரன்*** (பொடியப்பு கிருஸ்ணகுமார் - மட்டக்களப்பு)
கப்டன் ***வேல்விழி*** (விக்கினேஸ்வரமூர்த்தி யமுனா - யாழ்ப்பாணம்)
கப்டன் ***பூங்குழலி*** (பூங்குயில்) (பார்வதி தங்கராசா - வவுனியா)
கப்டன் ***பவான்*** (திருஞானசம்பந்தர் சிவரூபன் - யாழ்ப்பாணம்)
கப்டன் ***அழகன்*** (அருளம்பலம் கேதீஸ்வரன் - யாழ்ப்பாணம்)
கப்டன் ***ரவிக்குமார்*** (சடாசிவம் சசிக்குமார் - யாழ்ப்பாணம்)
கப்டன் ***தமிழமுதினி*** (சிவராசா சிவானி - வவுனியா)
கப்டன் ***கார்த்திகா*** (கறுப்பையா புஸ்பவதி - மாத்தளை)
கப்டன் ***நிருபா*** (வினி) (மகாதேவன் தர்சினி - யாழ்ப்பாணம்)
கப்டன் ***அன்பரசன்*** (சதாசிவம் சந்திரகுமார் - மட்டக்களப்பு)
கப்டன் ***கலையரசன்*** (சிங்கராசா எட்வேட்ராசா - யாழ்ப்பாணம்)
கப்டன் ***தமிழ்வாணி*** (சிவகுருநாதன் துஸ்யந்தி - யாழ்ப்பாணம்)
கப்டன் ***பூங்கொடி*** (சிவபாதசுந்தரம் சிவநிதி - முல்லைத்தீவு)
கப்டன் ***கார்வண்ணன்*** (சுந்தரம்பிள்ளை மோகனராசா - திருகோணமலை)
கப்டன் ***புவனேந்திரன்*** (மான்பாலன்) (சுந்தரம் விக்கினேஸ்வரன் - திருகோணமலை)
கப்டன் ***மாதவன்*** (தம்பிராசா ரவீந்திரன் - யாழ்ப்பாணம்)
கப்டன் ***புயல்வேந்தன்*** (செல்வரத்தினம் முகுந்தன் - கிளிநொச்சி)
கப்டன் ***இயல்வாணன்*** (தமிழவன்) (அந்தோணி பாலச்சந்திரன் - முல்லைத்தீவு)
கப்டன் ***புவிரஞ்சன்*** (பழனியாண்டி நவநீதன் - கிளிநொச்சி)
கப்டன் ***தர்சன்*** (அருள்நம்பி) (அங்கசாமி



பாஸ்கரன் - முல்லைத்தீவு)
கப்டன் ***வித்தி*** (முருகேசு நித்தியானந்தன் - திருகோணமலை)
கப்டன் ***இதயன்*** (ஆறுமுகம் சந்திரன் - கிளிநொச்சி)
கப்டன் ***பகீரதன்*** (கோபாலகிருஸ்ணன் சந்திரன் - கிளிநொச்சி)
கப்டன் ***புரட்சிமாறன்*** (பேரின்பநாயகம் சிறிரஞ்சன் - யாழ்ப்பாணம்)
கப்டன் ***வைகறை*** (நாதன் கஜேந்தினி - யாழ்ப்பாணம்)
கப்டன் ***பூங்கோதை*** (தேவகுலசிங்கம் இன்பராணி - யாழ்ப்பாணம்)
கப்டன் ***உதயராணி*** (கந்தசாமி ராஜினி - யாழ்ப்பாணம்)
கப்டன் ***சுதாகர்*** (சுதாகரன்) (கனகையா விஜயகுமார் - மட்டக்களப்பு)
கப்டன் ***மித்திரா*** (இராசரத்தினம் பரிமளா - திருகோணமலை)
கப்டன் ***நிரோசா*** (நாகராசா வில்வராணி - திருகோணமலை)
கப்டன் ***தில்லை*** (சூசை சரோஜினிதேவி - முல்லைத்தீவு)
கப்டன் ***வானதி*** (வாழக்கை) (இராசதுரை நித்தியா - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***தூயோன்*** (குழந்தைவேல் சிறிகுமார் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***துலங்கநாதன்*** (மயில்வாகனம் ரவி - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***இளவரசன்*** (யோசப்) (சூசைப்பிள்ளை நிக்சன் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***இறையன்*** (வேலாயுதம் தெய்வேந்திரன் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***நிதாம்பன்*** (கந்தப்பன் லிங்கநாதன் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***உமாசங்கர்*** (செபஸ்ரியான் சில்வா ரொனி - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***தர்சனன்*** (சண்முகராசா கோவிந்தசாமி - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***அழகுராஜ்*** (மயில்வாகனம் லோகதாசன் - அம்பாறை)
லெப்டினன்ட் ***பவானி*** (செல்லத்தம்பி கலா - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***பாணுகாந்தன்*** (குமாரசாமி புவனேசகுமார் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***தீயரசன்*** (நல்லதம்பி சுந்தரராசா - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***கபிலா*** (கந்தசாமி நாகசோதி - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***அரசி*** (வேலாயுதப்பிள்ளை ஜீவகி - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***பெருமதன்*** (ஆனந்தன்) (கந்தசாமி ஜெகதீஸ்வரன் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***வைதேகி*** (சோமசுந்தரம் சியாமளா - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***அருந்ததி*** (இராமநாதப்பிள்ளை திலகேஸ்வரி - முல்லைத்தீவு)
லெப்டினன்ட் ***கோதை*** (தளையசிங்கம் நந்தினி - கிளிநொச்சி)
லெப்டினன்ட் ***அழகுநிலா*** (இதயா) (கஜேந்தினி சிவலிங்கம் - யாழ்ப்பாணம்)
சிறிதரன் - திருகோணமலை)
லெப்டினன்ட் ***தென்னரசன்*** (சோமலிங்கம் சந்திரமோகன் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***குருபரன்*** (ஆசீர்வாதம் ஸ்ரனிஸ்லாஸ் - முல்லைத்தீவு)
லெப்டினன்ட் ***பைந்தமிழ்*** (பற்பதலிங்கம் கோமளேஸ்வரன் - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***நிலவன்*** (ஆளுடைநம்பி) (திருநாவுக்கரசு ரமேஸ்குமார் - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***மணியரசன்*** (யோகேந்திரன் சசிகரன் - திருகோணமலை)
லெப்டினன்ட் ***சிவவதனி*** (கந்தசாமி துஸ்யந்தி - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***தேன்கவி*** (வேலன் விமலேஸ்வரி - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***தர்மசீலன்*** (மருதமுத்து சிவானந்தம் - கிளிநொச்சி)
லெப்டினன்ட் ***வந்தனா*** (வேலுப்பிள்ளை மாதரசி -யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***கவியரசன்*** (அரசரட்ணம் சிறிகரன் - திருகோணமலை)
லெப்டினன்ட் ***புகழொளி*** (நேசரட்ணம் ராஜ்மோகன் - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***கோமகள்*** (ஆசைப்பிள்ளை சசிகலா - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***மகிழினி*** (தர்மலிங்கம் சுபாஜினி - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***பாமினி*** (நாகராசா கலாராணி - கிளிநொச்சி)
லெப்டினன்ட் ***நகுலா*** (நாகராசா சுதாஜினி - யாழ்ப்பாணம்)



லெப்டினன்ட் ***லதன்*** (சிவலிங்கம் தங்கமயில் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***வீரத்தேவன்*** (தணிகாசலம் கங்காதரன் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***கிரிதரன்*** (விஸ்வலிங்கம் பாக்கியராஜா - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***கற்கடகன்*** (திருமேணி உதயகுமார் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***இசைச்சிட்டு*** (பாலசுந்தரம் சுந்தரேஸ்வரி - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***பூநிலா*** (மரியதாஸ் ஜெனிற்றா - முல்லைத்தீவு)
லெப்டினன்ட் ***எழிலரசி*** (கொன்சி) (வைத்திலிங்கம் சிவபாக்கியம் - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் ***தமிழ்நிலவன்*** (செல்வராசா உதயபாரதி (சிவலிங்கநாதன் சிவகுமாரி - வவுனியா)
லெப்டினன்ட் ***பழநிதி*** (பவளநிதி) (கனகசபை சுஜீபா - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் ***நித்திலன்*** (செபமாலைமுத்து விஜயகுமார் - மன்னார்)
லெப்டினன்ட் ***முத்தழகன்*** (வேலுப்பிள்ளை



தவராசா - முல்லைத்தீவு)
லெப்டினன்ட் *சுமன்* (முத்தமிழன்) (தனபாலசிங்கம் சிவறஞ்சன் - முல்லைத்தீவு)
லெப்டினன்ட் *இராவணன்* (கோவிந்தசாமி மோதிலால்நேரு - வவுனியா)
லெப்டினன்ட் *பரதன்* (பாலசிங்கம் சயந்தன் - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் *தென்றல்வாணன்* (பிரான்ஸ் ஸ்ரான்லி - வவுனியா)
லெப்டினன்ட் *சுடர்வண்ணன்* (ஆறுமுகம் சிவகரன் - திருகோணமலை)
லெப்டினன்ட் *புண்ணியசீலன்* (இராசேந்திரம் சேதுபாலன் - கிளிநொச்சி)
லெப்டினன்ட் *ரகு* (குகன்) (சுப்பிரமணியம் சிவரூபன் - வவுனியா)
லெப்டினன்ட் *தர்மன்* (தருமன்) (தம்பிராசா கருணகுமார் - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் *தீச்செல்வம்* (சீர்ச்செல்வம்) (பூபாலசிங்கம் சூரியகுமார் - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் *வசந்தராஜன்* (சின்னமணி சிவகுமார் - கிளிநொச்சி)
லெப்டினன்ட் *துலாகதன்* (மயில்வாகனம் ரவி - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் *அருள்நிதி* (இளையதம்பி குமார் - மட்டக்களப்பு)
லெப்டினன்ட் *ஆத்திசூடி* (சுந்தரலிங்கம் புஸ்பேந்திரன் -முல்லைத்தீவு)
லெப்டினன்ட் *செங்குட்டுவன்* (தம்பையா இராசேந்திரம் - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் *பனிநீர்* (சிவகுமார் புருசோத்தமன் - யாழ்ப்பாணம்)
லெப்டினன்ட் *பாமதி* (விஜயரட்ணம் சத்தியப்பிரியா - கிளிநொச்சி)
2ம் லெப்டினன்ட் *இளவரசன்* (வன்னிய சிங்கம் ராசா - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *லாவன்னியன்* (கிருபரத்தினம் கோணேசகிரி - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *சுடேஸ்கரன்* (செல்லத்துரை மகேந்திரராஜா - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *முத்திசையன்* (வைரமுத்து சிவஞானம் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *சபேசன்* (நாகராசா சின்னத்தம்பி குட்டி -மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *திலீபமணி* (ஆறுமுகம் இலங்கேஸ்வரி - முல்லைத்தீவு)
2ம் லெப்டினன்ட் *அரசி* (ஆறுமுகம் ஜெயச்சித்திரா - முல்லைத்தீவு)
2ம் லெப்டினன்ட் *பூங்காயினி* (நடராசா இந்திரா - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *நிலவுமதி* (கனகசபை இராஜயோகம் - வவுனியா)
2ம் லெப்டினன்ட் *நிலவள்* (சிவலிங்கம் சிறிரஜனி - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *திலீபமயில்* (இதழி) (கந்தசாமி புனிதமலர் - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *கயல்நிலா* (விவேகானந்தராசா யோகேஸ்வரி - மாத்தளை)
2ம் லெப்டினன்ட் *ஆர்விழி* (சுரபி) (முத்துலிங்கம் ஜெனிற்றா - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *தகைமகள்* (முருகேசு வனிதாஅறிவுமலர் - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *கவியரசன்* (சுப்பிரமணியம் சுமித்திரன் - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *காவியா* (இராமச்சந்திரன் சந்திரகுமாரி - கொழும்பு)
2ம் லெப்டினன்ட் *தீபா* (இராசு ஜெயலட்சுமி - வவுனியா)
2ம் லெப்டினன்ட் *நிலவன்* (வரதன்) (இராமச்சந்திரன் ரமேஸ் - முல்லைத்தீவு)
2ம் லெப்டினன்ட் *தமிழ்மாறன்* (தோமஸ் ஜெராட் - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *சேரக்கொடி* (சாமித்தம்பி ஜீவராசா - கிளிநொச்சி)
2ம் லெப்டினன்ட் *ரவிக்கா* (இரத்தினம் ஜெகதினி - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *மகிழா* (தம்பிஜயா உதயராணி - முல்லைத்தீவு)
2ம் லெப்டினன்ட் *மன்மதன்* (தங்கவேல் நகுலேஸ்வரன் - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *கவிஞன்* (சிவபாலன் சிவகுமார் - திருகோணமலை)
2ம் லெப்டினன்ட் *சசிகலா* (வேலு ஜனகேசரி - கிளிநொச்சி)
2ம் லெப்டினன்ட் *குணா* (கதிர்காமபோடியார்



வசந்தராசா - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *மணிநாதன்* (தம்பியப்பா நாகையா - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *தோன்றல்* (கிருஸ்ணசாமி விநாயகமூர்த்தி - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *பூமகள்* (புனிதநாதன் இராஜேஸ்வரி - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *உதயா* (அழகுராசா புனிதவதி - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *சுபா* (தம்பிப்பிள்ளை இதயா - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *அரசனா* (கந்தசாமி பவானி - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *இளையவன்* (ஜயாத்துரை சசிகலா - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *சுகந்தா* (தங்கா) மதுரைமீனாட்சி - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *குழலினி* (ரஜனி) (தர்மராசா அஜந்தா - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *பொய்கை* (சுந்தரலிங்கம் சுபாசினி - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *அரசன்பன்* (செல்வன் யோகதேவன் - மன்னார்)
2ம் லெப்டினன்ட் *இன்பமலர்* (அன்னலிங்கம் புவனலோஜினி - கிளிநொச்சி)
2ம் லெப்டினன்ட் *அருட்சுடர்* (முருகேசு சங்கீதா - முல்லைத்தீவு)
2ம் லெப்டினன்ட் *அங்கவை* (ஆதித்தா) (சிவானந்தராசா நவந்தினி - கிளிநொச்சி)
2ம் லெப்டினன்ட் *கோமகள்* (இராமநாதன் மகேஸ்வரி - வவுனியா)
2ம் லெப்டினன்ட் *பவானி* (குணநாதன் செல்வி - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *கலைவதனி* (முருகையா ஜெயந்தினி - கிளிநொச்சி)
2ம் லெப்டினன்ட் *நிலமகள்* (றோசா) (குகநாததாசன் பிறேமிளா -வவுனியா)
2ம் லெப்டினன்ட் *கலாவதி* (ராணி) (செல்வநாயகம் சாந்தமலர் - கிளிநொச்சி)
2ம் லெப்டினன்ட் *ஜெயப்பிரியா* (சிவநாதன் சுந்தரலட்சுமி - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *ஈழவண்ணன்* (துரைராசா கயந்தன் - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் வீமன் (செபநாயகம் மனோகர் – முல்லைத்தீவு)
2ம் லெப்டினன்ட் பொன்னிலவன் (புலிராஜ்) (கணபதிப்பிள்ளை மாணிக்கலிங்கம் – யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *இனந்தகை* (பாலசிங்கம் பாலச்சந்திரன் - வவுனியா)
2ம் லெப்டினன்ட் *வீரச்சோழன்* (செல்லத்துரை சத்தியநாதன் - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *வெற்றிமாறன்* (செல்லையா யோகேஸ்வரன் - முல்லைத்தீவு)
2ம் லெப்டினன்ட் *ரகுவரன்* (சரவணன்) (பாலகுலேந்திரன் குகதாஸ் - கிளிநொச்சி)
2ம் லெப்டினன்ட் *சீலன்* (பற்குணன் சுகுணன் - வவுனியா)
2ம் லெப்டினன்ட் *உணர்வீரன்* (முருகையா சுபாஸ்கரன் - யாழ்ப்பாணம்)
2ம் லெப்டினன்ட் *கிருபா* (பெருமாள் பத்மாதேவி - கிளிநொச்சி)
2ம் லெப்டினன்ட் *மணியான்* (கணபதிப் பிள்ளை பகீரதன் - மட்டக்களப்பு)



2ம் லெப்டினன்ட் *குட்டிமோகன்* (செபஸ். ரீயான் ஜேசுதாசன் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *விஸ்வநாதன்* (வடிவேல் மோகன் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *சிறிவித்தியன்* (சுப்பிரமணியம் வேலாயுதம் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *நிதராஜ்* (அருளானந்தம் அருட்குமார் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *வைரராஜன்* (நடராசா கணேஸ் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *நீலதனு* (சிவலிங்கம் குயிலவன் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *அருச்சுனபாலன்* (நீலன் மீஸ்மன் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *தரன்* (கதிர்காமத்தமபி வசந்தன் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *பொய்கைமாறன்* (கணபதிப் பிள்ளை முருகுப்பிள்ளை - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *புகழேந்தி* (இராமலிங்கம் தமிழ்ரூபன் - அம்பாறை)
2ம் லெப்டினன்ட் *வீகன்* (நவரத்தினம் விஜயகுமார் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *நடேசன்* (சோமசுந்தரம் அருளானந்தம் - அம்பாறை)
2ம் லெப்டினன்ட் *அருஞ்சுடர்* (நவரத்தினம் மனோகரன் - மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *ரூபலிங்கம்* (சின்னையா அமிர்தலிங்கம் மட்டக்களப்பு)
2ம் லெப்டினன்ட் *கட்சிதன்* (பூபாலப்பிள்ளை உமாகாந்தன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *சிறிவேந்தன்* (கனகசபாபதி சிறீஸ்கந்தராசா - மட்டக்களப்பு)
வீரவேங்கை *அருள்விழியன்* (மயில்வாகனம் நாகராசா - மட்டக்களப்பு)
வீரவேங்கை *வர்ணமேனன்* (வேதாரணியம் ஜெயகோபால் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *செங்கீதன்* (முருகுப்பிள்ளை இந்திரன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *றீகவரன்* (நவரத்தினம் நிமலானந்தன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *பூங்கீதன்* (சின்னத்தம்பி சந்திரசேகர் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *காந்தனன்* (சிவலி ரமேஸ் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *பஞ்சவர்ணன்* (தேவராசா லூக்காஸ் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *டிசாந்தன்* (நாகராசா குமார் - அம்பாறை)
வீரவேங்கை *ஜீவதன்* (கனகசபை கிருபா - மட்டக்களப்பு)
வீரவேங்கை *மகரந்தன்* (விஸ்வலிங்கம் ரதிகுலராஜா - மட்டக்களப்பு)
வீரவேங்கை *தேவகாந்தன்* (மனோகரன் மெல்றோய் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *பாலகிரியன்* (குஞ்சுத்தம்பி பிரசாந் - அம்பாறை)
வீரவேங்கை *சனாசன்* (சிவலிங்கம் கேதீஸ்வரன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *முனீஸ்வரன்* (பூபாலப்பிள்ளை ரவீந்திரன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *ஞானகாந்தன்* (பெரியான் கணேசமூர்த்தி - மட்டக்களப்பு)
வீரவேங்கை *யாழ்தேவன்* (காந்தராஜ்) (ஆறுமுகம உதயன் - அம்பாறை)
வீரவேங்கை *சரத்குமார்* (மயில்வாகனம் ரவி - மட்டக்களப்பு)
வீரவேங்கை *குன்றக்குமரன்* (நந்தாகரன்) (சின்னத்தம்பி அமிர்தலிங்கம் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *சுதர்மணி* (சுதர்மன்) (வடிவேல் நகுல்ராஜ் - அம்பாறை)
வீரவேங்கை *அகல்விழியன்* (சிவநாதப் பிள்ளை குமார் - அம்பாறை)
வீரவேங்கை *சுமணதாசன்* (மார்க்கண்டு ரதீஸ்குமார் - அம்பாறை)
வீரவேங்கை *மாவியன்* (பொன்னையா தயானந்தன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *ஞானிதன்* (பரிசுதன்) (வீரசிங்கம் சிவநாதன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *திவ்வியவர்ணன்* (திவ்வியன்) (சாமித்தம்பி காண்டீபன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *மணிக்குமார்* (பொன்னுத்துரை மகேந்திரன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *மணிசாந்தன்* (கந்தசாமி நடேசமூர்த்தி - மட்டக்களப்பு)
வீரவேங்கை *சிவகீர்த்தி* (தம்பிப்பிள்ளை மோகன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *ஜெயசுந்தரம்* (சிவசோதி ரூபசிங்கம் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *இளமாறன்* (நல்லதம்பி யோகநாதன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *துசிகந்தன்* (கணேசன் மகேந்திரன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *அகிலன்* (காத்தமுத்து இராசு - மட்டக்களப்பு)
வீரவேங்கை *கலைமருதம்* (சண்முகம் சதீஸ் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *கலைநிலவன்* (நவரத்தினம் மேகராசா - மட்டக்களப்பு)
வீரவேங்கை *கன்னியழகன்* (குமாரநாயகம் மணிவண்ணன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *காரரசன்* (செல்வராசா சுரேஸ் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *குலச்செல்வன்* (அழகையா அருள்நாதன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *வான்முகி* (றைமன் ஜெகன் - அம்பாறை)
வீரவேங்கை *காவல்விழியன்* (ரதிகரன் கண்ணன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *ஈகைக்கதிர்* (அருணகிரி தயாபரன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *காந்தஜோதி* (சந்தோசம் தயாராணி - மட்டக்களப்பு)
வீரவேங்கை *தேனிலா* (செல்வம் இராஜேஸ்வரி - மட்டக்களப்பு)
வீரவேங்கை *அமரதீபன்* (தம்பிப்பிள்ளை கோபாலகிருஸ்ணன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *குணாளினி* (சந்திரக்குட்டி நிமாலினி - மட்டக்களப்பு)
வீரவேங்கை *சுகி* (முருகுப்பிள்ளை ரஞ்சினி - மட்டக்களப்பு)
வீரவேங்கை *வதனி* (மாசிலாமணி

குகணலோஜினி - மட்டக்களப்பு)
வீரவேங்கை *அமுதினி* (இராமசாமி சுமதி - யாழ்ப்பாணம்)
வீரவேங்கை *தமிழ்கிருபா* (கோணேசலிங்கம் மோகராசா - திருகோணமலை)
வீரவேங்கை *தமிழ்வளவன்* (சுந்தரம் கிருஸ்ணராஜ் - வவுனியா)
வீரவேங்கை *சுதா* (ரவீந்திரன் நடேஸ்வரி - சித்திரா - வவுனியா)
வீரவேங்கை *யாழ்பாடினி* (யோன்பிள்ளை அனுஸ்ரெலா - முல்லைத்தீவு)
வீரவேங்கை *கலைநங்கை* (தங்கராசா அகிலேஸ்வரி - வவுனியா)
வீரவேங்கை *ஞானவதி* (நடராசா சந்திரகுமாரி - முல்லைத்தீவு)
வீரவேங்கை *பவானி* (இலட்சுமணன் நகுலேஸ்வரி - யாழ்ப்பாணம்)
வீரவேங்கை *புரட்சிமதி* (செல்வராசா








வீரவேங்கை *புகழ்மாறன்* (தர்மலிங்கம் பத்மலோஜன் - திருகோணமலை)
வீரவேங்கை *சபாபதி* (ஆதிரன்) (பாலசுந்தரம் மதிராஜ் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *இசைக்குகன்* (பபில் சுதாகரன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *துவாரகன்* (நல்லதம்பி சந்திரன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *இதரன்* (சிவமாலை மத்தேயூ - மட்டக்களப்பு)
வீரவேங்கை *கோமகன்* (உதயகுமார் ரஜனிகாந் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *குருதேவன்* (வீரசிங்கம் விநாயகமூர்த்தி - மட்டக்களப்பு)
வீரவேங்கை *நதிசான்* (தம்பிப்பிள்ளை யோகராசா - அம்பாறை)
வீரவேங்கை *அச்சணன்* (அந்தோணி நிக்லஸ் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *வவிதரன்* (யோகரட்ணம் கமலநாதன் -மட்டக்களப்பு)
வீரவேங்கை *லிங்கதீதன்* (குமாரியன் தம்பிமுத்து - மட்டக்களப்பு)
வீரவேங்கை *கமலுதன்* (பாபு யோஸ்கரன் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *குயில்வரன்* (முத்துலிங்கம் அமிர்தலிங்கம் - மட்டக்களப்பு)
வீரவேங்கை *ரூபரதன்* (திருவாசகம் விஸ்ணுமூர்த்தி -அம்பாறை)
வீரவேங்கை *நவச்சந்திரன்* (புஸ்பராசா விக்கினேஸ்வரன் - கிளிநொச்சி)
வீரவேங்கை *ஆழிவண்ணன்* (கந்தையா சுதாகர் - யாழ்ப்பாணம்)
வீரவேங்கை *இயலியன்* (சின்னையா வரதன் - யாழ்ப்பாணம்)
வீரவேங்கை *விடுதலைவீரன்* (பத்மநாதன் சதீஸ்வரன் - முல்லைத்தீவு)
வீரவேங்கை *மதிவாணன்* (இராசையா சுகேந்திரன் - கொழும்பு)
வீரவேங்கை *சத்தியா* (அப்புத்துரை கெங்காதேவி - முல்லைத்தீவு)
வீரவேங்கை *திகம்மதி* (குமுதா) (பாஸ்கரன் சுபாஜினி - முல்லைத்தீவு)
வீரவேங்கை *அகிலன்* (செல்லத்துரை சிவகாந்தன் - யாழ்ப்பாணம்)
வீரவேங்கை *மைச்சுடர்* (சர்மிலா) (சபாரத்தினம் இராசமலர் - வவுனியா)
வீரவேங்கை *மகேந்தினி* (செல்லத்துரை வசந்தி - முல்லைத்தீவு)
வீரவேங்கை *முத்தழகி* (மாணிக்கம் சுசீலாதேவி - யாழ்ப்பாணம்)
வீரவேங்கை *மதுரா* (ஆசைமயில்) (சீனித்தப்பி பூங்கொளரி - யாழ்ப்பாணம்)
வீரவேங்கை *தமிழினி* (குமாரதாஸ் சுமித்திரா - யாழ்ப்பாணம்)
வீரவேங்கை *சாந்தரசி* (சுந்தரம் சொர்ணம் - கண்டி)
வீரவேங்கை *அன்பு* (அலோசியஸ் அலெக்ஸ் - கிளிநொச்சி)
வீரவேங்கை *இளநிலா* (விநாயகமூர்த்தி விமலேஸ்வரி - முல்லைத்தீவு)
வீரவேங்கை *வீரத்தமிழன்* (வைத்திலிங்கம் ஜெயபாலன் - யாழ்ப்பாணம்)
வீரவேங்கை *கவிமலர்* (யோகதாஸ் நளினிசர்மிலா - முல்லைத்தீவு)
வீரவேங்கை *தமிழ்நிலா* (நடேசன் சுரேசினி - கிளிநொச்சி)
வீரவேங்கை *இன்பநிலா* (முகுந்தா) (தேவராசா புஸ்பலதா - கிளிநொச்சி)
வீரவேங்கை *செல்வா* (சீனித்தம்பி நாகேஸ்வரி - மட்டக்களப்பு)
வீரவேங்கை *முகிலா* (பிறேமலதா) (கந்தன் விஜயகுமார் - யாழ்ப்பாணம்)
வீரவேங்கை *தேவநம்பி* (கதிரவேல் தியாகராசா - வவுனியா)
வீரவேங்கை *வைகைமாறன்* (கதிரவேல் கலைச்செலவன் - கண்டி)
வீரவேங்கை *நிமலினி* (தில்லையம்பலம் இராஜேஸ்வரி - மட்டக்களப்



14ஆம் ஆண்டு

வீரவணக்கம்



சமர்க்கள நாயகன்

பிரிகேடியர் பால்ராஜ்

பாலசேகரம் கந்தையா

கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு

(27.11.1965-20.05.2008)

மாரடைப்புக் காரணமாக 20.05.2008 அன்று சாவடைந்தார்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

AFFORDABLE REFRIGERATION SERVICES INC



We Sell. Install used &
new Walk in Cooler, Walk in Freezer

Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com

வன்னிச் சங்கம்-கனடா.
VUnited Care for Kids Inc.

Organization – Reg # 1913383. Charitable Organization.
Head office address: 8-3500 McNicoll Av, Toronto(ONT), M1V 4C7.
vunitedcare@gmail.com info@vcarekids.org TP:416-644-1113.

வன்னிப்பிரதேச மாணவர்களின் கல்விக்குக் கரம் கொடுப்போம்

கனடா வன்னிச்சங்கமானது கடந்த 25 ஆண்டுகளாக தாயகத்தில் உள்ள பெற்றோர்களை இழந்த, மாற்றுத்திறனாளியான அல்லது வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை , பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மற்றும் பின்தங்கிய கிராம பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் போன்றவற்றினை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

அந்த வகையில் இவ் வருடம் க. பொ. த. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கிராமப்புற மாணவர்களுக்கு 5 பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வினாவிடைப் புத்தகங்களைப் புதிதாகப் பதிப்புச் செய்து இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எல்லா மாணவர்களுக்கும் இலவசமாகப் புத்தகங்களை அச்சிட்டு வழங்க போதியளவு நிதி வசதியின்மை எங்களிடம் உள்ளது. எனவே எங்கள் தமிழ் மாணவர்களின் அக்கறை கொண்ட கொடையாளர்களாகிய உங்கள் உதவியினை நாடி நிற்கின்றோம். வன்னிப் பிரதேசத்தில் உள்ள கிராமப்புறங்களில் வாழ்கின்ற வருவாய் குன்றிய மாணவர்களது கல்வி முன்னேற்றங்கருதி உங்களிடமிருந்து சிறு சிறு தொகையாகவேனும் நிதியுதவி தாருங்கள் என அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்களால் மனமுவந்து தரப்படுகின்ற கல்வி உதவித் தொகைகள் அனைத்திற்கும் வருமானவரிக் கழிவு பற்றுச்சீட்டு (Charitable Donation Receipts) வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

நிதி நன்கொடை செய்வதற்கு வங்கி இலக்கம் பெறுவதற்கு அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:

வன்னிச் சங்கம்: 416-644-1113, நிதியாளர்:647-202-8286

e transfer: vunitedcare4kids@gmail.com

நிதி நன்கொடை செய்பவர்களுக்கு வரிக்கழிவுப் பற்றுச்சீட்டு வழங்குவதற்கேற்ற விபரங்கள் பெறுவதற்கு தயவு கூர்ந்து நிதியாளரைத் தொடர்பு கொள்ளவும்.

“நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்போம்”

பொ. சிவசுதன் - செயலாளர்.
கனடா வன்னிச் சங்கம். 416-558-1917.

MORTGAGE

Residential/Commercial/Industrial
& Investment Properies

SUBRA MORTGAGES INC.

- 1st, 2nd & 3rd Mortgages
- Purchase • Refinance
- Renewal • Switches
- Equity Line of Credit
- Pre-Approvals
- Self-Employed
- Multi Rental Properties
- New Immigrants

Mortgage In Any Situations



WE DEAL WITH ALL BANKS

- LOAN
- LINE OF CREDIT

NESAN
416-908-5656
www.subra.com or www.nesan.ca
email:mortgage@subram.com

MORTGAGE ALLIANCE
Independently Owned & Operated
Lic. No: M15001465, Brokerage No: 10530
Corp Off: 2005 Sheppard Ave E, Suite 200
North York, ON M2J 5B4

Office: 1585 Markham Rd, Unit 406, Scarborough ON M1B 2W1
Off: 416-660-5656/Fax: 647-351-3099/ Toll: 1-844-878-2721

உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கும் "முள்ளிவாய்க்கால்" ஆவணம்



2009 ஆம் ஆண்டு ஈழத்தில் இலங்கை அரச படைகளால் இனப்படுகொலையை உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் அனைவரும் நினைவு கூர்ந்து வருகிறோம். 13 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் எமக்கான நீதி கிடைக்காமல் தொடர்ந்தும் போராடி வருகிறோம். போர்க்குற்றம் மற்றும் இனவழிப்பு செய்த இலங்கை அரசையும் அரச படைகளையும் சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த தமிழர்களும் தமிழ் அமைப்புக்களும் தொடர்ந்தும் போராடி வருகின்றனர். அந்த வகையில் எம் மினத்திற்கு நடந்த கொடுமைகளை உலகறியச் சுவதற்கும் எம் இளம் சந்ததியினர் எம் வரலாறுகளை உரிய முறையில் அறிந்து கொள்வதற்கு எங்களுக்கு பல ஆவணங்கள் தேவை. அந்த வகையில் முல்லைவாய்க்காலில் எம்மினத்திற்கு நடந்த இனவழிப்பை **"பொய்யா விளக்கு"** என்ற ஆவன திரைப்படம் அங்கு நடந்த கொடுமைகளை உலகறியச் செய்கிறது.

கனடா, ஒட்டாவாவில் வசிக்கும் இலங்கை தமிழரான திரு. தினேஷ் கோபாலின் இயக்கத்திலும் வெண்சங்கு கலைக்கூடத்தின் தயாரிப்பிலும், மற்றும் பலரின் பங்களிப்புடன் முள்ளிவாய்க்காலில் நடந்த இனப் படுகொலையின் உண்மை சம்பவங்களை அப்படியே ஒரு ஆவனத்திரைப்படமாக உருவாக்கியுள்ளனர். கொரோனாவின் தாக்கத்தால் பல மாதங்கள் மூடப்பட்டிருந்த திரையரங்குகள் தற்பொழுது திறக்கப்பட்டு இருப்பதால் உலகெங்கிலும் உள்ள திரையரங்குகளில் **"பொய்யா விளக்கு"** திரைப்படம் திரையிடப்பட இருக்கிறது.



தற்பொழுது உக்கிரனின் ரசியா படைகளால் நடத்தப்படுவது ஒரு இனப்படுகொலை என கூறும் உலகம் எங்கள் மண்ணில் நடந்ததை இனப்படுகொலை என கூற மறுத்து வருகிறது. ஆனால் எங்கள் மண்ணில் நடந்த இனப் படுகொலையை பொய்யாவிளக்கு போன்ற ஆவணங்களை நாமும் பார்த்து, எம்மிளம் சந்ததியினர் மற்றும் பிறமொழி பேசுபவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பார்க்க செய்வதன் மூலம் எங்கள் மண்ணில் நடந்த இனப் படுகொலையை உலகறியச் செய்வோம்.



Ontario Government Recognized Thamil Genocide Education Week (12 May to 18 May) in Canada



தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

1981 ஆம் ஆண்டு மே, யூன் இனப்படுகொலை

1981 ஆம் ஆண்டு மே மாதமும் யூன் மாதமும் வடகிழக்கில் தேர்தல் பரப்புரை பின்னணியில் கொந்தளிப்பான அரசியற் சூழ்நிலைகள் காணப்பட்டன. இந்நிலையில் ஐ.தே.கட்சியின் தலைமைப்பீடம் ஓர் உயர்மட்ட அமைச்சர் குழுவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத் தது. ஜே.ஆர் அரசாங்கத்தால் நயவஞ்சக நோக்கத்தோடு அனுப்பிவைக்கப்பட்ட இந்தக் குழுவில் மகாவலி அபிவிருத்தித்திட்ட அமைச் சர் காமினி திஸாநாயக்கா, விஞ்ஞான கைத் தொழில் அமைச்சர் சிறில் மத்தியூ போன்ற அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப் பாணம் சுபாஸ் விடுதியில் தங்கியிருந்தார்கள். இவர்களோடு யாழ்ப்பாண நகர் எங்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற காவற்றுறையினரும் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டனர். முப்படை களும் யாழ்ப்பாண நகர் எங்கும் பரவலாக நிறுத்தப்பட்டிருந்தனர். இவர்களைவிடப் பெருந்தொகையான சிங்களக் குண்டர்கள், காடையர்கள் தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாண நகரை எரியூட்டுவதற்கு ஏற்ற வகையில் தயார் நிலையில் வைக்கப் பட்டிருந்தனர்.

இவ்வாறாக யாழ்ப்பாண நகரம் ஒரு கொதி நிலையில் இருந்தபோது 1981ஆம் ஆண்டு மே மாதம் முப்பத்தோராம் திகதி யாழ்ப் பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்னால் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றக் கொண்டிருக்கும்போது திடீரென வெடிச்சத்தம் கேட்டது. அடையாளம் தெரியாதோர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிர யோகத்தில் ஒரு சிங்களக் காவற்றுறையினன் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அவ்விடத் திற்கு வந்த யாழ்ப்பாணக் காவற்றுறை நிலை யத்தைச் சேர்ந்த சிங்களக் காவற்றுறையினர் நாச்சிமார் கோயிலுக்குத் தீ மூட்டினார்கள். ஆலய சுற்றாடலில் நின்ற மக்கள் தாக்கப் பட்டார்கள். ஆலயத்திற்கு உள்ளே நின்ற பக்தர்கள் காவற்றுறையினரின் துப்பாக்கிப் பிடிகளாற் தாக்கப்பட்டார்கள். பலர் படுகாய முற்றார்கள். ஆலயத்திற்குள்ளே இருந்த விக்கிரகங்கள், சுவாமிகாவும் வாகனங்கள் தாக்கப்பட்டன. ஆலயத்திற்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த தேர் முட்டியும், தேரும் தீ மூட்டி எரிக்கப்பட்டன. நாச்சிமார் கோயில் சுற்றாடலிலிருந்த வீடுகள், கடைகள், வீட்டு வேலிகள் என்பன எரிக்கப்பட்டன. இதன் பின்னர் யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்த சிறீலங்காக் காவற்றுறையினர் யாழ்ப்பாண நகருக்குத் தீ மூட்டினார்கள். யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு முன்னாலிருந்த மகாத்மா காந்தி சிலை, யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கு முன்னாலிருந்த சோமசுந்தரப் புலவர் சிலை, யாழ்ப்பாணம் ஹட்டன் நெசனல் வங்கிக்கு முன்னாலிருந்த திருவள் ளுவர் சிலை, யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியி லிருந்த ஔவையார் சிலை என்பன அடித்து நொருக்கப்பட்டன. யாழ்ப்பாணம் முற்ற வெளியிலிருந்த தமிழாராய்ச்சி மாநாட்டு படு கொலைகளின் நினைவுத் தூபிகள் சிதைக்கப் பட்டன.

இதன் பின்னர் பருத்தித்துறை வீதி வழியாக அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிவேல் யோகேஸ்வரனின் வீட்டுக்குச் சென்று அவரிடமே அவரைப் பற்றி விசாரித் திருக்கிறார்கள். நிலைமையைப் புரிந்து கொண்ட யோகேஸ்வரன் தன் வீட்டுப் பின் மதிலால் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு ஓடி மயிரிழையில் உயிர்தப்பினார். நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின்


House and car of Mr. V. Yogeswaran, Jaffna MP, razed as fires burned citywide.

வீடும் வீட்டினுள்ளேயிருந்த அவரது காரி யாலயமும் சிங்களக் குண்டர்களால் தீயிட்டுப் பொசுக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு தரைமட்டமாக் கப்பட்டது. யோகேஸ்வரன் அவர்கள் 1981ஆம் ஆண்டு யூன், யூலை மாதம் வெளியான இந்தியா டுடே சஞ்சிகைக்கு அளித்த செவ் வியில் தனது வீட்டைக் கொளுத்தியவர்கள், கட்டைக் காற்சட்டையும் அரைக்கை பெனியனும் அணிந்து மதுபோதையிற் காணப்பட்டார்கள் என்றும், அவர்கள் சிங் களத்தில் கதைத்தார்கள் என்றும் குறிப்பிட் டிருந்தார்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

15.05.1985 குமுதினிப் படுகொலை





யாழ் தீபகற்பத்தின் தனித்துவமானதும், நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டதுமாக, 47.4 சதுர கி.மீ நிலப்பரப்பில் நெடுந் தீவுப் பிரதேசம் அமைந்துள்ளது. தீவுகளில் பெரும் விசாலமான நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வந்தார்கள். நெடுந்தீவில் வாழும் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கடல் கடந்து படகுகளில் பிரயாணம் செய்வது தவிர்க்க முடியாததாக இருந்தது. நெடுந்தீவு மக்களின் கடல் போக்குவரத்திற்கு குமுதினிப் படகுச் சேவையே பெரிதும் உதவியது. இப்படகுச் சேவை நாளாந்தம் காலை 7.00 மணிக்கு நெடுந்தீவு துறை முகத்திலிருந்து குறிகட்டுவானுக்கும் பின்னர் மாலை 5.00 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுத் துறை முகத்துக்கும் பயணிக்கும்.

1985ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி குமுதினிப் படகு வழமை போல தனது சேவையை ஆரம்பித்தது. அன்று ஏறக்குறைய இப்படகில் அறுபதிற்கும் மேற்பட்ட பயணிகள் பிரயாணம் செய்தார்கள். நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து குறிகட்டுவான் நோக்கி வந்து கொண்டிருந்த சமயம், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்துள்ள நயினாதீவில் முகாமிட்டிருந்த கடற்படையினரின் பீரங்கிகள் பொருத்தப்பட்ட இரண்டு விசைப்படகுகள் குமுதினிப் படகினை அண்மித்த போது அதில் பயணித்த மக்கள் அச்சம் கொள்ளத் தொடங்கினர். அவ்விரண்டு விசைப்படகுகளில் கடற்படையினர் தங்களுடன் கோடரி, கத்தி, அரிவாள் போன்ற கூரிய ஆயுதங்களையும் எடுத்து வந்திருந்தனர். இதைப் பார்த்த மக்கள் செய்வதறியாது கதறி அழுதார்கள். வந்த கடற்படையினர் குமுதினிப் படகினுள் இருந்த மூன்ற மாதக் குழந்தை உட்பட அனைத்துப் பய ணிகளையும் ஒவ்வொருவராகக் கீழ்தளத்திற்கு அழைத்து மற் றவர்கள் அறியாமல் தாங்கள் எடுத்து வந்த கூரிய ஆயுதங் களால் வெட்டிக் கொன்றனர். இத்தாக்குதலில் நாற்பத்திரண் டிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமது அங்கங்களை இழந்தார்கள். அவர்கள் அனைவரும் மாலை கரையொதுங்கிய குமுதினிப் படகிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்





செல்லப்பட்டார்கள் சம்பவம் தொடர்பாக நெடுந்தீவைச் சேர்ந்த எஸ். புஸ்பராணி தெரிவிக்கையில்,

“அனுராதபுரத்தில் நடைபெற்ற கொடூரச் சம்பவத்திற்குப் பதிலடியாகவே இக் குமுதினிப் படுகொலை நடைபெற்றது. இதில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். இதில் எனது உறவினர் பலர் இறந்துள்ளனர். இச் சம்பவத்தில் நான் வெட்டிக் காயப் படுத்தப்பட்டேன். கர்பிணித் தாய்மாரைத் தாக்கும் போது வயிற் றிலுள்ள குழந்தை “கொட்டியா”என்ற கூறித் தாக்கினார்கள். பெண்கள், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி பலர் தாக்கப் பட்டனர்”.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

1. பசுபதி நிர்மலாதேவி, 20, -
2. கந்தையா சதாசிவம், 26, ஆசிரியர்
3. ஜேசுதாசன், 46, கடற்றொழில்
4. மாரியம்மா, - , -
5. ஆ.கனகலிங்கம், 34, கடற்றொழில்
6. தில்லைநாதன், 32, கடற்றொழில்
7. ஞானப்பிரகாசம் மரியமாணிக்கம், 45, கடற்றொழில்
8. சடையர் கோவிந்தன், 46, கடற்றொழில்
9. செபமாலை அந்தோனிப்பிள்ளை, 45, கடற்றொழில்
10. செபமாலை கிருஷ்டி, 24, -
11. நிமிலி, 18, -
12. அனுகூஷியா, 23, -
13. பேர்ணாட் கிறார் பூரணம், -
14. வெ.கந்தையா, 44, கடற்றொழில்
15. செ.சந்திரகுமார், 30, கடற்றொழில்
16. தருமலிங்கம் பாபு, 13, -
17. குமாரசாமி விநாயகம், 38, கடற்றொழில்
18. சபாபதி தெய்வானை, 68, கடற்றொழில்
19. ஞானப்பிரகாசம் தேவசகாயம், 42, கடற்றொழில்
20. வைத்திலிங்கம் சதாசிவம், 45, கடற்றொழில்
21. இராமன் முருகன், 52, கடற்றொழில்
22. கரையூர் சின்னையா, 35, அரச ஊழியர்
23. முத்தன் மணிவண்ணன் , 13, -
24. றொகேசியன் சந்திரகுமார், 18, மாணவன்
25. தொப்பை நாகேந்திரம், 23, -
26. சின்னவன் அந்தோனி, 65, -
27. இராமநாதன், 16, -
28. வேலுப்பிள்ளை புஸ்பராசா, 22, -
29. ஞானசேகரம், 28, தபால்அதிபர்
30. விசுவலிங்கம் சுபாஜினி, 07 மாதம், -
31. கனகம்மா, 55, கடற்றொழில்
32. பழனி மோகநாதன், 27, கடற்றொழில்
33. தர்மலிங்கம் அமிர்தலிங்கம், 18, -
34. பசுபதி நிர்மலாதேவி, 19, மாணவி
35. நவசிவாயம் கந்தையா, 45, ,.போ.சஓட்டுநர்
36. இராமலிங்கம் பரலோகநாதன், 35, கமம்
37. கார்த்திகேசு, 45, -
38. க.பார்வதிப்பிள்ளை, 40, -
39. சி.நாகேந்திரன், 32, கடற்றொழில்
40. குசலகுமாரி, 28, -
41. சாந்தலிங்கம், - , -
42. ஞா.சரோஜாதேவி, 24, ஆசிரியர்



பெரியபுல்லுமலை படுகொலை – 20 மே 1980

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார். 1980ம் ஆண்டு மே மாதம் இருபதாம் திகதி இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப் பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவா மடுவில் வைத்துக் கொலைசெய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங்களாகக் கொல்லப்பட்டனர்.

நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர். அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 1986.11.10 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்துமூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)


தோணிதட்டாமடு படுகொலை – 27 மே 1987

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தோணிதட்டாமடு என்னும் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் எல்லைக் கிராமங்களாகச் சிங்களக் கிராமங்கள் அமைந்துள்ளது. இயற்கை வளம் மிகுந்த இக்கிராம மக்கள் தமக்கான தனித்துவமான கலை, கலாச்சார, முறைகளையும் பாதுகாத்து சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். குறிப்பாக அயல் சிங்கள கிராமத்திலேயே தமது அத்தியாவசிய தேவைப பொருட்களைக் கொள்வனவு செய்து வந்தார்கள்.

25.05.1987 அங்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோணிதட்டாமடு மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் அச்சமடைந்த மக்கள் வீடுகளிற்குள் பதுங்கிக்கொண்டனர்.

பின்னர் 27.05.1987 அன்று இரவு இரண்டு மணியளவில் இக்கிராமத்தை சுற்றிவளைத்து உள் நுழைந்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சுட்டும் வெட்டியும் மக்களைப் படுகொலை செய்தனர். இச்சம்பவத்தில் பதின் மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



அல்வாய் வேலிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் செல்வீச்சு – 29 மே 1987

யாழ் மாவட்டத்தில் கரவெட்டிப் பிரதேசத்தில் அல்வாய்க் கிராமம் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் இருநூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்தது. விவசாயக் குடும்பத்தை சேர்ந்த வள்ளிநாச்சியார் என்பவர் இந்தியாவிலிருந்து தருவித்த கருங்கற் சிலையைத் தனக்குச் சொந்தமான வேவிலந்தை என்ற காணியில் வைத்து வழிபட்டு வந்தார். ஆரம்பகாலத்தில் அச்சிலையை வழிபட்டு வந்த மக்கள் காலப்போக்கில் பெரிய ஆலயமாகக் கட்டினார்கள். வீதியின் முன்பாக பெருவிருட்ச மரங்கள் காணப்படுவதோடு, வடமராட்சிப் பகுதியில் இந்துக்களின் பிரசித்தமான ஆலயங்களில் இதுவும் ஒன்றாகவுள்ளது.

1987 மே இருபத்தாறாம் நாள் சிறீலங்கா இராணுவத்தினர் வடமராட்சிப் பகுதிமீது கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்க மற்றும் இராணுவ அதிகாரிகளான லலித் கொத்தலாவல, கொப்பேகடுவ போன்றோர் தலைமையில் ஒப்பிரேசன் லிபரேசன் என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். பலாலி இராணுவத் தளத்திலிருந்து எறிகணை வீச்சு, கடற்தாக்குதல், ஆகாயதாக்குதல் என மும்முனைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை உலங்குவானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்களைப் போட்டதுடன், பலாலியிலிருந்து ஒலிபரப்புச் செய்யப்பட்ட வானொலிச் சேவை மூலமும் மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்கும்படி இராணுவத்தினர் அறிவித்தார்கள்.

29.05.1987 அன்று இராணுவத்தின் இந்த அறிவிப்புகளைச் செவிமடுத்த மக்கள் அச்சமடைந்து, கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு முத்துமாரியம்மன் கோயிலில் பாதுகாப்புக்காகத் தஞ்சமடைந்தனர். இதில் அல்வாய்க் கிராமத்தை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி இன்பருட்டி, திக்கம், வதிரி, நெல்லியடி, தம்பசிட்டி, புலோலி, கரவெட்டி ஆகிய இடங்களிலிருந்தும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இவ் அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். ஆலயம் பெரிய ஆலயமாகவும், விசாலமான வீதிகள், பெரிய மர நிழல்கள் கொண்டிருந்தமையாலும் அத்தனை மக்களும் அங்கு தங்கக் கூடியதாக இருந்தது.

29.05.1987 அன்றையதினம் மாலை 7மணிக்கு அம்மன் கோயில் உள்மண்டபம் மக்களால் நிறைந்திருந்தது. இரவு 9.00 மணியளவில் வெளிவீதி எங்கும் ஒரே மக்கள் கூட்டம். இரவு 11.00மணியளவில் இராணுவத்தினரால் வீசப்பட்ட எறிகணை ஆலயத்தின் முன்னுள்ள வேப்பமரத்தில் வீழ்ந்து வெடித்தது. இதில் சிலருக்குக் காயம் ஏற்பட்டது. அடுத்த எறிகணை உள்மண்டபத்தில் கொடிக்கம்பத்தின் அருகில் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து வந்த எறிகணை வசந்த மண்டபத்தில் வீழ்ந்ததினால் அவ்விடத்திலிருந்த இளைஞர்கள் உயிரிழந்தார்கள். இவ்வாறு மூன்று எறிகணைகள் ஆலயத்தில் வீழ்ந்து வெடித்ததால், ஆலயத்தில் ஒரே அவலக்குரல் எழுந்தது.

அச்சமடைந்ததால் பாதுகாப்பைத் தேடிய மக்கள் நான்கு திசைகளிலும் சிதறி ஓடினார்கள். ஆலயம் இரத்த வெள்ளமானது. இதில் யார் யார் உயிரிழந்தார்கள் என்று அடையாளம் காண முடியாதளவிற்கு உடல்கள் சிதைந்திருந்தன. இராணுவத்தின் அறிவுறுத்தலின்படி பாதுகாப்பைத் தேடி ஆலயத்தில் தஞ்சமடைந்த பொதுமக்களில் நாற்பது பேர் வரை எறிகணை வீச்சில் உயிரிழந்தாஉர்கள். இருபத்திரண்டு பேர் வரை காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இரத்தினம் மாணிக்கம் வீட்டுப்பணி 65
02. நாகமுத்து சோதிலிங்கம் கடற்றொழில் 63
03. நற்குணம் சந்திரசேகரம் மாணவன் 08
04. க.சட்டநாதன் கமம் 54
05. கந்தர் மார்க்கண்டு தொழிலாளி 67
06. கதிர்காமு கிட்ணபிள்ளை வியாபாரம் 61
07. கதிர்காமத்தம்பி யோகானந்தன் மாணவன் 12
08. கதிர்காமத்தம்பி செல்வானந்தன் மாணவன் 14



09. கதிரித்தம்பி வள்ளிப்பிள்ளை 77
10. குமாரன் நல்லதம்பி தொழிலாளி 60
11. கணேஸ் அம்பிகாபதி 48
12. கணேசபதி சதாகரன் கமம் 16
13. கணபதிப்பிள்ளை சின்னத்துரை கமம் 60
14. கணபதிப்பிள்ளை சிவகாமி 69
15. பிறேமானந்தராசா தொழிலாளி 27
16. பஞ்சாட்சரம் தர்மகுலராசா கமம் 28
17. துரைசிங்கம் கலாவதி 26
18. தம்பிஜயா றமணன் மாணவன் 18
19. தங்கமயில் சுஜாதா மாணவி 16
20. தவராசசிங்கம் கமலேஸ்வரி 38
21. தவராசசிங்கம் அனுபாமா மாணவி 06
22. தணிகாசலம் தர்மேந்திரம் மாணவன் 08
23. மார்க்கண்டு நகுலேஸ்வரன் தொழிலாளி 34
24. மார்க்கண்டு செல்லம்மா கைப்பணி 58
25. மாசிலாமணி சுதன் குழந்தை 01
26. மாணிக்கம் உசாராணி குழந்தை 03
27. மாணிக்கம் நாகேந்திரராஜா மாணவன் 13
28. மாணிக்கம் மல்லிகாதேவி வீட்டுப்பணி 41
29. யோகராசா ரதி 2.5
30. செல்லையா நாகம்மா வீட்டுப்பணி 50
31. சி.மாணிக்கம் தொழிலாளி 57
32. சிவனடி இராமநாதன் வைத்திய ஊழியர் 22
33. சிவலிங்கம் அன்னம்மா வீட்டுப்பணி 65
34. சண்முகம் பூலோகநாதன் மாணவன் 16
35. வ.மாரிமுத்து தொழிலாளி 54
36. விசுவலிங்கம் இராசகோபால் விவசாயம் 30
37. ரவீந்திரன் செல்லமணி வீட்டுப்பணி 30

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இ.குணசேகரன் மாணவன் 12
02. நகுலன் மாணவன் 06
03. கு.இராசலிங்கம் கடற்றொழில் 51
04. க.குணரட்னம் வீ.பணி 32
05. கந்தையா கலைமதி மாணவி 06
06. குலநாயகம் விஜயசோதி வீட்டுப்பணி 35
07. தம்பிஜயா புவனேஸ்வரி வீட்டுப்பணி 46
08. ம.வேல்மணி தொழிலாளி 32
09. மாணிக்கம் யோகராணி வீட்டு வேலை 17
10. மாணிக்கம் சுவேந்திரராஜா மாணவன் 05
11. ஆழ்வாப்பிள்ளை இராஜமலர் மாணவி 09
12. ஆழ்வாப்பிள்ளை சரச்சந்திரன் மாணவன் 13
13. ஜெனார்த்தனன் மாணவன் 07
14. வே.இந்திரராணி வீ.பணி 30
15. வேலுப்பிள்ளை தம்பிஜயா குருதி பரிசோதகர் 46
16. சு.கந்தசாமி தபாலதிபர் 54
17. ச.கண்ணதாசன் மாணவன் 08
18. சு.செல்வதி வீ.பணி 24
19. சு.செல்வராசா மாணவன் 06
20. ச.சண்முகதாசன் மாணவன் 10
21. சி.வசந்தாதேவி வீ.பணி 38
22. விக்கினேஸ்வரன் இந்திராணி வீட்டுவேலை 21

வற்றாப்பளைப் படுகொலை – 18 மே 1992

வடகிழக்கு மாகாணத்திலேயே சைவ மக்கள் மத்தியில் புகழ்பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் ஓரத்தில் அமைந்துள்ளது. ஆண்டு தோறும் வைகாசியில் வருகின்ற பூரணை தினத்தன்று பொங்கல் நிகழ்வு சிறப்புற நடைபெறுவதும், அதில் சிறீலங்காவின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக் கணக்கான பக்தர்கள் வந்து பொங்கலைச் சிறப்பிப்பதும் வழக்கமாக இருந்த காலத்தில் 1990ஆம் ஆண்டிலிருந்து இராணுவ அச்சுறுத்தல் காரணமாக குறிப்பிட்ட ஒரு தொகைப் பக்தர்களைக் கொண்டே வருடாந்தப் பொங்கல் நிகழ்வு நடைபெறலாயிற்று.

வழமைபோல 18.05.1992 அன்று வற்றாப்பளைப் பொங்கல்தினம். சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர் உச்சிக்காலப் பூசை நடைபெற்றுக்கொண்டிருந்த பி.ப 12:45 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் பத்துப் பொதுமக்கள் அவ்விடத்திலேயே உடல் சிதைக்கப்பட்டு உயிரிழந்ததுடன், ஏனைய ஐந்து பேர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார்கள் அறுபது பேர்வரை காயமடைந்தார்கள்.

இத்தாக்குதலில் கணவரையிழந்த யோகேஸ்வரி சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கையில்,
“வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கற் திருவிழா நேரத்தில் காவடிகளை வைத்து வாடகைக்கு வழங்கி வந்தோம். வழமைபோல் அன்றும் கணவரும் மகனும் காவடி எடுக்கும் இடத்திலும் நானும் மற்றப் பிள்ளைகளும் கோயிலுக்கு உட்புறத்திலும் நின்றிருந்தோம். அந்த வேளைதான் சிறீலங்கா இராணுவம் முல்லைத்தீவு முகாமிலிருந்து எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டது. ஓடிச் சென்று பார்க்கும்போது உடல் முழுதும் காயங்களுடன் மகனைக் கிடத்தியிருந்தார்கள். மகனுடன் அழுதுகொண்டிருக்கும் போது தகப்பனைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். தகப்பன் இறந்துவிட்டதால் அழுது புலம்பத்தான் முடிந்தது. அப்படியே நானும் மயக்கமுற்று விழுந்துவிட்டேன். கணவர் இறக்கும்போது மூன்று மாதக் கர்ப்பிணியாகவும் மூன்று பிள்ளைகளின் தாயாகவும் இருந்தேன். எல்லோரும் சின்னப் பிள்ளைகள். சரியாகக் கஸ்ரப்பட்டுத் தான் பிள்ளைகளை வளர்த்தேன். தகப்பனின் காவடித் தொழிலையும் விடாமல் கூலி வேலை செய்து சீவித்து வருகின்றோம். பிள்ளைகளும் வளர வளர செலவுகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. தற்போதுகூட சரியான கஸ்ரத்தின் மத்தியிற் சீவிக்கின்றோம்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. நவரத்தினசாமி யுவராசினி மாணவி –
02. நவரத்தினசாமி சிவசேகரம் – –
03. நவரட்ணம் இந்துஜா மாணவர் 12
04. நவரட்ணம் சிவனேசம் வீட்டுப்பணி 32
05. நவரட்ணம் ராஜிதா மாணவர் 10
06. குழந்தைவேலு ஜெகதீஸ்வரன் தொழிலாளி –
07. குழந்தைவடிவேல் ஜெகதீஸ்வரன் விவசாயம் 24
08. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் மாணவர் 17
09. தம்பிராசா சிறீஸ்கந்தராசா விவசாயம் 33
10. மரியபிரகாசம் அந்தோனி தனியார்தொழில் 35
11. யோகராசா வதனி வீட்டுப்பணி 19
12. சதாசிவம் நவரட்ணம் கடற்றொழில் 36
13. சிறிஸ்கந்தராசா மாணவர் 09
14. சண்முகலிங்கம் – 42



காயமடைந்தவர்களின் விபரம் (இல பெயர் தொழில் வயது)

01. இந்துஜா மாணவி 06
02. ஈஸ்வரன் – 21
03. கனகேஸ்வரன் – 20
04. கார்த்திகேசு நித்தியராசா – 18
05. குமாரசாமி கணேசசுந்தரம் – 16
06. கணேசலிங்கம் புனிதா குழந்தை 03
07. முருகையா – 24
08. நேசம் – 32
09. வெற்றிவேலு மதிவதனம் – 13
10. றெஜித் – 27
11. சாந்தினிதேவி – 16
12. சண்முகலிங்கம் சந்திரசேகர் – 16
13. வடிவேலு – 40
14. விஜயரட்ணம் மாணவன் 07

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் – தமிழினப் படுகொலைகள் (1956-2008)

புல்லுமலை படுகொலை – 1986 ... 1990

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார்.

20.05.1980அன்று இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்புக் கென அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலைசெய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து வந்த முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங்களாகக் கொல்லப்பட்டனர்.

நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர்.

அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 10.11.1986 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்துமூன்று ஆண்கள் என இராணுவத் தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத் தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

தெல்லிப்பளை ஆலயப் படுகொலை – 30 மே 1992

யாழ்ப்பாணத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியிலுள்ள தெல்லிப்பளைப் பிரதேசத்தில் துர்க்காபுரம் எனும் கிராமம் அமைந்துள்ளது. இங்கு வரலாற்றுப் புகழ்மிக்க பல ஆணடுகள் பழமைவாய்ந்த தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

பலாலி இராணுவத்தள விரிவாக்கத்திற்காக பலாலி முகாமை அண்மித்த பகுதிகள் மீது எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் நடத்தியவாறு சிறீலங்கா இராணுவத்தினர் முன்னேறிப் படைமுகாமை விரிவாக்கினார்கள். இவ்விராணுவ நடவடிக்கைக்கு அஞ்சிய வசாவிளான், குரும்பசிட்டி, தையிட்டி, மயிலிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்தார்கள். இவர்களில் பல குடும்பங்கள்அகதிகளாக தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்ததுடன், ஆலயத்தில் வெள்ளைக்கொடியையும் பறக்கவிட்டனர்.

30.05.1992 நண்பகல் 12மணியளவில் விமானப்படையின் இரண்டு "அவ்ரோ" விமானங்கள் மக்கள் தங்கியிருந்த ஆலயம் மீது ஐந்திற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியது. அதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மொத்தம் ஐவர் உயிரிழந்தனர். பத்திற்கும் அதிகமானோர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள். ஆலயத்தின் கோபுரம், பொங்கல் மண்டபம், வசந்த மண்டபம், ஆலய சுற்றாடலிலுள்ள வீடுகளெனப் பல கட்டடங்கள் பலத்த சேதத்திற்குள்ளானது. மீண்டும் இராணுவத்தினர் 1993ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆலய வருடாந்த மகோட்சவ காலப்பகுதியில் சப்பறத் திருவிழா அன்று, பக்தர்கள் கூடியிருந்த வேளை காலை 10.00மணியளவில் ஆலயப் பகுதிநோக்கி பலாலியிலிருந்து எறிகணைவீச்சினை நடத்தினர். அதேநேரம் விமானப் படை விமானத்தாக்குதலை நடாத்தியது.

இத்தாக்குதல்களில் ஒரு பக்தரும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தங்கியிருந்த யுவதி, அருகிலுள்ள வீடுகளில் தஞ்சம் புகுந்த ஆசிரியர்களென ஐந்து பேர் உயிரிழந்தார்கள். ஐந்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆலயப்பகுதி மீண்டும் பலத்த சேதத்திற்கு உள்ளானது. அன்றையதினம் பலாலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சினால் ஆலய அன்னதான மண்டபத்தில் சமையலில் ஈடுபட்டவர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், மூன்று பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசதுரை மனோகரன் சுருட்டு வேலை 28
02. ஜயம்பிள்ளை மகேந்திரன் கூலி 31
03. கந்தையா இளையதம்பி ஓய்வூதியர் 65
04. பத்மநாதன் மயூரன் மாணவன் 22
05. வைத்தியலிங்கம் வசீகரா வர்ணம் பூசுபவர் 23
06. செல்லத்துரை செல்வகாந்தராசா - 32
07. வேலாயுதம் நந்தகுமார் மாணவன் 11
08. வேலாயுதம் வினோதகுமார் குழந்தை 1
09. சுப் பிரமணியம் கனகராணி விற்பனையாளர் 38
10. சின்னக்குட்டி காசிப்பிள்ளை கமம் 71

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

தம்பிராய் சந்தை குண்டுவீச்சு – 17 மே 1996

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கே இருபது கி.மீ. தூரத்தில் பூநகரி அமைந்துள்ளது. பூநகரிப் பிரதேசத்திற் காணப்படுகினற் வயலும் வயல் சார்ந்த ஒரு சிறிய கிராமம் தம்பிராய் கிராமம் ஆகும். இங்குள்ளவர்களின் பிரதானதொழில் விவசாயமாகும்.

1996ஆம் ஆண்டு ஏ -9 பிரதான வீதியை மையமாகக் கொண்ட இராணுவ நடவடிக்கை நடைபெற்ற காலப்பகுதியாகும். அக்காலப் பகுதியில் 1996 மே பதினேழாம் திகதி காலை பூநகரி தம்பிராய்ப்பகுதி மக்கள் மீது முற்பகல் பத்து மணியளவில் பூநகரி வான் பரப்பினுள் வந்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "கிபீர்" விமானங்கள் பல தடவைகள் வானில் வட்டமிட்டன. இதனால் தம்பிராய்ச் சந்தையில் நின்ற மக்கள் அச்சத்தினால் அங்கு மிங்கும் ஓடினார்கள், இவர்களில் சிலர் ஒரு பனங் கூடலினுள் பாதுகாபபு தேடி ஒழிந்து கொண்டார்கள். கிபீர் விமானங்கள் வீசிய குண்டுகள் பனங்கூடலினுள்ளும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் விழுந்து வெடித்ததால், ஐந்து பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகியதுடன், ஒன்பது பேர் காயமடைந்தார்கள். மேலும் படுகாயமடைந்தவர்களில் இரண்டு பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட தம்பிராயைச் சேர்ந்தந்த சூசைப்பிள்ளை பிரான்சிஸ்சின் மனைவியான றீட்டம்மா சம்பவத்தைப் பற்றி குறிப்பிடுகையில்,

"1996ஆம் ஆண்டு மே மாதம் பதினேழாம் திகதி வெள்ளிக்கிழமை என்னுடைய நான்கு பிள்ளைகளில் மூவர்பாடசாலைக்குச் சென்ற நிலையில் கடைசிப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு எமது தோட்டத்திற்குப் போனேன். என்னுடைய கணவர் பொருட்கள் வாங்குவதற்காக தம்பிராய்ச் சந்திக்குப் போயிருந்தார். அந்தவேளை வானில் வந்த குண்டுவீச்சு விமானங்கள் தம்பிராய் சந்தியிற் குண்டுகளைப் போட்டன. உடனே கணவர் மற்றும் பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்று அஞ்சினேன். அயலவர்கள் வந்து தேற்றிய போதும் எனது பிள்ளையையும் கூட்டிக்கொண்டு சம்பவ இடத்திற்குப் போய்ப் பார்த்தவேளை எனது கணவரின் உடல் முழுதும் குண்டுச் சன்னங்கள் துளைத்த நிலையில் சடலமாக இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. அதைப் பார்த்த நான் என்னசெய்வதென்றே தெரியாத நிலையில் மயக்கமடைந்து விழுந்து விட்டேன். பின்னர் என்னையும் எனது கணவரையும் என்னுடைய அண்ணா வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். அதன் பின்னர் கணவரை அடக்கம் செய்தோம். இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் எனது கணவர் உட்பட ஐந்து பேர் அவ்விடத்திலேயே கொல்லப் பட்டார்கள் என்பதுடன், மற்றும் ஒன்பது பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் இருவர் பின்னர் இறந்துவிட்டனர். பாதிக்கப் பட்ட அனைவரும் எங்களைப் போன்று வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள்."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை பிரான்சிஸ் சீவற்றொழில் -
02. இரத்தினம் பாலச்சந்திரன் கமம் 29
03. கந்தையா தேவராசா கமம் -
04. தங்கவேலு ரவிச்சந்திரன் சீவல் 34
05. அப்புத்துரை சௌந்தார் ராஜன் சீவல் 35
06. சின்னத்துரை கேதீஸ்வரன் கமம் 29
07. வீரகத்தி அலிஸ்ரின் கடற்றொழில் 28

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. துரைசாமி. தொழிலாளி 75
02. பொன்னம்பலம் - -
03. செல்லையா பூரணம் வியாபாரி 60
04. சந்திரபாலு ஈஸ்வரன் முகாமையாளர் 24

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல் 23 மே 2008

கிளிநொச்சி இரணைமடு பாரதிபுரம், மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் 23.05.2008 அன்று ஹைஎஸ் வாகனம் ஒன்றில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த உறவினர் ஒருவரைப் பார்வையிட்டுவிட்டு தமது வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வாகனத்தில் பல சிறவர்களும் பயணித்துக் கொண்டிருந்தனர். அவ்வேளை பிற்பகல் 2மணியளவில் திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கிச் செல்லும் வழியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அவர்களின் வாகனம் மீது சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர்த்தாக்குதலினை மேற்கொண்டனர்.
இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த



05பேர் உட்பட 15பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். கொல்லப் பட்டவர்களில் நால்வர் சிறுவர்கள். படுகாயமடைந்த மூன்று பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்திசயாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் மேலும் ஒரு சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். இச்சம் பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான குடும்பநிலைமையைப் பார்த்தால் மிகவும் பரிதாப நிலைமையை உணரமுடியும்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பெரியசாமி விஜயரட்ணம், 40
02. விஜயரட்ணம் லோகநந்தா, 39
03. விஜயரட்ணம் சிவகலா, 16
04. விஜயரட்ணம் தனு, 09
05. விஜயரட்ணம் விதுசன், 07
06. பன்னீர்செல்வம் அழகுராணி, 42
07. கணேசன் தனராஜ், 34
08. சந்திரசேகரன் கீர்த்திகா, 10
09. சாமிக்கண்ணு கறுப்பையா, 40



10. கறுப்பையா அன்னலட்சுமி, 40
11. அழகன் சுப்பிரமணியம், 40
12. சுப்பிரமணியம் சரஸ்வதி, 40
13. செல்வராசா கலாதேவி, 34
14. சுப்பிரமணியம் தனலட்சுமி, 54
15. சந்திரசேகரம் கார்த்திகா, 10
16. இராஜேந்திரம் கலாவள்ளி, 29

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல்
23 மே 2008























முல்லைத்தீவு பாதுகாப்பு வலயம் – 10.05.2009

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட மீட்புப் பணியாளர்கள் கொத்துக் குண்டுகள், பல்குழல் ரொக்கட் ஏவுகணைகள் மற்றும் பீரங்கிகளைப் பயன்படுத்தி இலங்கை இராணுவத்தால் சனிக்கிழமை 09.05.2009 இரவு மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை பாரிய அளவில் படுகொலை செய்யப்பட்ட பின்னர் 1200 க்கும் மேற்பட்ட சடலங்களை எண்ணியுள்ளனர் என்று வன்னியில் இருந்து தகவல்கள் தெரிவிகப்பட்டது. இன்னும் கூடுதலான உடல்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கலாம் என்றும், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை உயரக்கூடும் என்றும் தொழிலாளர்கள் அஞ்சுகின்றனர். பல நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்துள்ளதாகவும், முள்ளிவாய்க்காலில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் மருந்துப் பற்றாக்குறை இன்னும் பல உயிரிழப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். இதேவேளை, முள்ளிவாய்க்கால் வைத்தியசாலை ஊழியர்கள், பிற்பகல் 3.00 மணி வரை தெரிவித்துள்ளனர். மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட உடல்களின் எண்ணிக்கை 378, காயமடைந்தவர்கள் மொத்தம் 1122. இறந்தவர்களில் 106 பேர், காயமடைந்தவர்களில் 251 பேர் குழந்தைகள் என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.














மருத்துவமனை மீது சிங்கள இராணுவம் தாக்குதல் – 12.05.2009

செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் இலங்கை இராணுவம் பீரங்கி குண்டுகளை வீசியதில் குறைந்தது 47 பொதுமக்கள், நோயாளிகள் மற்றும் நிர்வாக அதிகாரி கே.தர்மகுலசிங்கம் கொல்லப்பட்டனர். முள்ளிவாய்க்காலில் இயங்கி வந்த தற்காலிக மருத்துவமனை மீதான தாக்குதலில் குறைந்தது 55 நோயாளிகள் படுகாயமடைந்தனர். முள்ளிவாய்க்கால் சிறுவர் பள்ளி. கடந்த 3 நாட்களுக்குள் சுமார் 2,000 காயமடைந்த நோயாளிகள் கப்பலில் ICRC கொண்டு செல்லப்படுவதற்காகக் காத்திருந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டது. வன்னியில் கடந்த 3 நாட்களில் 2,600க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இலங்கைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் சண் முகராஜா மற்றும் அவரது குடும்பத்தினர் தாக்குதலில் இருந்து சிறிது நேரத்தில் தப்பினர்.

சுமார் 2,000 பொதுமக்களில் 500 பேரை ஏற்றிச் செல்வதற்கான ICRC கப்பல் செவ்வாய் கிழமை முள்ளிவாய்க்கால் சென்றடைய திட்டமிடப்பட்டது.











சிங்கள இராணுவம் முள்ளிவாய்க்கால் மருத்துவமனை மீது தாக்குதல் – 13 மே 2009

முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையில் பலியானவர்களில் பலர் குழந்தைகள் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். புதன்கிழமை படுகாயமடைந்தவர்களில் 40 பேர் குழந்தைகள்.

அவர்களின் தலைக்கு மேல் ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியில் தெற்கு நோக்கி நகரும் வாகனங்களால் சாலை நெரிசலாக இருந்ததால் மருத்துவமனை வளாகத்திற்கு வெளியே ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை. கடந்த 24 மணி நேரத்தில் 200 முதல் 500 பேர் வரை கொல்லப்பட்டதாக ஆரம்ப மதிப்பீடுகள் உள்ளன.

பாதுகாப்பு வலயத்திற்குள் 2,000க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் சுமார் 1,000 நோயாளிகள் அவசரமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற உள்ளனர், ஆனால் மருந்துகள் இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். படுகாயமடைந்த 250 பேருக்கு புதன்கிழமை சிகிச்சை அளிக்கப்பட்டது. SLA சரமாரி மருத்துவமனையை சீர்குலைத்ததால் சிலருக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கப்பட்டது, மருத்துவ ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் பதுங்கு குழிகளின் கீழ் தங்குமிடம் தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஐ.சி.ஆர்.சி கப்பல் அவர்களை வெளியேற்றும் முன் காயங்களில் பலர் இறக்க வேண்டும். கடும் சண்டையால் காயமடைந்தவர்களை வெளியேற்ற முடியாமல் ஐசிஆர்சி கப்பல் திருகோணமலை துறைமுகத்திற்கு தொடர்ந்து இரண்டாவது நாளாக காலியாகத் திரும்பியது. கப்பலால் சுமார் 25 மெட்ரிக் டன் உணவு மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை இறக்க முடியவில்லை.

100 இறந்த உடல்களில் 30 உடல்கள் அடையாளம் காணப்பட்டு உறவினர்களால் கைப்பற்றப்பட்டன.

கொல்லப்பட்ட தன்னார்வ மருத்துவர் செந்தில் குமரன் என அடையாளம் காணப்பட்டது. மருத்துவமனை ஊழியர் கோபாலகிருஷ்ணனும் உயிரிழந்தார். கொல்லப்பட்ட ICRC ஊழியர் மயூரன் சிவகுருநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது தாயும் SLA யின் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

தற்காலிக மருத்துவமனையின் அருகாமையில் அடையாளம் காணப்பட்ட மற்றும் அடையாளம் காணப்படாத 75 சடலங்கள் இன்னும் உள்ளன. தற்போதுள்ள சூழ் நிலையில் இறந்தவர்களின் உடல்களை எடுக்க முடியாது என உறவினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலில் ஆம்புலன்சுகளும் சேதமடைந்தன.





25, 000 மேல் பட்ட பொது மக்கள் சிகிச்சை இன்றி உயிரிழப்பு – 17.05.2009


சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலில் காயமடைந்த சுமார் 25,000 பொதுமக்கள் தற்போது மருத்துவ சிகிச்சை பெறாமல் உயிரிழந்து வருவதாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஞாயிறு நண்பகல் தெரிவித்தார். வட்டுவாகல் அல்லது இரட்டை வாய்க்கால் ஊடாக காயமடைந்தவர்களை வெளியேற்றுமாறு திரு.பத்மநாதன் ஊடாக ஐ.சி.ஆர்.சி யிடம் புலிகள் பலமுறை கோரிக்கை விடுத்தும், அதற்கு ஐ.சி. 2 சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்குள், எல்லா இடங்களிலும் சடலங்கள் உள்ளன, மீதமுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் கொழும்பின் படைகளின் ஒவ்வொரு வகையான ஆயுதங்களையும் பயன்படுத்துவதற்கு மத்தியில் பதுங்கு குழிகளில் உள்ளனர். SLA ஆனது மக்களைத் தப்பியோட அனுமதிக்கவில்லை, ஆனால் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த விரும்புகிறது, சூசை கூறினார்.


என்ன நடக்கிறது என்று ஐசி கவலைப் படவில்லை. 25,000 பேரைத் தவிர இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் இப்போது காயமடைந்து கொல்லப்படுகிறார்கள். குறைந்த பட்சம் இப்போது செயல்பட்டால் அவர்களைக் காப்பாற்ற முடியும். மீட்புக்கான அறிகுறிகள் இருப்பதால் நாங்கள் தொடர்ந்து பாதுகாத்து வருகிறோம், என்றார்.


இதற்கிடையில், வன்னியில் இருந்து வரும் சமீபத்திய தகவல்கள், பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் SLA யால் பிடிக்கப்பட்டதாகவும், ஆனால் முதலில் அவர்கள் மீது எதேச்சையாக துப்பாக்கிச் சூடு நடத்தியதன் பின்னரே, பலரின் மரணம் மற்றும் காயம் ஏற்பட்டது.


2009ல் தமிழ் மக்களின் தலையில் சிங்கள அரசால் போடப்பட்ட அழிவாயுதங்களின் தடயங்கள் தமிழீழ மண்ணில் இவைகள். உலகம் இன்னும் மவுனமாக ஏன் இருக்கிறது ? தமிழர்கள் என்றபடியாலா?













"துவம்சம்" அல்லது "நினைவறா" நாள்
15.05.1985

குமுதினி ...
இந்தப் பெயரை,
உச்சரிக்கும் உதடுகள்- இன்றும் கூட
துக்கத்தால் ஒரு கணம்
ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்கின்றன!!

காகம் கத்தித் துயிலெழும் - என்
இனிய தீவினை ...
பட்டணத்தோடு இணைத்த
பாலம் அவள்!

அவள் மடிமீது ஏறிய பின்புதான்,
எங்களின் பனாட்டும், பாயும்...
ஓலையும், ஒடியலும் ...
பண நோட்டுக்களாக மாறின !!

பிரபஞ்ச உருண்டைக்குள் தான்,
எத்தனை பிரமிப்புகள் -அத்தனையும்
அந்தப் பாவைமீது காலை வைத்த - பின்புதான்
நாம் கண்டுணர முடிந்தது !!!

ஆயிரம் பேதம் சொல்லி,
பனம்கிழங்குக் கூறுகளாய்...
கிழிபட்டுக் கிடந்த என் மக்களை
"மனிதமே, நேயமென்று"
தன் மடிமீது சுமந்து ...
பரஸ்பரம் புரிந்துணர்வுள்ளவர்களாக்கிய
புண்ணியவதி அவள் !

பலனை எதிர்பாராமல்,
கடமையை மட்டும் செய்த
கீதை படிக்காத கோதை !

என் கையில் சுமந்த புத்தகங்கள் ...
காலில் நசிபடும் செருப்பு ...
தீபாவளிப் புத்தாடை ...
பொங்கலாய்ப் பொங்கும் புதுப்பானை ...
அப்புவையும்,ஆச்சியையும்,
கிடத்திவைத்த சவப்பெட்டிகள் ...
எல்லாமே ... எல்லாமே ...
அவள் சுமந்தவை !

கட்டுமரங்களுக்கும் கைவலி-வள்ளங்களுக்கும்
கல்தாக் கொடுத்துவிட்டுக்
கடும் வேகக் கப்பலாய் - என்
துறைமுகத்தில் மிதந்த அழகுராணி !

புள்ளிமானாய் துள்ளிக் குதித்து - அவள்
ஏழாற்றுப் பிரிவைக் கடக்கிறபோது ...
மலைபோல் உயரும் அலைகளும் - அவளிடம்
கைகட்டிப் பணிந்து,
மௌன நுரையாய் சிதறுண்டு போகும் !!

அதிகாலையின் பனிச்சிதறலோடு ...
அன்றும் அவள் - தன் அரும்புத்திரர்களோடு
புறப்பட்டுப் போனாள் !!

பிரளயம் என்பதை அறியா - அவளையே
பிரளயமாக்கின ஆயுதக் கூலிகள் !!

வெடித்து வீசியெறிந்த பட்டாசுத்
துண்டுகளாய் ..
காலறுபட்டு ... கையறுபட்டு ...
துடிக்கத் துடிக்க ...
அவ்ள் மடியில் உயிர் போன,
என்னுயிர்த் தங்கைகளின்
அழகான கனவுகள் பற்றி ...
இன்னமும் ... அவர்கள் ...
வாழ விரும்பிய வாழ்க்கையைப் பற்றி ...
பலமாதமாய், பவித்திரமாய், உருவாகி
கணப்பொழுதில் கருவுடனேயே ..
சிதையில் எரிந்த என் நண்பனின்,
மனைவி பற்றி ...

பதைக்கப்,பதைக்க
கொலையுண்டு கிடந்த
பச்சை மழலை பற்றி ...

மரணிக்கும் போதும்,
எதிரியிடம் மண்டியிடாது
உயிர் விட்ட என்னூர்- வீர
அன்னைகள் பற்றி ...
என்னினிய உணர்வில்
தமிழைக் கலந்து,
தன்னுயிரைக் கூலிப்படைக்கு
காவு கொடுத்திட்ட
தமிழாசிரியன் பற்றி ...
எவரைப்பற்றி ...
எவரைப்பற்றி ...
நான் புலம்பி அழ ?????

வெல்லை, பெருந்துறை ...
குடவிலி, குவிந்தா ...
எத்திசை நோக்கினும்
எங்கும் அழுகுரல் !!

கீழ்த்திசையிருந்து ...
பெருந்துறையீறாய்...
ஈக்களும் கூட இரையற்றிருந்த நாள்.

என்னூர்க் கொண்டைச் சேவலும்,
காக்கையும், கூட மார்பில்
அடித்த மரண நாளது !!

வீகாமனும்,வெடியரசனும்,
ஆண்ட திருத்தீவு
விம்மல்களால் நிறைந்த நாளது !

பூதத்தைக் கொண்டு பொழிந்த - கிணறுகளில்
நன்னமுத நன்னீர் குடித்த - மனிதர்களின்
கண்ணீர் பெருகிக் கரையுடைந்த நாளது .

இந்து மாக்கன்னியின்,
பொட்டெனப் போற்றிடும் ...
நெடுந்தீவகத்தின் உயிர்களின் பெறுமதி - கேவலம்
காட்டிலே வெட்டிய கால்நடை போன்றதா ??

ஈழதேசத்து மூளையாய்த் திகழும் - அழகிய
தமிழின் இலக்கணத்தீவு ...
அந்நியன் கண்ணில், துச்சமாய் ஆனதோ ???

கூவியெழும் அலைகளின் கூக்குரல் - இக்
காற்றில் தவழ்ந்து காதில் உறைக்கிறது.
மரணத்தை வென்ற மாமறவர் நீங்கள் !!
மண்ணின் மடிவெடித்து மறுபடியும் பிற்ப்பீர்கள்.


ஆழ்கடலிருந்து ...
அலைகடலின் மடியிருந்து ...
வெட்டத் தளைக்கும் மரங்களாய் ...-நீங்கள்
விட்ட இடமிருந்து விழுதுகளை எறிவீர்கள் !!!

"மா.சித்திவினாயகம்" - மாவிலி" மலரிலிருந்து ...



வீரவணக்கம்





எமக்கு ஒரு நாடு வேண்டும்
எமது மக்களுக்கு விடுதலை வேண்டும்
எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும்
என்ற ஆக்கிரோசமான இலட்சிய வேட்கையுடனே,
மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள் எனவே எமது
மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின்
விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப்
பிரகடனமாகவே சம்பவிக்கின்றது

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

என் கண்களே சாட்சி

பெண்ணிற் பெருந்தக்க

எஸ். பி. கிருஷ்ணன் (வேரற்கேணியன்)

ஒரு விருந்தாளி வந்திருந்ததையும் அவரைப் “பெரியப்பா” என வழித்து மகாலட்சுமி உபசரித்ததையும் உதிர்வீட்டில் இருந்து ஒருத்தி அவதானித்துக் கொண்டிருந்தாள். அவள் அந்த வீட்டில் வாடகைக்குக் குடியிருக்கும் வேற்றூர்க் குடும்பத்தின் மூத்த பிள்ளை தாட்சாயினி. சில நேரங்களில் மகாலட்சுமியின் வீட்டுக்கு வந்திருந்து பொழுது போக்குவாள். அவ்வகையில் இருவரும் சினேகிதிகளாயிருந்தனர்.

“என்னக்கா உங்கட கண் சிரிக்கிறாப் போல இருக்கு?” கேட்டுக்கொண்டே தாட்சாயினி வந்து நின்றாள்.

“கண்களும் சிரிக்குமா?...”

“ஓ... சிரிக்கும், கவி பாடும்... ஆரக்கா ஒரு அய்யா வந்திருந்து கதைச்சிட்டுப் போறார்... உங்கட சொந்தக்காரரா அக்கா?... பேசமாட மீங்களா?... நான் சொல்லட்டுமா?... பிரதீபன் அண்ணாவுக்குப் பொம்பிளை பார்க்கிறதைப் பற்றித்தானே?...”

“ஒட்டுக் கேட்டியா?...”

“இல்லை சில பேச்சுக்கள் என் காதிலும் விழுந்ததே...”

“அதெல்லாம் உனக்குத் தேவையில்லை போ” பொய்க்கோபங்காட்டி அவள் சொக்கைச் கிள்ளினாள் இவள்.

ஏனக்கா எனக்குச் சொல்லக்கூடாதா... நான் வரமாட்டேன் இனிமேல்...

“இரு சொல்லுறேன்” என்றாள். தொலைக் காட்சியை சுவிட்ஸைத் தட்டி றிமோட் கொண் றோலை அவளிடம் கொடுத்து விட:டு உள்ளே போனாள். இரண்டு கோப்பை தேநீருடன் வந்தாள். ஒன்றைத் தாட்சாயினியிடம் தந்து விட்டுப் பக்கத்துக் கதிரையில் அமர்ந்தாள். தேநீரைச் சுவைத்துக் கொண்டே “சரி சொல் லுங்கோ” என மகாலட்சிமியின் முகத்தைப் பார்த்தாள் தாட்சாயினி.

“நீ விடமாட்டாய்... வந்தவர் பெரியப்பா, கொழுப்பில் இருக்கிறவர்... பிரதீபனுக்கு ஒரு பொம்பிளை பார்க்கவேணும் எண்டு கேட்டனான்... அச்சுவேலில ஒரு பிள்ளை இருக்காம்... இப்ப அங்கே தான் போறார்...”

“ஏனக்கா அண்ணாவுக்கு என்ன வயசு?... இவ்வளவு காலமும் ஏன் யாரும் கவனிக் கேல்லை... போன வருசம் வந்தீரந்தாரே நான் பார்த்தேனே... உங்களைப் போல நல்ல சிவப்பு...”

“படத்தைப் பார்”

ஒரு தீருமணக்காட்சி...

“அக்கா இது கதாநாயகனுக்குக் கலியாணம் மணவறையில் இருந்து இரண்டு பேரும் கதைக்கிறதும் சரிக்கிறதும்... முன்னமே பழகினவை போல... காதலிச்சவை போல... அக்கா இந்தப் படத்திலை பாட்டு ஒண்டும் இல்லை... எல்லாம் பழைய பாடல் ரியூன்கள் தான், என்ன...” மகாலட்சிமி படத்தில் ஆர்வ மில்லாதவளாய் மௌனமாய்.

“தாட்சாயினியின் வாய் அந்த ரீயூனுக்குரிய பாடலை முணு முணுக்கிறது...” வாராயோ தோழி வாராயோ...” “அக்கா... என்ன மரு மகளும் இதுமாதிரி வருவாள் எண்ட கற் பனையா?...”

மகாலட்சுமி வாய் திறந்தாள்.

தாட்சாயினி... நீர் எனக்குச் சொந்த மில்லை... இந்த ஊர்ப் பிறந்தவளு மில்லை... நீர் எனக்குக் காட்டுகிற அன்பு போல இங்கு இருக்கிற என்ர சொந்தக்காரர் காட்டுகிறதில்லை...”


“அதிருக்கட்டும்... நீங்கள் எவ்வளவு சீதனம் வாங்க நினைச்சீங்கள்...”

“சீதனம்... தேவையில்லை... எண்டு தம்பி சொல்லிட்டார். இழகு படிப்பு நல்ல பண்பாடு இருந்தால் போதும் எண்டு சொல்லுறார்...”

“அப்போ... அழகு குறைஞ்ச பிள்ளையள் என்ன செய்யிறதாம்?...”

“ஏன் கவலைப்படுகிறீர்... நீரும் அழகு தானே...”

“நான் பொதுவாய்த்தான் சொல்லுறேன்... அழகு இல்லை, சீதனம் இல்லை எண்டு



எத்தனை பிள்ளையள் முப்பத்தைஞ்சு நாற்பது வயசு வந்தும் இருக்கிறாளவை, கலியாணம் செய்யாமல் “இது தீர்க்க முடியாத பிரச்சினை தான்...”

“அக்கா நாண் ஒண்டு கேக்கிறேன்... கோவிக்க மாட்டீங்களே?...”

“அப்படி என்ன,.. கோபம் வந்தாலும்...ம்... அடிக்கமாட்டனே... சரி சொல்லும்...”

“இந்த ஊரிலை... ஒரு... ஒரு அய்யா இருந் தவர். நல்ல சிவலை... வெள்ளைக் களிசான் சேட் போட்டுக்கொண்டு மோட்டார் பைக்கில ஒவ்வீசுக்கு போய் வருவார்... அவர் போன வருசம் தான் இறந்துபோனார். அவர்தான் பிரதீபன் அண்ணாவின் அப்பா... எண்டு அறிஞ்சேன்... அக்கா... என்ன அழுறீங் களா?”

“இல்லை நீ சொல்லு...”

மகாலட்சுமி மூடியிருந்த கண்களைத் திறந் தாள்.

“அவர் வேற கலியாணம் செய்து நாலு பிள்ளை களும் இருக்காம்...” ஊர்வாய் சும்மா கிடவாதே.

என்ன பதில்... எல்லாருக்கும் தெரிந்த கதை தான்... ஆனால் கிட்டடியில் குடிவந்த தாட்சாயினிக்கும் யாரோ சொல்லிவிட்டார்கள். மகாலட்சுமியின் மௌனத்தைக் கண்டும் தயங்காமல் கேள்வியைக் தொடர்ந்தாள் தாட்சாயினி.

“ஏன் அக்கா அவர் உங்களைக் கலியாணம் செய்யேல்லை?”

“கேள் தாட்சா... பிரதீபனுக்கு அப்பா தியாக ராசன் தான் ஏண்ட உண்மை ஊருக்குத் தெரிஞ்ச இரகசியம் தான். அவர் என்னைக் கலியாணம் செய்வதாகச் சத்தியம் செய்தார். அவர் எனக்கு மச்சான் முறை. முதலாம் வகுப்பிலிருந்தே இரண்டு பேரும் ஒரே பள்ளிக் கூடத்தில் படிச்சனாங்கள்... எங்கட வீட்டுக்கு வருவார். சேர்ந்து விளையாடுவோம்... என்னோடே இருந்து படிப்பார். ஏ.எல். அவர் பாஸ் பண்ணின பறிகு களிறிக்கல் சோதனை எடுத்துச் சித்தியடைந்தார். பிறகு கொஞ்ச நாளில வேலை கிடைச்சு கொழும்புக்குப் போய் விட்டார். அதன் பிறகும் எங்களுக

கிடையில் கடிதத் தொடர்பு இருந்தது”

“நாலு வருசத்துக்குப் பிறகு மாற்றம் எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தார். வந்த பிறகு அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார்... யாரும் இல்லாத நேரம் என்னைக் கொஞ்சு வார். அப்படியே நெருக்கமாயும் இருந்து பழகினோம்... ஒரு நாள் பொழுதுபடும் நேரம் வீட்டார் எல்லோரும் முருகன் கோயில் தேர்த் திருவிழாவுக்குப் போயிருந்தார்கள். அவர் இந்த நேரம் வந்தார்... என்னை அணைத் தார். தன்னுடைய விருப்பம் ஒண்டைச் சொன்னார்... நான் சட்டென் விலகி நின்று அது... அது இப்போ வேண்டாம் அத் தான்...கலியாணம் ஆகட்டும்... என் றேன்... உன்னை நானே கலியாணம் பண்ண இருக்கிறேன்... நீ பயப்படாதே வா... என்றார்... அப்பவும் நான் பயந்தேன்... எட்டப் போய் நின்றேன்... நீ இரு... நான் போகிறேன்... இனிமேல் நான் இங்கே வர மாட்டேன்... என்றார்... வாருங்கோ... எண்டு அவர் அணைப்பை ஏற்றுக் கொண்டேன். இது ஒரு புதுமையான அனு பவம்... அதை நெஞ்சில் வைத்துக்கொண்டு இன்னொரு ஆண்மகனை ஏற்று வாழ விரும்பாமல்... காலத்தைக் கழித்தேன்... என் அத்தான் படித்தவர்... உத்தியோகத்தில் இருப்பவர், என்னை ஏமாற்ற மாட்டார் என்ற என் நம்பிக்கை வீணாயிற்று... நாளாக ஆக என் உடலில் காணப்பட்ட மாற்றத்தை என்

பெற்றார் அவதானித்தனர்... உறவினர், அயலவரும் அறிந்தனர்... யாருமே என் பக்கம் வரவில்லை... அத்தானின் அம்மாவும் அறிந்துகொண்டா... அடுத்த சிலநாளில் அவர் கொழும்புக்கு மாற்றப்பட்டார்...”

“என்ன அதிசயம்... அக்கா... யாருமே ஒரு தீர்வுக்கு வரேல்லையா?... உடனேயே கலி யாணத்தை முடித்திருக்கலாமே...” “இல் லையே... அப்பா அம்மாவுடனோ... என் னுடனோ யாரும் வந்து கதைக்கவே யில்லையடா... யாழ்ப்பாணம் மாற்றலாகி வந்து ஒரு வருசமாகேல்லை, அதுக்குள்ள திரும்பக் கொழும்புக்கு எந்த உத்தி யோகத்தரும் மாற்றப்படுவதில்லை... யார் செய்த சதியோ... அவருடைய ஆட்களுக்கு “நான் இருந்த நிலையில” என்னை மரு மகளாக எடுக்க விருப்பமில்லை எண்டு அறிந் தேன்... மாதங்கள் மளமள எண்டு ஓடிவிட பிரதீபனைப் பெற்றெடுத்தேன்... மேலும் ஆறு மாதங்கள் கடந்தன... ஊரில் இருக்கவே பிடிக் கவில்லை... என் செல்வனை அக்காவிடம் ஒப்படைச்சிட்டுப் பணிப்பெண்ணாக வேலை செய்ய அபுதாபிக்குப் பயணமானேன்... இரண்டு வருடங்களுக்குப் பிறகு திரும்பி வந்தேன்... மனசைக் கல்லாக்கிக் கொண்டு என் பிள்ளையை வளர்த்தெடுப்பதைத் தவிர வேறெதையும் சிந்திக்காதவளாய், ஒரு கோயிலுக்கோ ஊரவரின் இன்பதுன்ப காரியங் களுக்கோ போய் வருவதைத் தவிர்த்துக் கொண்டு, தேவையின்றித் தெருவில் காலடி எடுத்து வைக்காமலே வாழ்ந்து வந்தேன். என் பிள்ளை வளர்ந்து படித்து, பெரியப்பாவின் ஒத்துழைப்புடன் வெளிநாட்டுக்குப் போன பிறகு, என் பங்கு நிலத்தில் என் உழைப்பில் கட்டிய இந்தச் சின்ன வீட்டில் தனியனாக வாழ்ந்திருக்க... தாட்சாயினி நீர் வந்து என் னோட பழகிய பிறகு... ஒருவித ஆறுதலும் தைரியமும்... கள்ளம் கபடமற்ற பிள்ளையாக நீர் எனக்குப் படுகிறதாலை, இதுவரை யாருக் குமே சொல்லாத காரியங்களைச் சொன் னேன்...”

“அக்கா... உங்களை அவர் கைவிட்டதுக்கு அவர் மாத்திரம் காரணமில்லை, என்றதை நீங்கள் ஏற்றுக்கொண்டாலும் நான் ஒண்டு சொல்வேன்... என்னை எதிர்ப்பு வந்தாலும் அவர் உங்களைக் கைப்பிடிச் சிருக்க

என் கண்களே சாட்சி
பெண்ணிற் பெருந்தக்க

எஸ். பி. கிருஷ்ணன் [வேரற்கேணியன்]

வேணும்...”

“ஹலோ... அம்மா...”

“தம்பி சொல்லுங்கோ”

“பிள்ளையின்ர அப்பா பிரகலாதனோட கதைச் சவராம்...வருகிற ஆவணி கடைசி நாளில் கலியாணத்தை வைக்கத் தீர்மானமாச்சுதாம் பெரியப்பாவோடயும் கதைச்சவையாம்... நாங்கள் இரண்டு பேரும் ஒரே நாள்ள வரப் பார்க்கிறோம்...”

“சித்தப்பா பஞ்சலிங்கமும் பிள்ளைகளும் வந்திருந்து திருமண ஒழுங்குகளைச் செய்ய ஆரம்பித்தனர். மகாலட்சுமியை ஆச்சரியப்பட வைத்து, வருவார்களா என்ற ஐயத்தை அவள் மனதில் விதைத்தவர்களும் வந்து கலந்து பேசி ஆகவேண்டியவற்றை ஆற்ற உதவினார். ஆண்கள் ஒரு பக்கம் பெண்கள் ஒரு புறம் சிறுவர் பலர் என்று வீட்டை நிறைந்திருந்தனர். எதிலும் அனுபவம் இல்லாத மகாலட்சுமி யாவற்றையும் வியப்புடன் பார்த்தபடி வலம் வந்துகொண்டிருந்தாள். கூடவே தாட்சாயினி பந்தல் அலங்காரங்களைப் புதுமுறையில் செய்து முடிக்க இளைஞர்களுக்கு தன் திட்டத்தை விளக்கிக் கொண்டிருந்தாள். கடதாசி மாலை வேண்டாம் மணம் கமழும் பூச்சரம் கட்டினால் போதும் என்றும் செப்புக்குடம் போன்ற வெளிச்சக் கூடுகள் தயாரிக்கச் செய்து தொங்க விடப்பட்டன.

“அக்கா செய்த வெளிச்சக் கூடுகள் அச்சா அச்சா” எனச் சிறுவர் சிரித்து ஓடி விளையாடினார்கள். “வாழ்க பிரதீபன்-கல்யாணி” என் பொன்வண்ணச் சருகையில் செதுக்கப்பட்டு ஒட்டப்பட்டன. தாழைப்பூ, தென்னம்பூ, கமுகம்பூ, அலங்காரங்களை ஒளிரவைத்தன மின்குழிழ்கள். பொய்யாமொழி வள்ளுவரின் ஈரடிகள் சிலவும் சுழலும் வெளிச்சக் கூடுகளில் வரையப்பட்டிருந்தன. அவை இவை:

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை பண்பும் பயனும் அது”

“ஈதல் இசைபடவாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு”

“மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து”

“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாகப்பெறின்”

“இனிய உளவாக இன்னாத கூறல் கனி இருக்கக் காய் கவர்ந்தற்று”

இவற்றைப் பார்த்த பலருடைய கண்களும் தாட்சாயினியைப் பார்த்துப் பாராட்டின.

அழைப்பிதழ் அச்சிடக் கொடுக்கும் வேளை மகாலட்சுமிக்கு தாட்சாயினியின் தயவு தேவைப்பட்டது. அதிலும் ஒரு புதுமையைப் புகுத்த எண்ணிய தாட்சாயினி, தியாகராசான் பிரதீபன் சரவணபவன் கல்யாணி ஆகிய நாங்கள்,.. தங்களை அன்புடன் வரவேற்கிறோம். என்ற வரிகளைப் புகுத்தி எழுதிக் கொடுத்தாள். சித்தப்பா பிள்ளைகள் அழைப்பிதழ்களைக் கையளிக்கப் புறப்பட்ட போது சிலவற்றைத் தானே கொடுக்கிறேன் எனக் கேட்டுப் பெற்றுக்கொண்டாள் மகாலட்சுமி. முதலில் அவ்வூரில் செல்வாக்குப் பெற்றிருந்த சிவராமலிங்கம் வீடு. ஒரு சிறுவனையும் துணைக்குக் கூட்டிக்கொண்டு சென்றாள்.

“அய்யா மகன் பிரதீபனுக்குக் கலியாணம்... நீங்கள் வரவேனும்” என்ற முன்மொழிவுடன் ஒரு அழைப்பிதழை அவர் கையில் வைத்தாள்.

“எல்லோருக்கும் நீதான் கொண்டு போய்க் கொடுக்கிறாயா?...”

“இல்லை... பெரியவர்கள் சிலருக்கு நான்... நேரில் கொடுக்கிறேன்...”

“நான் பெரியவனா?... நான் உனக்குச் செய்த துரோகத்தை இன்று வரை நீ அறியவில்லைப் போலும் தெரிந்திருந்தால் என்னை மதித்து நீ வந்திருக்க மாட்டாய்... தியாகராசனை உன்னிடமிருந்து பிரித்த சூழ்ச்சிக்கு உடந்தையாக நானும் இருந்தேன்...”

அதிர்ச்சி! பேச்சின்றி நின்றாள் மகாலட்சுமி. “தம்பி நீ போய் மேசையில் பேப்பர் இருக்கு எடுத்துப்படி...” என்று பையனை அனுப்பிவிட்டுத் தொடர்ந்தார் சிவராமலிங்கம். “கேள் மகளே... நான் கொழும்பில் நல்ல பதவியில் இருந்தபோது எனக்கு ஒரு கடிதம் வந்தது...தியாகராசனை கொழும்பில் ஒரு டிப்பாட்மெண்டுக்கு யாரிடமாவது உதவிகோரி மாற்றிவிடுங்கோ இங்கே ஒரு சிக்கலில் அவர் அகப்பட்டிருக்கிறார்... இங்கிருந்தால் நிலைமை மோசமாகும்... எனவே உடன் இந்த உதவியைச் செய்யவும்”.


இது தான் கடிதத்தின் சாராம்சம்...ஏன்? எதற்காக? என்று திருப்பிக் கேட்காமல் இந்த வேண்டுதலை நிறைவேற்றினேன். அதன் பிறகு ஒரு வருடத்துக்குப் பின்னர்தான் நான் யாழ்ப்பாணம் வர அலுவல் இருந்தது. இங்கே நடந்தவற்றைக் கேள்விப்பட்டு என் பழையை



உணர்ந்து கவலையடைந்தேன்... நீ பணிப் பெண்ணாக வெளிநாட்டுக்குப் போய் விட்டாய்... தியாகராசனுக்கும் மற்றொரு பெண்ணுக்கும் கலியாணம் ஆயிற்று. சில நாளில் அவர் கண்டிப் பக்கம் மாற்றம் எடுத்துக்கொண்டு மனைவியுடன் போயிருந்தார். நான் செய்தது தவறு என்றெண்ணி மனவேதனைப் பட்டேன். ஊரில் இருக்க மனமில்லாமல் கொழும்புக்குத் திரும்பினேன். லீவு முடியுமுன்னே ஏன் போறீங்கள்? என்று கேட்ட என் மனைவிக்கு மனநிலை சரியில்லை அங்கே போய் ஒரு சைக்கியாற்றிஸ்ரை பார்க்கவேணும் என்று பொய் சொன்னேன்... இப்போ தெரிகிறதா நான் உன்வீட்டுத் திருமணத்துக்கு வரும் யோக்கியதை இல்லாதவன் என்பது?”

“உங்களுக்கு என்ன பதில் சொல்லுற தெண்றே எனக்குத் தெரியேல்லை... ஓ... ஆனாலும் நீங்கள் சொன்னவற்றை வைத்துக்கொண்டு என்னை வஞ்சித்தவர்களை அம்பலப்படுத்தவோ பழி வாங்கவோ இது தருணமல்ல. நான் பட்ட துன்ப துயரங்கள் எல்லாம் காலப்போக்கில் மறந்தே போயிற்று இப்போ என் மகனின் எதிர்காலமே எனக்கு வாழ்க்கை என நான் இருக்கும் நிலையில் உங்களை எதிரியாகப் பார்த்து எதனைக் காணப்போகிறேன். கடந்தவற்றை மறந்து விடுங்கோ... வாருங்கோ வந்து என் பிள்ளைகளை வாழ்த்துங்கோ...”

“தீயினால் சுட்ட புண் ஆறுமே- ஆறாதே நாவினால் சுட்ட வடு.” — திருவள்ளுவர்






JATHU RENOVATION



உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com



ARASAN RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS
SALES REPRESENTATIVE

C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai

CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4



18 MAY

JUSTICE?

it's all we need.

WEXFORD
WELLNESS CARE INC.



We treat all car accident injuries!

* Massage Therapy
* Physiotherapy
* Orthopaedic
* Acupuncture
* Chiropractic
* Orthotic

We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)

Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location

Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

இலங்கை நிலவரம் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் கரிசனை!

இலங்கை நிலவரம் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் எதிர்பாப்பு என்ன? மேலும் வன்முறைகள் இடம்பெறுவதை இலங்கை அதிகாரிகள் தடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் பொதுமக்களின் துயரங்களிற்கு தீர்வை காண்பதற்காக ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுமாறும் பொறுமையை கடைப்பிடிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று பிரதமரின் ஆதரவாளர்கள் அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டதை தொடர்ந்து தீவிரமடைந்துள்ள வன்முறை குறித்தும் அதன் பின்னர் ஆளும்கட்சி அரசியல்வாதி மீது வன்முறை கும்பல் மேற்கொண்ட தாக்குதல் குறித்தும் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன் என மிச்சலே பச்செலெட் தெரிவித்துள்ளார்.

நான் வன்முறைகளை கண்டிப்பதுடன் அதிகாரிகளை அனைத்து தாக்குதல்கள் குறித்து சுயாதீன முழுமையான வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை கேட்டுக்கொள்கின்றேன் என ஐநா மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளிற்கு காரணமானவர்கள் அதனை தூண்டியவர்கள் என கண்டுபிடிக்கப்பட்டவர்கள் பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தப்படுவது மிகவும் முக்கியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் மேலும் வன்முறைகள் இடம்பெறுவதை தடுக்கவேண்டும் அமைதியாக ஒன்றுகூடலிற்கான உரிமையை பாதுகாக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



பாதுகாப்பு படையினருக்கு உதவியாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் உட்பட அதிகாரிகள் சட்டஅமுலாக்கல் நடவடிக்கையின் போது பொறுமையை கடைப்பிடிக்கவேண்டும், என தெரிவித்துள்ள அவர் அவசரகால சூழ்நிலையில் பின்பற்றப்படும் நடவடிக்கைகள் சர்வதேச மனித தராதரத்திலானவையாக காணப்படுவதை உறுதி செய்யவேண்டும், அவசரகால விதிமுறைகளை அமைதியான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் இணங்கமறுப்பதற்கு எதிராக பயன்படுத்தக்கூடாது எனவும் மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார். அரசாங்கத்திற்கு வாழ்வதற்கான உரிமையை பாதுகாப்பதற்கான கடப்பாடும் தனியார்கள் அமைப்புகளின் வன்முறைகளில் இருந்து தனிநபர்களின் உயிர்களை பாதுகாக்கவேண்டிய கடப்பாடும் உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடும் பொருளாதார நெருக்கடி பல இலங்கையர்களிற்கு நாளாந்த வாழ்க்கையை நெருக்கடி மிகுந்ததாக மாற்றியுள்ளது, தேசிய சம்பாசனைகள் மற்றும் ஆழமான கட்டமைப்பு மாற்றங்கள் தேவையாக உள்ளதுயங்ரங்களை அது வெளிச்சமிட்டு காட்டியுள்ளது என தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் பொருளாதார நெருக்கடி அனைத்து இனங்களையும் மதங்களையும் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து அதிகளவு வெளிப்படைதன்மை பொறுப்புக்கூறல் மற்றும் ஜனநாயக வாழ்வில் பங்குபெற்றுதல் ஆகியவற்றிற்கான வேண்டுகோள்களை விடுக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னோக்கி செல்வதற்கான வழிவகையை கண்டறிவதற்காக இலங்கை அரசாங்கத்தை அனைத்து சமூகத்தினருடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்குமாறும் சமூக பொருளாதார நெருக்கடிகளிற்கு தீர்வை காணுமாறும் குறிப்பாக பலவீனமான நிலையில் உள்ள வறிய மக்களின் பிரச்சினைகளிற்கு தீர்வை காணுமாறும் நான் கேட்டுக்கொள்கின்றேன் என மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நீண்டகால பாரபட்சத்திற்கு வழிவகுத்துள்ள மனித உரிமைகளை அலட்சியம் செய்துள்ள நிலைக்கு காரணமான பரந்துபட்ட அரசியல் அடிப்படை காரணங்களிற்கு தீர்வை காணுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலவரத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.



Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



At Need Funeral Arrangements
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:
• Vistation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation
நகரங்களில் எமது சேவை மார்க்கம், மற்றும் மிசிசாகா





Christeen Seevaratnam
Licensed Funeral Pre-Planner
416-258-6759

Vilosanan Sivatharman
Licensed Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?
Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost a today's prices
• Convenient time payment
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham ON L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

A caring part of our community

விரைவில் உணர்வாய் பகையே! உன் வெற்றியெல்லாம் வெறும் கனவே.

"தலைகள் குனியும் நிலையில் இங்கே
புலிகள் இல்லையடா – யாரும்
விலைகள் பேசும் நிலையில் எங்கள்
தலைவன் இல்லையடா."

புயலோடு இடிசேர்ந்து மழைபொழியும் நேரம்
குடைவிரிக்கும் எண்ணம் எமக்கில்லை.
மயிலாசனத்திலமர்ந்து
அகிற்புகையில் தலையுலர்த்தும் ஆசையும் எமக்கில்லை.
எம்மக்களுக்காகவும்,
எமது மண்ணுக்காகவும்,
பாரச்சிலுவை சுமக்க வேகமெடுத்த எமக்கு
கொலுமண்டபம்,
வெண்கொற்றக்குடை,
திறைசேரித் திறப்பு,
அந்தப்புரம் என்று
எந்தச் சபலமும் இல்லை.
மூச்சுப்பிரியும் நொடிவரை முன்னேறுவோம்.
தடையேதும் இடைவ்நத தடுக்கமுடியாது.
அருச்சுனனுக்கு தெரிந்த மச்சயந்திரமாய்
தமிழீழமொன்றே வழிகளுக்குத் தெரிகிறது.
உயிர் பெரிதுதான் ஒத்துக் கொள்கின்றோம்.
அதனிலும் பெரிது சுதந்திரம்.
இழிநிலை சுமக்கும் தமிழர்களாக இருப்பதிலும்
பழிதுடைக்க எழுவதே பெருவாழ்வு.
பழிதுடைக்க எழுந்து களமாடி மடிந்து
குழியிலுறாங்குவது குபேர வாழ்வு.
மாயமானுக்கு ஆசையுறும் மயக்கமேதும் எமக்கில்லை.
ஐந்து ஊர் கேட்டு,
ஐந்து வீடு கேட்டு,
அதுவும் இல்லையென்றான பின்னர் போர் கேட்டு
தூதுவிட எங்களிடம் "கண்ணபரமாத்மா" வும் இல்லை.
நாங்கள் பாண்டவரும் இல்லை.
தர்மத்துக்குச் சமரசங்கள் இல்லை.
அதர்மத்துக்கு நீதி நியாயங்கள் இல்லை.
பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைக்குத் தீர்வென்றால்
முதலிற் கைநீட்டுவது புலிகள்தான்.
போரின் மூலமே பிரச்சனைக்குத் தீர்வென்றால்
பிரபாகரன் அதற்கும் தயார்தான்.
சரி அடுத்தது என்ன?
புலிகளை அழித்துவிட்டுப் பிரச்சனைக்குத் தீர்வென்றால்
தர்மம் தோற்றுவிட்டதாகவல்லாவா சரித்திரம் எழுதும்.
"ஆயுதங்களைப் போட்டுவிட்டுச் சரணடையுங்கள்"
அதன் பிறகு பேசலா மென்றால்...
நாங்களென்ன "சம்பற்பள்ளத்தாக்கு"க் கொள்ளைக்காரரா?
குனியாத தலையும்,
வளையாத முதுகும்,
தணியாத தாகமும்,
உள்ளவர் புலிகளென்று உலகறியும்.
சத்தியதேவதைக்கு ஒப்புக் கொடுப்பரென்று
சந்திரரிகா அரசுக்கும் தெரியும்.
வா பகையே! வந்தெம் நெஞ்சேறி மதி.
பூவாகவும், பிஞ்சாகவும் எம் மரமுலுப்பிக் கொட்டு.
வேரைத் தறித்து விழுத்து.
தீமூட்டி எரி எம் தேசத்தை.
எனினும் பணியோமென்பதை நெஞ்சில் வைத்திரு.
இறுதிவெற்றி எவருக்கென்று பகடையுருட்டு
தோல்வி உனக்கின்றி எமக்கில்ல.
"கிபிர்" இருக்கும் திமிர் உனக்கு.
உலகநாடுகள் அள்ளித் தருமென்ற
எண்ணத்தில் வந்து எரிக்கின்றாய்.
எரித்து முடி.
எல்லாம் எரியுண்டு போனதாய் எண்ணி
குளித்துவிட்டு நீ தலைசீவும்போதே குண்டுகள் வெடிக்கும்.
இது தான் புலி.
இந்த இரகசியத்திற்குப் பெயர்தான் பிரபாரகன்.
எம்மை வெல்லும் திறன் உனக்குமில்லை.
உன் படைக்குமில்லை.
ஹலோ அநுருத்த ரத்வத்த!
புதுமாப்பிள்ளைக்குப் பெரிய வாழ்த்துக்கள்.
ஐப்பத்தாறு வயதில் உமக்குக் கலியாண ஆசை
ஆறிரண்டு பருவத்தில் எமக்கு விடுதலை வேட்கை.
எப்படி எம்மை நீ வெல்லுவது சாத்தியமாகும்?
பத்திரகாளியாய் நீங்கள் பலியெடுத்துக் கொள்ள
அப்படியென்ன கேட்டோம் உங்களிடம்?
கொழும்பை எமக்குத் தாவென்றா கேட்டோம்?
காலித் துறைமுகத்துக்கு வேலியிடவா வந்தோம்?
தலதாமாளிகையின் தங்கக் கவசத்தை
கொடுவாள் கொண்டு கொத்தவா நின்றோம்?
சிங்களவருக்கு இந்நாடில்லை யென்றாவது சொன்னோமா?
நமது நிலத்தைத்தானே நாங்கள் கேட்டோம்?
"நம்மை நாமாக... நமது நிலத்தில்வாழ
எம்மை விடும்" என்பது எப்படி தவறாகும்?
இதிலென்ன பிழைகண்டு இந்தக்கூத்து?
மாங்கனித் தீவென்றும், மரகதத்தீவென்றும்
நாங்கள் எல்லாரும் பாட்டுக்கள் பாடிக் கொண்டிருக்க
நீங்கள் வேட்டுகள் தீர்த்துக் கொண்டீர்.
வந்தது வினை.
அதன் பிறகும் உம்மோடு அண்டியிருக்கவென்று
விதம் விதமாய் முயன்றோம்.
நீங்கள் விடவில்லை.
கதை முடிந்து போனது.
கட்டிய கோமணத்தையும் கழற்றென்றீர்கள்.
எப்படி நிர்வாணமாக நிற்கமுடியும்?
வெளியேறிக் கொண்டோம்.
இன்று ஆநிரை கவரவா ஊர் புகுந்துள்ளீர்?
விளைவு என்னவானாலும் விடமாட்டோம்.
எம்மண்ணில் முறியும் ஒவ்வொரு மரமும்
முளைவைத்து விட்டே முறிகிறது.
பிரியும் ஒவ்வொரு உயிரும்
அடுத்தகணமே இன்னோர் உடலாகி நடமாடுகிறது.
தளரோமென்று காற்றுச் சத்தமிடுகிறது.
உன்மீதான கோபத்தில் முகம் சிவந்து
இங்கு வெள்ளைப் பூக்களும் சிவப்பு நிறமாயின.
கருப்பைக்குள் எம்பிள்ளைகள் ஆசையும் போதே
நெருப்புக்குள் நீந்தப் பயிற்சியெடுக்கின்றனர்.
எங்கள் அத்திவாரமே வித்தியாசமானது:
புலிகள் கறுப்பு
பிரபாகரன் நெருப்பு!
விரைவில் உணர்வாய் பகையே!
உன் வெற்றியெல்லாம் வெறும் கனவே!

-புதுவை இரத்தினதுரை, ஆனி 1996

சுதந்திரமும் நாட்டுப்பற்றும்

சுதந்திரம் என்றால் என்ன?

அது ஒரு மாபெரும் சக்தி. கண்ணுக்குத் தெரியாத ஆனால் அனுபவிக்கக்கூடிய ஒன்று.

ஒரு மனிதன் ஒழுக்கமுடையவனாக, மனித நேயம் உடைய வனாக இருக்க வேண்டுமானால் அவன் சுதந்திரமுள்ளவனாக இருக்க வேண்டும்.

எமிலி, சமுதாய ஒப்பந்தம் போன்று நூல்களைப் படைத்து பிரான்சு நாட்டில் சுதந்திர உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்த ரூசோ என்னும் அறிஞர் கூறுகின்றார்.

ஒரு மனிதன் தன்னுடைய சுதந்திரத்தைத் துறந்து விட்டானென்று சொன்னால் அவன் தன்னுடைய மனிதத் தன்மையையும் துறந்து விட்டான் என்று அர்த்தம். அது மட்டு மல்ல மானிட இனத்தின் ஓர் அம்சத்தினன் என்ற மறையில் அவனுக்கு ஏற்பட்டிருக்கிற உரிமைகளையும் கடமைகளையும் கூடத் துறந்துவிட்டான் என்றே கொள்ள வேண்டும். அவனிடத் தில் எந்தவிதமான நற்குணங்களையும் கொண்ட புகுத்தி அவனுடைய மனிதத்தன்மையை திருப்ப முடியாது. சுருக்க மாகச் சொன்னால் அவன் மனிதன் அல்ல.



அதனால் தான் "முழந்தாளிட்டுக் கொண்டு உயிரோடிருப்பதைக் காட்டிலும் நின்று கொண்ட இறப்பதே மேல்" என்று உறுதிப் பாட்டினைக் கொண்டு இருந்தவர் மராட்டிய மன்னர் சிவாஜி.

உலகிலுள்ள எந்த மனிதனும் சுதந்திரமாகவே இருக்க விரும்பு கிறான். ஆனால் இனமே அடிமைப்பட்டு இருக்கும் போது சுதந் திரத்திற்கு எங்கே போவது? எனவே முதலில் இனவிடுதலை வேண்டும். விடுதலை பெற்ற இனத்திற்கு சொந்த நாடும் வேண்டும்.

சொந்த நாடாக இருந்தாலும் அது அடிமை நாடாக இருந்தால் அதில் வசிப்பதை விட நரகத்தில் வாழ்வது மேலானது என்பது உண்மையே.

தாய் நாடு என்று சொல்லும்போதே நம்மிடத்தில் வீர உணர்ச்சி பெருகுகின்றது. தாய்நாட்டை நேசிப்பது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமை.

தேசபக்தி என்பது யாரோ ஒரு மனிதனுக்கு மாத்திரம் மொத்த மாக அமைகின்ற பண்பு என்று யாரும் நினைத்தல் கூடாது. அது ஒவ்வொரு மனிதனிடத்தும் இயற்கையாக அமைந்துள்ள பிறவித்தன்மை.

அதனால் சொந்த நாட்டுக்காக துயரப்படுவது, துன்பத்தினை அனுபவிப்பது, சாவடைவது எல்லாமே புனிதமான செயற் பாடகள் எனப்படுகினறன.

ஒரு இலட்சியத்தை நேசிக்கின்றேன் என்பதற்கு எது அடை யாளம் என்றால் அதற்காக உயிரை விடக்கூட சித்தமாக இருக்கினறேன் என்பது தான். எனவே நாட்டு விடுதலைக்காக உயிரினை இழப்பது மிகப் பெரிய தியாகமாகும்.

குளிர்ந்த நிழலில் இருந்து கொண்டு எங்கே வெய்யில்? எங்கே வெய்யிலின் வெம்மை? என்று கேட்பது போல இன்னமும் சிலபேர் நம் மத்தியில் உள்ளனர்.

சந்தர்ப்ப வாதங்களினாலும், பொருளாதார நலன்கள் வசதியாக இருக்கிறன்ற படியாலும் இன்றைய எமது பொதுவான பிரச் சினைகளின் அடித்தளத்தை புரிந்து கொள்ளவிரும்பாது இன உணர்வோ, மொழி உணர்வோ நாட்டுப்பற்றே இன்றி போராட் டத்தில் எவ்வித அக்கறையுமின்றி மிகவும் சுயநலவாதிகளாக காணப்படுகின்றனர்.

உலக வரலாற்றிலேயே அத்தகையவர்கள் எப்போதும் தங்கள் வர்க்க நலன்களுக்கே முன்னுரிமை அளிப்பவர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்வுகளாகும்.

உயர்ந்த இலட்சியமில்லாத அந்த இலட்சியத்திற்காக உழைக் காத வாழ்க்கை, வாழ்க்கை அல்ல. எனவே எங்கள் இலட் சியத்தை உறுதிப்படுத்தவும், உழைக்கவும் முனைவோமாக.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

இந்தியாவின் கரிசனையால் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான தனி நிர்வாக கட்டமைப்பினை உருவாக்க முடியும்

நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்

மே 14, 2022

இந்தியாவினுடைய கூடுதலான கரிசனையிலும், உதவி வழங்கும் நாடுகளையும் இணைத்து வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான தனி நிர்வாக கட்டமைப்பினை உருவாக்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வடக்கு கிழக்கின் அபிவிருத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பரசியல் பாதிப்படைய செய்யுமல்லவா எனவும், அதற்கான மாற்று திட்டங்கள் உள்ளதா எனவும் ஊடகவியலாளர் அவரிடம் வினவியபோது இவ்விடயத்தினை அவர் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,
வடக்கு கிழக்கில் 30 வருடங்களிற்கு மேல் பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2009க்கு முதலே 30 ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ச்சியான பொருளாதார தடை, மக்கள் உழைக்கக்கூடிய சூழல் இல்லா நிலை குறிப்பாக 10 ஆண்டுகளாக மின்சாரம் என்றால் என்ன என்று கேள்வி கேட்குமளவிற்கு வடக்கு கிழக்கிலே மக்கள் வாழ்ந்திருந்தார்கள்.

இந்த நிலையில்தான் பொருளாதார ரீதியில் மக்கள் ஒடுக்கப்பட்டு உற்பத்தி தொழில்துறைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. இலங்கை அரசாங்கம் யுத்தத்தை காரணமாக காட்டிக்கொண்டிருந்தார்கள். உலக நாடுகளும் இலங்கை அரசு சொல்வதை கேட்டு வடக்கு கிழக்கில் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு பின்னின்றன.

யுத்தத்திற்கு பின்னர் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கென பெருந்தொகையான நிதியை இலங்கை அரசுக்கு உலக நாடுகள் வழங்கியிருந்தன. அவ்வாறு வழங்கப்பட்ட நிதிகளைக்கூட அதிவேக பாதைகள், தெற்கின் அபிவிருத்திகளிற்கு இலங்கை அரசு பயன்படுத்தியபோது, அதனை கண்காணிக்கக்கூடிய நிலை இல்லாமல் எங்களுடைய பொருளாதாரம் கீழ் நிலைக்கு சென்றுள்ளது.

எங்கள் மக்களின் தற்துணிவும், அவர்களது சுய நம்பிக்கையும் தாங்கள் உழைத்து வாழ்வோம் என்ற எண்ணமும் இருந்தமையால்தான் இன்று பல நீண்ட நாட்களாக வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழர்கள் தங்களது சுய பொருளாதாரத்தில் பொருளாதாரத்தை கட்டி நிமிர்த்தி வருகின்றார்கள்.

இந்த நிலையிலே இடைக்கால பொருளாதார நிர்வாகம் தொடர்பிலே பேச்சுக்கள் அடிபடுகின்றது. இது ஒரு நல்ல விடயமாக பலராலும் பார்க்கப்படுகின்றது. நானும் அதனை சாதகமான செய்தியாக பார்க்கின்றேன்.

குறிப்பாக யுத்தம் நடந்து 30 ஆண்டுகள் அதற்கு பின்னர் 12 ஆண்டுகள் கடந்து 42 ஆண்டுகள் இந்த மண்ணிலே கடந்திருக்கின்றது. ஆனால் வடக்கு கிழக்கில் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இளைஞர்களிற்கான தொழில் வாய்ப்பு உள்ளிட்டவை குறைந்திருக்கின்றது. இல்லையென்றும் சொல்லலாம்.

இதற்கான வாய்ப்பாக வடக்கு கிழக்கிற்கான தற்காலிக வாய்ப்பாக வடக்கு கிழக்கினை இணைந்த வகையில் குறிப்பிட்ட சில ஆண்டுகளிற்கு பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்கான இடைக்கால நிர்வாகத்தினை உருவாக்குவது காலத்திற்கு பொருத்தமானது என கருதுகின்றோம்.

இது தொடர்பில் புத்திஜீவிகள், புலம்பெயர் உறவுகள் உள்ளிட்டவர்கள் மத்தியில் இந்த விடயம் பரவலாக பேசப் படுகின்றது. இதில் மிக முக்கியமாக பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாகும். பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதன் ஊடாக தமிழ் மக்களினுடைய அரசியல் அங்கிகாரத்தினை பெற்றுக் கொள்ளுதல், அந்த அரசியல் அங்கிகாரம் என்பது வடக்கு கிழக்கு அபிவிருத்தியினால் கட்டப்படுவது தொடர்பில் சிங்கள மக்களிற்கு கூட்டாக அவர்களிற்கு விளங்கும் வகையில் சொல்வதாகும்.



குறிப்பாக வடக்கு கிழக்கு இணைப்பு, சமஸ்டி என கூறுவது தமிழீழம் எனும் தனிநாடு என சிங்கள மக்கள் மத்தியில் பயக்கின்றது. ஆகவே இலங்கையின் அரசியலமைப்புக்கு உட்பட்டதாக ஒரு நிர்வாகம் ஒன்று கிழக்கையும், வடக்கையும் உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டால் சிறப்பாக அமையும், ஏற்கனவே இவ்வாறு 1987ம் ஆண்டு ஒரு கட்டமைப்பு எழுத்து வடிவிலே பேசப்பட்டு எழுத்துடனேயே போய்விட்டது. சிரான் அமைப்பும் இவ்வாறான நிர்வாக கட்டமைப்பை வரைந்தது. அதுவும் அரசியல் மாற்றங்களால் இல்லாது போனது. அது நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை.
இப்பொழுது இருக்கின்ற சூழல் இலங்கையின் அரசியலமைப்புக்குள் இந்தியாவினுடைய கூடுதலான கரிசனையில் உதவி வழங்கும் நாடுகளையும் சேர்த்துக்கொண்டால் வடக்கு கிழக்கிற்கான தனி கட்டமைப்பினை உருவாக்க முடியும்.

யுத்த காலத்தில் தென்னிலங்கையில் தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு அங்கு அபிவிருத்தி அடைந்திருக்கின்றது என் பதுடன், எல்லா மாவட்டங்களிலும் தொழிற்சாலைகள் மற்றம் துறை சார்ந்த அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வேலைவாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதற்கான வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது. காரணம் யுத்தம். இதனை நிமிர்த்துவதற்கான ஒரு வழியாக இந்த இடைக்கால நிர்வாகத்தினை நாங்கள் பார்க்கின்றோம். இதன் ஊடாக நாட்டுக்கு நிதியை கொண்டுவர முடியும்.

குறிப்பாக உலக நாடுகளின் நிதி, இந்தியாவின் நேரடி கண்காணிப்பில் முதலீடுகளை கொண்டு வருதல், இந்தியாவின் மேற்பார்வையில் கொண்டு வருவதன் ஊடாக பல சலுகைகளையும் எதிர்பார்க்கலாம்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களின் முதலீடுகளை வடக்கு கிழக்கிலே அதிகரிப்பதன் மூலம் தொழில் துறைகளை இயக்க முடியும். குறிப்பாக ஆனையிறவில் உள்ள குறிஞ்சாதீவு உப்பளம், மட்டக்களப்பு காகித தொழிற்சாலை உள்ளிட்ட மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை இப்பொழுது இருக்கின்ற காலத்திற்கேற்ற தொழிற்சாலைகளாக மாற்றியமைப்பதன் மூலம் உடனடி வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும்.

அதேபோன்று பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் கைத்தொழில்பேட்டை ஒன்றை உருவாக்குவதன் மூலம் அதில் பல்வேறுபட்ட தொழில் துறைகளை உருவாக்க முடியும். வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களை சேர்ந்தவர்களும் சந்திக்கக்கூடிய பகுதியாக பரந்தன் பகுதி உள்ளது.

அவ்வாறான தொழிற்துறைகளை முன்னெடுப்பதன் மூலம் வடக்கு கிழக்கில் அபிவிருத்தி அலையொன்றை அல்லது தொழில் புரட்சியொன்றை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் இந்த இடைக்கால நிர்வாகம் தொடர்பில் நாங்கள் சிந்திக்கின்றோம். இது தொடர்பில் நாங்கள் பல தடவை சிந்திக்க இருக்கின்றது. இது தொடர்பில் கட்சியின் உயர் மட்டத்திலும் இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட்டிருக்கின்றது.

தொடர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளுடனும் இது தொடர்பில் கூடி ஆராய்ந்து அவர்களின் கருத்துக்களும் பெறப்பட்டு வடக்க கிழக்கில் பொருளாதார ரீதியாக ஒரு நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் அரசியல் உள்ளிட்ட விடயங்களிற்கும் பலத்தை தரும் என்று நாங்கள் கருதுகின்றோம்.

இதேவேளை வனவள திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றால் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்புக்களை தடுத்து வடக்கு கிழக்கினை பாதுகாக்க முடியும் என்பதுடன், வடக்கு கிழக்கு என்றால் அது தமிழீழம் அல்ல என்பதையும், உலகத்தில் உள்ள சமஸ்டியின் கூடிய அலகாக இந்த நாட்டில்தான் இருக்கின்றது. அவர்கள் அப்படி வாழ வேண்டும் என்பதில் நியாயம் உள்ள என்பதை சிங்கள மக்கள் உணரக்கூடிய வகையிலான செயற்பாடடை அதன் ஊடாக கொண்டுவர முடியும்.

அதுதான் தென்பகுதி மக்களிற்கும் நன்மையை கொண்டு வரும். ஏனென்றார் நிதி நாட்டுக்குள் கொண்டுவரப்படும்போது இலங்கையின் பொருளாதாரத்திலும் கடுமையான வளர்ச்சியினை கொண்டுவரும். சிங்கள மக்கள் உணர்ந்து கொள்ளக்கூடிய இந்த காலத்தில் இடைக்கால நிர்வாகம் என்பது எங்களிற்கு அவசியமானது.

அது தொடர்பில் தூர நோக்கோடும், நல்லெண்ணத்தோடும் ஒவ்வொருவரும் சிந்தித்தால் வாய்ப்பானதாக அமையும் என்று நான் கருதுகின்றேன் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறான விடயத்தை நடைமுறைப்படுத்த முற்படுகின்ற பொழுது மத்திய அரசினை நீங்கள் எதிர்க்கின்றபொழுது அவர்களும் இதனை எதிர்ப்பார்கள் அல்லவா என அவரிடம் ஊடகவியலாளர் வினவினார்,
சுனாமி ஏற்பட்ட குறிப்பிட காலத்தில் இவ்வாறான நிர்வாக அலகு ஒன்றை சிரான் அமைப்பு விரைந்து முயற்சி எடுத்தபொழுது ஆட்சியில் ரணில் விக்ரமசிங்க இருந்தார். அதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினால் அது கைவிடப்பட்டது. தற்பொழுது அவர் பிரதமராக இருப்பதால் குறித்த திட்ட வரைபை அவர் மறுக்கமாட்டார் என நம்புவதாக அவர் தெரிவித்தார்.

சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



Amman Women & Child Development Center
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

Hermans Girls Home
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

Jesus Lives Girls Home
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

Methodist Girls Home
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

RKM Sharatha Girls Home
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

Seephe Divi Child Delelopment Centre
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

Sri Indasara Child Development Centre
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

St. Maryís Boys Home
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

Swami Vipuilanantha Boys Children Development Centre
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

Canaan Harvest Childrenís Home
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

Up Country Children Home
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

Arutpani Girls Home
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

Assisi Boys Home
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

Benthel Boys Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Benthel Girlís Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Bethel Girls Children Home
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

Eravur Children Care Home
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

Good Shepherd Children Home
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

Hari Boys Home
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

Jeevananthan Girls Home
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

Kattankudy Boys Home
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

London Sivan Kovil Girls Home
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

Managayarkarasi Girls Home
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

Manikkavasagar Boys Home
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

Methodist Girls Home
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

Miyani Boys Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

Miyani Girls Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

Pariyowan Boys Home
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

Ramakrishana Boys Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Ramakrirushana Girls Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Sakthi Girls Home
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

Shakthi Girls Home
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

Shanthi Bawan Girls Home
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

Spaks Girls Home
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

Thilahawathiyar Girls.Children Home
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

Thilahawathiyar Girls Home
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

Thiruniyanasampathar Gurukulam
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

Trust Village Womens Development Center
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

Vidhyajothi Boys Home
Central Rd - Batticaloa 94 77 481 6576

Vipulanantha Children Home

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101

Vivehanada Children Home
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442

Yoga Suwami Saiva Girls Children Home
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420

St.Joseph Elders Home
Trinco Rd- Batticaloa 94 71 851 1951

Swami Vipulananthar Elder Home
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202

Ozanam Centre
Sathurukondan - Batticaloa 94 65 365 8636

Uthayam Association of Visually Handicapped
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

Elim Boys Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824

Elim Girls Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962

Forth Sq Girls Child Development Center
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109

Hindu Board Boys Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304

Hindu Board Girls Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082

Holy Family Girls Child Development Center
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270

Karunai Girls Child Development Center
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334

Karunalayam Annai Krishnabai Girls C. D. C.
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873

Karunalayam Boys Children Development Center
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002

Salvation Army Girls Child Development Center
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696

SOS Village Child Development Center
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711

Sri Pramanatha Girls Child Development Center
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004

Thurkkapuram Girl Child Development Center
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894

Valluvar Girlsí Child Development Center
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513

Mother Teresa Elder Home Amithi Illam
Kondavil - Jaffna 94 21 223 0302

Sivapoomi Elders Home
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230

Sivapoomi School ForChildren with Special Needs
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894

Vaalvagham-Home for the Vissually Handicapped
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

Aruvucholai Boys Child Development Center
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313

Aropanam Boys Child Development Center
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088

Gandhi Nilaya Chidren Home & Training Centre - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461

Holy Family Girls Child Development Center
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115

Karuna Nilayam Girls Child Development Center
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836

Mahadeva Saiva Boy Child Development Center
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121

Mahadeva Saiva Girls Child Development Center (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119

Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118

Sencholai Boysí Child Development Center
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308

Sencholai Girlí Child Development Center
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504

Thangamma Elders Home -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619

Trist Children Home
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694

Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162

Association. to Empowerthe Special Needs Children
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776

Killinochchi Special Needs Newtwork
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

Annai Girlsí Child Development Center
Uppukulam - Mannar 94 23 222 2483

Anpu Sakotharar Boys Child Development Center
Keeri - Mannar 94 77 534 4427

Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center
Pesalai - Mannar 94 23 205 0095

Sivanarul Boys Child Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998

Sivanarul Girls Children Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804

Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

Saradha Mission Child Development Center
Kirigalpotta - Matale 94 66 205 1721

St. Francis Child Development Center
Vihaara Rd - Matale 94 77 438 4851

Anpu Boysí Child Development Center
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502

Barathy GirlChild Development Center
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234

Ladani Girls Child Development Center
Silawaththai - Mullaitivu 94 77 422 8853

Nallayan Girls Child Development Center
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034

Pari Girlsí Child Development Center
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034

Iniya Vazhvu Illam
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

Happy Home Child Development Center
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174

Maranatha Child Development Center
Hatton - Nuwara Eliya 94 51 222 2489

Rainbow Child Development Center
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680

Shalom Child Development Center
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

Annai Saratha Children Home
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506

Anpu Illam
167, Central Rd - Trincomalee 94 26 222 1214

Four Square
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170

Grace Girls
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644

Hasanath Boys
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

Hasanath Girls
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

My Fatherís House Boys Children Homes
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861

Rawlathul Athfal
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438

Rewathe Child Development Center
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328

Sivayogasamayam Swami Gangadaranatha Children Home
64 Main St. - Trincomalee 94 26 222 2049

Sri Sanmuga Boys 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234

Sri Sanmuga Girls 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521

Thapovanam Boys
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Thapovanam Girls Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Deva Anpu Children Home
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859

Hindu Anpakam Children Home
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683

Salvatorian Girls Home
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577

Sri Ahilandeswary Children Home Kovilkulam - Vavuniya 94 24 222 1685

Mother Teresa Elder Home Pampaimadu -Vavuniya 94 24 205 4494

Sivan Elders Home
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827

Thanagamma Eleders
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

"வீட்டுக்குப்போ கோட்டா" என்கின்றனர் மக்கள்! கோட்டா அரசுக்கு மௌன ஆதரவு அளிக்கிறது மகாசங்கம்

அ.மயூரன், M.A.

20.04.2022

"இன்றைய சக்கரவர்த்தி நாளைய கைதி" என்ற பைபிளின் பழைய ஏற்பாட்டு வாக்கியம் இங்கு கவனத்துக்குரியது. யுத்தக் கதாநாயகர்கள், வெற்றி வீரர்கள் என்று சிங்கள பௌத்தர்கள் மத்தியில் புகழப்பட்டு போர் வெற்றி ஆட்சியாளர்களாய் ஆட்சிக்கு வந்தவர்களை இப்போது Paid Killers, என்றும், இன்று சவப்பெட்டியில் வைத்து ஒப்பாரி சொல்லித் தகனம் செய்யும் காட்சி கொழும்பு மாநகரிலும், அவர்களின் சொந்த ஊரிலும் அரங்கேறிக் கொண்டிருக்கிறன. இத்தகைய அரசியல் மாற்றத் தின் பின்னணியில் இன்றைய இலங்கையின் அரசியலை மதிப்பீடு செய்ய இக்கட்டுரை முயல்கிறது.

ஒரு கிளர்ச்சி அல்லது ஒரு கலகத்தின் போது அதில் ஏற்படக் கூடிய வெற்றிதோல்வி என்பது அதில் காணப்படும் ஏதுநிலை களில் தங்கியுள்ளது. கிளர்ச்சி என்பது ஏதுநிலைகளினால் உருவாகும். அது சார்ந்த ஏது நிலைகள்தான் எதனையும் நிர் ணயிக்கும்.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அரசாங்கத்திற்கு எதி ரான கிளர்ச்சி கொதிநிலை அடைந்திருக்கின்றது. இதனால் காலிமுகத் திடலில் திடீரென ஒன்று கூடிய போராட்டக்காரர்கள் "Gotta Go Home" என்ற கோசத்துடன் கடந்த 8 திகதிமுதல் தொடர் போராட்டங்களை கடந்த இரு வாரங்களாக மேற்கொள் கின்றனர். இதன் ஒரு பகுதியாக (19.04.22) ரம்புக்கனையில் நடந்த போராட்டத்தின்போது பொலிசாரின் துப்பாக்கி பிரயோகத் தில் ஒருவர் மரணமடைய 24 பேர் காயமடைந்திருந்தனர். இதனால் நாடு முழுவதும் போராட்டங்கள் மேலும் தீவிரம் அடைய தொடங்கியது. அதைத் தொடர்ந்து ஆட்சியாளர் ஊர டங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியும் உள்ளார்.

இந்த அரசாங்கத்திற்கு எதிரான உணர்ச்சியலையைப் பயன் படுத்தி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவோ, அல்லது அரசைக் கவிழ்க்கவோ முடியாத நிலையில் எதிர்கட்சிகள் உள்ளன.

அரசுக்கு எதிரான கொதிநிலை தீவிரமடைந்த நிலைமையை சாதுரியமாக பயன்படுத்திக் கொள்ள அவர்கள் எவ்வளவு தூரம் ஒருங்கிணைந்துள்ளனர் என்பது கேள்வியே.

இவர்கள் வெறுமனே ஜனாதிபதி கோட்டாவை பதவி விலகு மாறு கேட்கின்றனர். ஆனால் அவ்வாறு ஜனாதிபதி பதவி விலகினால், அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலை மையை சமாளிப்பதற்கு தெளிவான வரையறையோ, திட்டமோ
இல்லாதவர்களாகவே எதிர்க்கட்சிகள் உள்ளன.

உதாரணமாக ஜனாதிபதிக்கு எதிரான குற்றபிரேரணையில் கையெழுத்திடுவதற்கு சஜித் பிறேமதாசவிற்கு பல நாட்கள் செல் லுமளவிற்கு இருக்கிறது இவர்களின் வேகம்.

இந்த குழப்பநிலைக்கு தெளிவான தீர்மானம் எடுக்கும் தலைமைத்துவமின்மையே முக்கிய காரணமாகும். மக்கள் "Gotta Go Home" என்ற ராஜபக்ச குடும்பத்தினரை வீட்டுக்கு அனுப்பும் போராட்டங்களில் ஈடுபட்டாலும், கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் கோட்டா அரசாங்கம் தம்மை சுதா கரித்துக்கொண்டு தம்மைப் பலப்படுத்தியிருப்பதனால், கோட் டாவை வீட்டுக்கு அனுப்புவது கடினமாகவே உள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கு 20 வது திருத்தச் சட்டத்தை நீக்கி 19 வது திருத்தச் சட்டத்தை அப்படியே கொண்டுவர முடியாதாகையால் 21 வது சீர்திருத்த சட்டத்தை கொண்டுவருவதற்கு குரல்கொடுக்கின்றனர்.

நாட்டில் நடைபெறும் குழப்பங்களை பயன்படுத்தி அரசாங் கத்துடன் சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்து 20 திருத்த சட்டத்தை மாற்றி ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப் பதற்கான வழிகளை செய்வதே தற்போதைய சூழ்நிலையில் எதிர்க்கட்சிகளுக்கு இருக்கும் தெரிவாகும். மாறாக கோட்டா அர சாங்கத்தை கவிழ்க்கப்போகின்ற முயற்சியானது கோட்டா அர சினை மேலும் பலப்படுத்தும்.

போர் வெற்றியின் மமதையில் ஆட்சிக்கு வந்த ராஜபக்ச குடும்பத் தினர் மீதுள்ள மக்களின் அதிருப்தி நியாயமானது. போரின் பின்னர் அவர்கள் மேற்கொண்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள், நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கூடிய சந்தர்ப்பங்களை தவறவிட்டமை என பலவற்றைச் சொல்லலாம். இலங்கை வரலாற்றில் என்றும் இல்லாத கடும் பொருளாதார நெருக்கடி 22 மில்லியன் மக்களின் வயிற்றில் கை வைத்திருக்கிறது. இத னால் மக்கள் அதற்கு எதிராக கிளர்ந்தெழுந்து வீதிமறியல் போராட்டங்களை செய்யுமளவிற்கு இறங்கியிருக்கின்றனர்.

போரின் பின்னர் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் கட்டமைக் கப்பட்ட இந்த அரசாங்கத்தை ஒரு கட்டத்திற்கு மேல் ஆட்டம் காண செய்யமுடியாதிருக்கிறது. இது இலங்கையின் ஜன நாயகத்திற்கு விழுந்திருக்கும் அடியே.

இருந்தபோதும் ராஜபக்ச குடும்ப அரசாங்கத்தை இன்றுவரை காப்பாற்றி வைத்திருப்பது சிங்கள பௌத்த பேரினவாதத்தால் கட்டமைக்கப்பட்ட மகாசங்கமேயாகும்.

இச்சங்கங்கம் ராஜபக்சக்களை தூக்கி எறிவதற்கோ அல்லது அவர்களை முற்றாக கைவிடுவதற்கோ தயாரில்லை எனலாம்.

சிங்கள பௌத்த பேரினவாத வெற்றியின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றி இன்று மக்கள் மத்தியில் புஸ்பவானமாக் கப்பட்டாலும், மகாசங்கம் மத்தியில் ராஜபக்சக்கள் இன்றும் யுத்த வெற்றிப் புருசர்களாகவே உள்ளனர். இதனாலேயே பேரினவாதத் தின் காவலர்களான மகாசங்கங்கம் வேறு தெரி வின்றி இவர்களை தற்போதும் மௌனமாக ஆதரிக்கின்றது.

இதை **Silence "Support"** என்று சொல்வார்கள். இந்த மௌன ஆதரவு ராஜபக்ச குடும்பத்தினருக்கு இருக்கும் வரை அவர் களை ஆட்சியிலிருந்து கலைக்க முடியாது.

அடிப்படையில் மகாசங்கம். தெளிவான இந்திய எதிர்ப்புவாதம் - தமிழின அழிப்புவாதம் என்ற திட்டவட்டமான கட்டமைப்பைக்
கொண்ட சித்தாந்தத்தைக் கொண்டது.

குறிப்பாக பௌத்த மகாசங்கத்தை நோக்கில் சியாம், இரா மணிய, அமரபுர ஆகிய மூன்று நிகாயங்களைக் கொண்டது. இதில் சியாம் நிகாயமானது மொத்த பிக்குக்களில் 93% தத் தினரைக் கொண்டதாவும், சிங்கள உயர்சாதிக் கட்டமைப்பான கொய்கம சாதியை 100% கொண்ட கட்டமைப்புமாகும்.

இந்த சியாம் நிகாயத்தில் **மல்வத்த, அஸ்கிரிய** என்ற இரண்டு உயர் பீடங்கள் உள்ளன. இவ்விரு பீடங்கள்தான் சிங்கள பௌத்த பேரினவாதத்தை வழிநடத்தும் கட்டமைப்பாகும். இவைதான் பௌத்த பேரினவாதத்தின் மத்தியிலும், அரசிய லிலும் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்டவை. ஏன் இலங்கை யின் சட்டங்கள் கூட இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. இதை கடந்த கால தமிழின அழிப்பில் கண்டிருக்கின்றோம். சட்டத்தை விடவும் இவர்களின் ஆணை இலங்கையில் பலமானது என் பதற்கு ரணில் - பிரபா ஒப்பந்தம் ஒரு சிறந்த உதாரணம். அதா வது சட்டத்தின் படி இலங்கை அரசால் "பயங்கரவாதிகளுடன்", தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஒரு அரசு, ஒரே மேசையில் சமமாக இருந்து பேசவோ, ஒப்பந் தங்களில் கைச்சாத்திடவோ முடியாது என்ற நிலை இருந்த போது ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய, மல்வத்த பீடங்களை நாடினார். இலங்கை ஒரு பௌத்த நாடு என்றவகையிலும், பௌத்த பீடங்களே அதன் அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக உள்ளதனாலும் இச்சட்டத்தடைகளை மீறி இப்பீடங்கள் ரணில் - பிரபா ஒப்பந்தத்திற்கு சம்மதித்து சமாதான முயற்சியை மேற் கொண்டன என்பது நினைவிருக்கலாம்.

அத்தோடு 2015 இல் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்து பதவி விலகுமாறு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் ராஜ பக்ச குடும்பத்தினரை பாதுகாத்து வைத்திருந்தது இந்த பௌத்த பேரினவாத பீடங்களாகும்.

மேலும் இப்பீடங்களைச் சேர்ந்தவர்கள் சூரிய மஞ்சள் நிற ஆடையை உடுத்திருப்பர். இந்த நிகாயம் அடிப்படையில் இந்திய
எதிர்புவாதம்,

தமிழின அழிப்புவாதம் என்ற இரண்டு சித்தாந்தங்களை பலமாகக் கடந்த இரண்டரை ஆயிரம் ஆண்டு காலமாகக் கொண்டவை.

அடுத்துள்ள நிகாயங்களான இராமணிய, அமரபுர நிகாயங்கள் மொத்த பிக்குகள் தொகையில் வெறும் 7% த்தினைரைக் கொண்ட கட்டமைப்பாகும். இது சிங்கள உயர்சாதியினரான கொய்கம தவிர்ந்த ஏனைய கரவ, துரவ, சலாகம ஆகிய சாதிக் கட்டமைப்புக்களைச் சார்ந்த பிக்குகளைக் கொண்டன. இந்த இராமணிய அமரபுர நிகாயங்களால் தனித்து முடிவெடுக்க முடியாது.

உதாரணமாக 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச 19வது அரசமைப்புச் சட்டத்தை நீக்கி 20ஆம் திருத்தச் சட்டத்தை அமுலாக்கியபோது அத்திட்டத்தை எதிர்த்து உயர்நீதி மன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கைகள் ஊடகங்களில் வெளிவந்தன. அப்போது இராமணிய, அமரபுர நிகாயங்களும், மகாகிரி மகாசங்கசபையும் இணைந்து கோட்டா அரசாங்கம் ஜனநாயகத்தை அழித்து சர்வாதிகாரத்தை ஊக்குவிக்கிறது ஜனநாயகம் சர்வாதிகாரமாக மாறுவதை தடுப் பது மதகுருமார்களின் பொறுப்பு என்றும் இதனால் பௌத்த பீடங்கள் மூன்றும் 20 வது சீர்திருத்த சட்டத்தை எதிர்க்கும் முடிவை எட்டியுள்ளன எனக்கூறி கூட்டாக கையெழுத்திட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டு பெரும் பரபரப்பை ஏற் படுத்தியது. இதை சியாம் நிகாயத்தைச் சேர்ந்த அஸ்கிரிய மல்வத்த பீடங்கள் கணக்கில் எடுக்காது. கோட்டாபய ராஜ பக்சவை அழைத்து 20 வது சீர்திருத்த சட்டத்தை அமுல்படுத்த ஆசீர் வதித்தும் அனுப்பியதிலிருந்து

இராமணிய, அமரபுர நிகாயங்களின் அதிகாரத்தை அறிந்து கொள்ளலாம்.

இத்தகைய உயர்சாதி கட்டமைப்பால் கட்டமைக்கப்பட்ட உயர் பீடங்களான அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள் ராஜபக்ச குடும்பத் தினருக்கு மௌன ஆதரவினை வழங்கி வருதலானது மேலும் அவர்களுக்கு பலத்தை அதிகரிக்கிறது. இந்த மகாசங்கத்திற்கு ராஜபக்ச குடும்பத்தை ஆதரிப்பதைத் தவிர வேறு தெரிவு இல் லவே இல்லை என்றே கூறலாம்.

ஏனெனில் சிங்கள பௌத்த பேரினவாத பீடங்கள் சாதிக் கட்ட மைப்பை இறுக்கமாக கடைப்பிடிக்கின்றன. இவை பௌத்த பீடங்களில் அரசியலுக்கும் பொருந்தும்.

அந்தவகையில் கொய்கம தவிர்ந்த ஏனைய சாதிகளைச் சேர்ந்த வர்கள் ஆட்சிக்கு வருவதற்கு அடிப்படையில் இந்த பௌத்த பீடங்கள் விரும்புவதில்லை.

இருந்தபோதும் பௌத்தபீடங்களின் அடிப்படை சித்தாந்தமான இந்திய எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு என்ற அடிப்படையில் இந்திய எதிர்ப்பினையும், தேர்தலின் போது தன்னுடைய பச்சைப் புலி படைமூலம் குண்டுவெடித்தல் முதலான குழறுபடிகளைச் செய் திருந்ததாலும் சலவைத் தொழில் செய்யும் சமூகத்தைச் சேர்ந்த ரணசிங்க பிரேமதாசவால் ஜனாதிபதியாக வரமுடிந்தது.

இருந்த போதும் அவரை எண்கோண மண்டபத்தில் இருத்தி கண்டி மகாபீடப்பிக்குகள் ஆசீர்வதிக்க மறுத்ததால் அப் போதைய தலதா மாளிகை தர்மகர்த்தாவான டி.பி.விஜயதுங்க வின் உதவியை நாடி பிக்குகளின் ஆதரவைப் பெற்றார் பிரேமதாச. இதற்குப் பிரதியுபகாரமாக டி.பி.விஜயதுங்கவை பிரதமரும் ஆக்கினார். பின்னர் அவர் கொல்லப்பட டி.பி. விஜயதுங்க ஜனாதிபதியாக இருந்தார் என்பது வேறு கதை. இதன்மூலம் இனி எந்த சாதியை சேர்ந்தவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றாலும் அதை விரும்பியோ விரும்பாமலோ பௌத்த பீடங்கள் ஆதரவளிக

வேண்டிய நிலைக்கு பிரேமதாசாவின் வரவு வரலாற்றில் ஒரு முன்னுதாரணத்தை தோற்று வித்துள்ளது என்பதும் கவனத்துக்குரியது.

பொருளாதாரப் பிரச்சனைகளை மையப்படுத்திய மக்களின் காலிமுகத்திடல் உள்ளடங்கலான போராட்டங்களில் நாடாளு மன்றம் கலைக்கப்படவும், கோட்டாபயவுடன் ராஜபக்சவின் குடும்பங்கள் கூட்டாக பதவி விலகவும், ஜனாதிபதியின் அதி காரங்கள் குறைக்கப்படவும் என மக்களும், எதிரணிகளும் தொடர்ச்சியாக நடத்தும் போராட்டங்கள் படுகொலைவரை சென்றும் அரசுக்கு மறைமுக ஆதரவினை கொடுக்கும் பௌத்த பீடங்கள் கோட்டவின் ஆட்சியை மாற்றாமல் 19 வது சீர்திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கிறது. இது அவர்களிடம் தலைமைத்துவ அங்கீகாரம் உள்ள மாற்றுத் தெரி வான சிங்கள பௌத்த பேரினவாத தலைவர்கள் வேறு இல்லை என்றே காட்டுகிறது.

ராஜபக்ச குடும்பத்தினரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு யாரை அடுத்து நியமிப்பது என்கின்ற கேள்வி அவர்களிடம் உள்ள தாக அறியக்கிடக்கிறது.

அரசியல்ரீதியாகப் பார்த்தால் ராஜபக்ச குடும்பத்தினருக்கு பிரதியீடு செய்வதற்கு தகுதியுள்ளவர்களை நோக்கில் முதல் தெரிவாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிறேமதாச, கரு ஜயசூரிய மற்றும் JVPயைச் சேர்ந்த அனுரகுமார திசா நாயக்க ஆகியோர் உள்ளனர்.

இவர்களில் சந்திரிக்கா முதுமையால் தலைமைத்துவத் திற்கு வரமுடியாத நிலையுள்ளது.

அடுத்து ரணில் விக்கிரமசிங்கவை எடுத்துக்கொண்டால் “ஆசை இருந்தாலும் மீசையை வைத்துக்கொண்டு கூழ் குடிக்க முடியாது”என்ற மூத்தோர் முதுமொழிக்கிணங்க இவருக்கு ஆசையும், பௌத்த பீடங்களின் ஆதரவும் இருந் தாலும். தன்னுடைய தொகுதியில் தோற்று, தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் வந்தவர். இலங்கை அரசியலில் தோற்றுப்போன அரசியல் தலைவராக ரணில் விக்கிரம சிங்கவே திகழ்ந்த நிலையில், ரணில் நேரடியாக நாடாளு மன்ற தேர்தலில் தோற்றது முதன்முறையாக பதிவாகி யுள்ளது. எனவே இவர் மக்கள் அங்கீகாரம் அற்ற தலைவ ராவார்.

அடுத்த தெரிவான சஜித் பிறேமதாசவை எடுத்துக் கொண்டால் தந்தையைப் போன்று சாதியடிப்படையில் ஓரங் கட்டப்பட்ட நிலையிலும் தந்தை பிரேமதாசா போல் கொழும்பு மாநகரில் ஆதரவிருந்தாலும், ஏனைய சாதிகளின் ஆதரவும் இணைத்து மொத்தமாகப் பார்த்தால் 20% மான ஆதர வினையே அவரால் பெறமுடியும். இந்த நிலையில் மாகா சங்கம் இவரை அங்கீகரிக்க விரும்பவுமில்லை.

ஆசியாவின் சிறந்த அரசியற் பேச்சாளன் என பெயர்பெற்ற பிரேமதாசவைப் போன்று இல்லாமல், சஜீத்திடம் பேச்சுத் திறனும், அரசியல் ஆளுமையும் இல்லை என்பதால் இவரால் இன்றைய அரசியலில் காய்களை நகர்த்த முடி யாது.

அடுத்தவரான கரு ஜயசூரியவை மகாசங்கம் ஏற்கும் ஆனால் இவருக்கான மக்கள் ஆதரவு பெரும்பாலும் இல்லவே இல்லை.

நாடாளுமன்றத்தில் 3 ஆசனங்களைக் கொண்ட JVP இன் சார்பில் அனுர குமார திசாநாயக்க உள்ளார். இவர் ஒரு கொமியுனிஸ்ட் என்பதாலும், இவர் கொய்கம சாதியைச் சேர்ந்தவரானாலும், கரவ, துருவ, சலாகம சாதியினரின் ஆதரவுத் தளத்தையே கொண்டு இருப்பதாலும் இவரும் மகா சங்கத்தின் முன் தகுதியற்றவராகின்றார்.

எனவேதான் பௌத்த மகாசங்கத்திடம் ராஜபக்ச குடும்பத் தினரை தவிர வேறு தேர்வு இல்லை என்பதால் “Gotta go Home” என்ற மக்களின் கோசங்களுக்கு மகாசங்கம் மௌனம் காக்கின்றது.

மேலும் ராஜபக்ச குடும்பத்தினரை வீட்டுக்கு அனுப்பினாலும் ராஜபக்ச அன்கோவினால் அவர்களின் குடும்பத்தினர் தரப்பில் 600 பேர் உயர் பதவிகளில், நிர்வாக அதிகாரிகளாக இருப்பதாக கூறப்படுகிறது. இவை அரசியல் நியமனப் பதவியாகும். இதை “Political Appointment” என்பார்கள். எனவே கோட்டா அன் கோவை வீட்டுக்கு அனுப்பினாலும் அவர்களின் குடும்பங்களினால் கட்டமைக்கப்பட்டிருக்கும் குடும்ப ஆட்சியை கண்டுபிடித்து அவர்களையும் அனுப் புவது தற்போதைய நிலையில் இலகுவானதல்ல.

கிளர்ச்சிக்கு மாற்றுத்தலமை இல்லாவிடின் அது தூர்ந்து போகும். ராஜபக்ச குடும்பத்தினரை எதிர்கொள்ள தகுதி இல்லாத தலைவர்களாகவே எதிரணியில் உள்ள தலை வர் கள் உள் ளனர். அடுத் து இராணுவத் தினை எடுத்துக்கொள்வோமாக இருந்தால் கொய்கம அற்ற சமூ கத்தை (Non Goigama) வைத்துக்கொண்டுதான் ராஜபக்ச குடும்பம் தங்களை அரணமைத்துக் கொண்டனர். பாது காப்பு அமைச்சின் செயலாளராக கோட்டாபய ராஜபக்ச பதவி யேற்றதன் பின்னான 17 வருடங்களில் தன் ஆதரவாளர் களை கோப்ரல் பதவிக்கு மேல் உயரதிகாரிகள் வரை நியமித்து தம்மைச்சுற்றி அரணமைத்தனர். உதாரணமாக சலாகம சாதியினரைச் சேர்ந்த சவேந்திர டி சில்வாவை இராணுவத் தளபதியாக்கியமையைக் கூறலாம். இதனால் இராணுவப் புரட்சிமூலம் ராஜபக்ச குடும்பத்தினரை ஆட்சிக் கவிழ்பு செய்வது சாத்தியமற்றதொன்றாகி விட்டது.

மொத்த சனத்தொகையில் தமிழ் மக்கள் 12% மும், கொய்கம தவிர்ந்த ஏனைய சாதியினர் 22% மும், கிறிஸ்தவ சமூகத் தினர் 5%மும், உள்ளனர். இதில் அங்கிலிக்கன் திருச்சபை யினர் 1% மட்டுமே .

இதனால்தான் கத்தோலிக்க திருச்சபை மல்கம் ரஞ்சித் ஆண்டகையினுடை குரலை மகாசங்கமும், ராஜபக்ச குடும் பத்தினரும் கணக்கிலெடுப்பதில்லை. இதில் தமிழர்களுக் கெதிராக சிங்கள பௌத்த பேரினவாதம் மேற்கொண்ட போரில் காணாமல் ஆக்கப்பட்ட கத்தோலிக்க தமிழ் மதகுரு மார்கள் ஏராளம் உதாரணமாக கிழக்கு மாகாணத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட கத்தோலிக்க மதகுரு தொடர்பில் இதுவரை எந்த பெருன்பான்மையின கத்தோ லிக்க திருச்சபையினரும் ஒரு கண்டனத்தை தானும் வெளி யிடாது மௌனமாகவே உள்ளனர். ஏன் 1994 இல் யாழ்/ சென்பீற்றர் தேவாலயம் மீது சந்திரிக்கா அரசாங்கம் புக்காரா குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியபோதும், மன்னார் மடு தேவாலயத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட போதும், மௌனமாக இருந்த சிங்கள சமூக கத்தோலிக்க திருச்சப யினர், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஈஸ்ரர் தினத் தில் தேவாலயத்தினுள் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டபோது அலறியடித்துக் கொண்டு வத்திக்கான் வரை படை யெடுத்திருப்பதானது தமிழின அழிப்பில் பௌத்த பீடங்கள் மட்டுமல்ல இந்த பெரும்பான்மை இன கத்தோ லிக்க திருச்சபையினர் கூட மறைமுக ஆதரவினை வழங்கி யிருக்கின்றனர் என்பதைக் காட்டுகிறது.

சிங்கள பௌத்த பேரினவாதம் மேற்கொண்ட தமிழின அழிப்பில் தமிழ் பேசும் கத்தோலிக்க மதத்தினரும், மதகுரு வினரும் கொல்லப்பட்டபோது தென்னிலங்கை பெரும் பான்மையின மதகுருக்களின் குரல்கள் எங்கே போயின.

இப்போது இலங்கையில் மக்களுக்கு அடிப்படை தேவை களுடன் எரிபொருள், வரி அதிகரிப்பு ஆகியவற்றால் பாதிக் கப்பட்ட மக்கள் வீதியில் இறங்கி போராடினாலும், மாபெரும் வெகுஜன எழுச்சி Mass Uprising இன்னும் ஏற்படவில்லை. என்றே கூறலாம். இவ்வகையில் ஒரு மாபெரும் வெகுஜன எழுச்சி ஏற்படும்போது இறுதிச்சக்தியான இராணுவம் வன்முறையை கையிலெடுக்கத் தயங்காது. தற்போது நடைபெறும் நிலைமைகளைப் பார்க்கும் போது இன்னும் ஆறு அல்லது ஏழு மாதங்களின் பின் நிலைமை இன்னும் மோசமாகலாம். இதன் முதற்படியே கடந்த 19.04.22 அன்று ரம்புக்கணையில் நடந்த சம்பவம்.

மேலும் பண்டாரநாயக்க தனிச்சிங்களச் சட்டம் தொடர் பாகவும், தமிழர் உரிமை சார்ந்தும் தீர்வென்றினை எடுக்க முற்பட்டபோது பௌத்த பேரிவாத பிக்குவாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

அத்துடன் விடுதலைப்புலிகளுடனான சமாதான காலத்தில் பௌத்த மகாசங்கத்தைச் சேர்ந்தவர்களால் உருவான ஹெல உறுமயவில் இருந்த சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பிக்குகள் சமாதானத்தைக் குழப்பி போரைத் தூண்டுவதில் கனிசமான பங்கினை வகித்திருந்தனர். ஆரம்பத்தில் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு எதி ரான போரை நடத்துவதற்கு தயங்கியபோது அவர்களைத் தூண்டி போரின் விளிம்புக்கு தள்ளிவிட்டதும் இதே பிக்குகள் தான். சுனாமியின் பின்னர் அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே பொதுக்கட்டமைப்பு உருவாக்கப் பட்டபோது கிட்டத்தட்ட 5000 வரையிலான பௌத்த பிக்குகள் ஜனாதிபதி செயலகம் வரை சென்று ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டதோடு மட்டுமல்லாது நீதிமன்றம் வரை சென்று அவற்றுக்கான தடையுத்தரவையும் பெற்றன.

இன்றும் அதே பிக்குகளே கோட்டாபய ராஜபக்சவை பத வியில் அமர்த்தி இன்றுவரை ராஜபக்ச குடும்பத்தினரை பாது காக்கவும் தயங்கவில்லை.

மக்கள் வீதியில் இறங்கி போராடி அது அரச வன்முறையில் முடிந்தும் மௌனமாக இருந்தது பௌத்த மகாசங்கம். ஆனால் மேற்குலக நாடுகளின் விருப்பமான 20 வது சீர் திருத்த சட்டத்தை நீக்கி 19 வது சீர்திருத்த சட்டத்தை நடை முறைப்படுத்தல் தொடர் அழுத்தங்களாக அவர்களால் வெளிப்படுத்தியபோது அவர்களின் விருப்பத்துக்கேற்ப 20 ஆவது சீர்திருத்த சட்டத்தை நீக்கி 19 வது சீர்திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்த பௌத்த மகாசங்கம் (20.04.22) அறிக்கை வெளியிட்டது.

உதாரணமாக ரம்புக்கண பகுதியில் அரசகட்டமைப்பால் பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடந்து 15 நிமிடங்களில் அமெரிக்க தூதுவர் யூலிசங் காட்டமான அறிக்கையை விடுத்தார். இந்த அமெரிக்க தூதுவர் பௌத்தத்தின் மீது அதிக ஈடுபாடும் பௌத்த மகாசங்கத்துடன் நெருங்கிய தொடர்பும் உடையவராக காணப்படுகின்றமையும் இந்த மகாசங்க அறிக்கைக்கு ஒரு காரணமாகவும் அமைந்தது.

இதில் ஒரு முரண் 2020 ஆண்டு இராமண்ணிய, அமரபுர நிகாயங்களும், மகாகிரி மகாசங்கசபையும் இணைந்து கோட்டா அரசாங்கம் 20 ஐ நடைமுறைப்படுத்தியதை கண்டித்து அறிக்கை வெளியிட்ட போது அதை கணக்கி லெடுக்காது 20 ஐ நடைமுறைப்படுத்த கோட்டாபய ராஜ பக்சவை அழைத்து ஆசீர் வகித்து அனுப்பிய அதே மகாசங்க பீடங்கள் (அஸ்கிரிய, மல்வத்த) இன்று 20ஐ நீக்கி 19 ஐ நடை முறைப்படுத்த அறிக்கை வெளியிடுகின்றன.

இதனால் 20வது திருத்த சட்டத்தை நீக்கக்கோரும் மேற் குலகை ஒருபுறம் திருப்திப்படுத்தியதோடு, மறுபுறம் வீதி களில் இறங்கிப் போராடும் மக்களினை தன்வசப்படுத்தி வைத்திருக்க சங்க ஆணையை பிறப்பிக்க வேண்டிவரும் என்று அறிக்கைவிட்டதானது மகாசங்கத்தின் நற்பெயரை மக்கள் மத்தியில் காப்பாற்றவும் முடிந்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக மகாசங்கம் ராஜபக்ச க்களை நீக்குவதற்கு பதிலாக, மேற்படி திருத்தச் சட்ட யோசனையை முன்மொழிந்து தோல்வியில் இருந்து ராஜபக்ச குடும்பத் தினரையும், கோட்டாபய அரசாங்கத்தையும் பாதுகாத் திருக்கிறது. “Gotta Go Home Gota” என்கின்ற கோசங் களை நீர்த்துப்போகச் செய்து கோட்டாபய அரசாங்கத்துக்கு மௌன ஆதரவினை வழங்கி அவர்களை இன்றும் பாது காக்கிறது மகாசங்கம்.

சிங்களப்பேரினவாதம் உருவாக்கிய பொய்யே “மகாவம்சம்” இன்றும் எழுதப்படுகிறது

சிங்கள அரசின் அடிவருடிகளா Ex-WTM & NCCT?

(கனடியத் தமிழர் சமூகமும் மாணவர் சமூகமும்?)



2022 மே மாத ஆரம்பத்தில் தமிழ் வர்த்தக நிலையங்களில் காணப்பட்ட அல்லது ஒட்டப்பட்ட மே 18 முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையை நினைவூட்டும் வகையில் பணத்தை செலவு செய்து, அச்சிடப்பட்டு ஒட்டப்பட்ட பதாதைகள் கிழித் தெடுக்கப்பட்டும், ஒட்டப்பட்ட பதாதைகளை மறைத்தும் வேறொரு பதாதை ஒட்டப்பட்டுள்ளது.

ஆனால், சிங்கள இனவாத அரசின் செயற் பாடுகளுக்கு துணைபோகும் செயற்பாடாகவே இதனை பார்க்க வேண்டி உள்ளது. எனென்றால் சமாதான காலப்பகுதியில் அரசியல் துறை பொறுப்பாளர் அண்ணன் தமிழ்ச்செல்வனால் சொல்லப் பட்டது போன்று எந்தெந்த நாடுகளில் தமிழர்கள் வாழ்கின் றீர்களோ அந்தந்த நாட்டு அரசியல் வாதிகளுக்கும், அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கும், தமிழீழத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசினாலும், சிங்கள அதி காரவர்க்கத்தினரலும் இழைக்கப்பட்ட, இழைக்கப்படுக் கொண்டிருக்கும் தமிழ் இனஅழிப்பை எடுத்துச் சொல்லி ஞாபகப் படுத்திக்கொணடே இருக்கவேண்டும் என்று கூறியது இந்த NCCT யினருக்கு தெரியாதா? அல்லது அண்ணன் தமிழ்ச் செல்வன் கூறியது விளங்கவில்லையா? அத்துடன் அவர் கூறியது, "நீங்கள் தனிமனிதனாகவோ, அல்லது அமைப் பாகவோ, எந்த வடிவத்திலாவது தமிழீழத் திற்கான வலுச் சேர்கும் செயற்பாடுகளில் ஈடுபடலாம் எனக்கூறியது" அவர் களுக்கு (NCCT, WTM) தெரியாதா? அல்லது தெரிந்தும், தாங்கள் தான் கனடாவில் தமிழ் மக்களின் ஏகப்பிரதி நிதிகள், என்ற நினைப்பில் இருக்கிறார்களா?

அப்படியான ஒரு மாயை நினைப்பில் இருந்தால் இருந்து விட்டு, ஏமாற்றக்கூடிய தமிழ் மக்களை ஏமாற்றி உங்கள் உங்கள் குடும்பங்களை மட்டும் வாழவைத்துக் கொண்டு போங்கள்.

ஆனால், WTM ஆனலும் சரி, NCCT ஆனலும் சரி ஒட்டு மொத்த தமிழ் மக்களின் தலையிலும் மிளகாய் அரைப்பதற்கு இனிமேல் காலத்திலும் உங்களால் முடியும் என்பதை கனவிலும் நினைத்துப் பார்க்காதீர்கள். அமைதியான முறையில் அறிக்கை மூலம் இதனை தெரியப் படுத்துகிறோம். தனிமனிதனாக இருந்தாலும் சரி, அமைப்புகளாக இருந்தாலும் சரி, ஈழ நலன் சார்ந்த செயற்பாடுகள் வரவேற்கத் தக்கவையே.


அந்த வகையில், பதாதைகள் மேல் பதாதை ஒட்டுவது, ஒருவரை ஒருவர் எதிரிகளாக பார்ப்பது, துரோகத் தனமான செயற்பாடுகளில் ஈடுபடுவது போன்ற செயற்படுகள் நிறுத்தப்பட வேண்டும்.
உங்கள் உங்கள் வழிகளில் சென்று தமிழீழத் தின் எதிர்கால நலனுக்காகவும், தமிழீழத்தின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால செயற் பாடுகளை புதிய தலைமுறையினருக்கும், அந்தந்த நாட்டு அரசியல் தரப்பினருக்கும் பரப்புரை செய்யுங் கள். அதை விட்டுவிட்டு, குடியேறிய நாடுகளில் தமிழீழத்திற்காக சேகரிக்கப்பட்ட பணத்தில் கூடிக் கும்மியடிப்பதும், தூய சிந்தை யோடு நாட்டின் நன்மை கருதி செயற் படுபவர்களை ஏளனம் செய்வதையும் தவித்துக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

அப்படி இல்லை இப்படித்தான் செய்வோம் என்றால், கடந்த காலங்களில் எப்படி ஏமாற்றினோமோ அப்படியேதான் தொடர் வோம் என்றால், அதற்கான பின் விளைவுகளையும், பொறுப் புக்களையும் இவ்விரு அமைப்புக்களுமே ஏற்றுக்கொள்ள வேண்டி வரும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தயவு செய்து இனிமேல் காலத்திலாவது இப்படியான செயல்பாடுகளில் ஈடுபடவேண்டாமென தாழ் மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

லேம் 13 ஆண்டுகளுக்குப் பின், இனியாவது ஒருவர் மேல் ஒருவர் குற்றம் சொல்வதும்



அவதூறுகள் பரப்புவதும், கண்டனங்கள் தெரிவிப்பதும், நான் பெரிது நீ சிறிது என்கின்ற சிந்தனைகளில் இருந்து விடபட்டு, தமிழீழம் நோக்கிய - தமிழினம் சார்ந்த எந்த நல்ல செயற்பாடுகளையும் யாரும் செய்யலாம் என்கிறன்ற சிந்தனை எல்லோருடைய சிந்தை யிலும் வரவேண்டும். இப்படியான



சிந்தனையும், செயற் பாடுகளும் தான் எமது மக்களின் நல்ல வாழ்வாதாரத்திற்கும், அடுத்த கட்ட தமிழீழத்திற்கான செயற்பாடாகவும் இருக்கும் என கருதுகிறோம்.

இதை விடுத்து, மறைவிலிருந்து செயற்படுகிறோம் என மக்களுக்கு படம் காட்டாதீர்கள் என கேட்டுக் கொள்கிறோம்.

ஆகவே மீண்டும் பேதங்களை விட்டு தனி மனிதனாகவோ, குழுக்களாகவோ, அமைப்புக்க ளாகவோ, அவதூறு செய் யாதீர்கள், அசிங்கமான வார்தைப் பிரயோகங்களை பயன் படுத்தாதீர்கள். ஈழம் சார்ந்த செயற்பாடுகள் ஒரு சில அமைப் புகளுக்குத்தான் தாரை வார்த்து கொடுக்கப்பட்டது என்று யாரும் கருதி விடாதீர்கள். அவரவர் வழியில் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படு வோம்.

-உமாகரன்-





கோட்டா கோ கமவும், மே பதினெட்டும்



கோட்டா கோகம கிராமத்தில் யுத்த வெற்றி வீரர்களுக்கும் ஒரு குடில் ஒதுக்கப்பட்டமை தொடர்பாக நான் எழுதிய விமர்சனத்துக்கு நண்பர் ஒருவர் பதிலளித்தார். அரசியல் சிவில், சமூக செயற்பாட்டாளரான அவர் அண்மையில் கோட்டாகோகம கிராமத்திற்கு விஜயம் செய்திருந்தார். அவர் தரும் தகவல்களின்படி ரணவிரு குடிலில் அமர்ந் திருக்கும் படைவீரர்கள் போராட்டம் தொடங்கிய காலத்தி லிருந்தே அதில் இணைந்து செயற்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் யுத்தவெற்றியை ஒரு அரசியல் முதலீடாக முன்னெடுக்கும் ராஜபக்சக்களின் யுத்த வெற்றி வாதத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்றும் அவர்களை யுத்த வெற்றி வாதத்திற்கூடாகப் பார்க்கத் தேவையில்லை என்றும் நண்பர் கூறினார்.

எனினும், ரணவிரு குடிலை அக்கிராமத்தில் உருவாக்க காரணம் அரசாங்கம் முன்னெடுக்ககூடிய முறியடிப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கும்தான் என்ற ஒரு விளக்கம் உண்டு. இலங்கை தீவு ஏற்கனவே மூன்று தடவைகள் தன் சொந்த இளையோரின் ரத்தத்தில் குளித்த ஒரு நாடு. ஜே.வி.பியின் இரண்டு ஆயுதப் போராட்டங்கள், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் என்று கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் இலங்கைத்தீவு மூன்று தடவைகள் தனது சொந்த மக்களின் ரத்தத்தில் குளித்த ஒரு நாடு. எனவே இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் குறிப்பாக பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழந்த இளைய தலை முறையின் ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு நசுக்காது என்று நூறுவீதம் நிச்சயமாகக் கூற முடியாது.

ஆனால், அவ்வாறு நசுக்குவது என்றால் அதை தொடக் கத்திலேயே செய்திருந்திருக்க வேண்டும். இப்பொழுது அது உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக மாறி யிருக்கும் பின்னணியில், குறிப்பாக கொழும்பின் மையத்தில், தூதரகங்களின் மத்தியில் அக்கிராமம் அமைந்திருப்பதனால் அதனை இனி இரும்புக்கரம் கொண்டு நசுக்குவது கடினமானதாக இருக்கும் என்றும் ஒரு விளக்கம் உண்டு.

எனினும் அரசாங்கத்தின் முறியடிப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு ஒரு தற்காப்பு ஏற்பாடாக கிராமத்தில் குடியிருப்பவர்கள் ரணவிரு குடிலை அங்கு அமைத் திருக்கலாம் என்றும் கருதலாம். தாங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு எதிரானவர்கள் அல்ல தமது போராட்டம் தேசத்துரோகமானது அல்ல என்பதனை அவர்கள் நிரூபிக்க முற்படுகிறார்கள். அவர்கள் கைகளில் சிங்கக் கொடிகளை ஏந்தி வைத்திருப்பதும் அவ்வாறான ஒரு தற்காப்பு உள்நோக்கத்தை கொண்டதா என்ற சந்தேகம் தமிழ்த் தரப்பில் உண்டு.

இவ்வாறானதொரு பின்னணியில் கோட்டா கோகம கிராமத்தில் ரணவிரு குடில் உருவாக்கப்பட்ட பின் அங்கே மனித உரிமை செயற்பாட்டாளர்களால் காணாமல் ஆக்கப் பட்டோர்களுக்கான ஒரு குடிலும் உருவாக்கப் பட்டிருக்கிறது. இது ரணவிரு கிராமத்தை சமன் செய்யும் ஒரு நடவடிக்கையாகவும் பார்க்கப்படுகிறது.

எதுவாயினும் இப்படிப்பட்ட எல்லா விமர்சனங்களுக்கும் அப்பால் கோட்டா கோகம கிராமத்தில் கூடியிருப்ப வர்களோடு தமிழ்த் தரப்பு உரையாட வேண்டும். இப்பொழுது நொந்து போயிருக்கும் படித்த சிங்கள நடுத்தர வர்க்கத்தின் மனசாட்சியை உலுப்பும் விதத்தில் தமிழ்த் தரப்பு விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதன் மூலம் சிங்களப் பொது உளவியலைக் கூட்டுக் குற்ற உணர்ச்சிக்கு உள்ளாக்க வேண்டும். அவ்வாறு சிங்களப் பொது உளவியலின் கூட்டுக் குற்றவுணர்ச்சியைத் தூண்டவில்லை என்றால் இலங்கைத் தீவுக்குள் இரண்டு இனங்களும் எந்த ஒரு இணக்கத்துக்கும் போகமுடியாது. எனவே கோட்டா கோகம கிராமத்தோடு தமிழ்த்தரப்பு உரையாட வேண்டும். அதன் பொருள் மெய்மறந்து இணைந்து போராட வேண்டும் என்பதல்ல. முதலில் உரையாட வேண்டும்.

குறிப்பாக இன்னும் ஒரு வாரத்தில் மே மாதம் தொடங் குகிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அது நினைவு கூர்தலுக்கான மாதம். கடந்த சில ஆண்டுகளாக தமிழ் மக்களின் நினைவுகூரும் கூட்டுரிமை மறக்கப்பட்டு வரு கிறது. இதுதொடர்பாக தென்னிலங்கையில் ஆர்ப்பாட் டங்களில் ஈடுபடுபவர்களின் நிலைப்பாடு என்ன?

இப்போதுள்ள நிலைமைகளின்படி ஜனாதிபதி வீட்டுக்குப் போகக்கூடிய நிலைமை இன்னமும் தோன்றவில்லை. அதேசமயம் பௌத்த மகா நாயக்கர்களின் வேண்டு கோளை ஏற்று ஜனாதிபதி உருவாக்கக்கூடிய இடைக்கால ஏற்பாட்டில் எதிர்க்கட்சிகள் இணையுமா என்பதும் சந்தேகமே. இந்நிலையில் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டு காலிமுகத்திடலில் கூடியிருப்பவர்கள் மே மாதம் வருவதற்கு இடையில் வீட்டுக்கு போகக்கூடிய விதத்தில் திருப்திகரமான மாற்றங்கள் ஏற்படுமா என்பது சந்தேகமே. அவ்வாறு அக்கிராமம் மே 18ஆம் திகதியும் அங்கே இருக்குமாக இருந்தால் நினைவுகூர்தல் தொடர்பாக அக்கிராமத்தில் இருப்பவர்கள் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டியிருக்கும்.

கோட்டா கோ கம கிராமத்தில் நினைவுகூர்வதற்கு இடம் இருக்குமா? அல்லது நினைவுகூர்தல் தொடர்பாக கோட்டா கோகம கிராமத்தில் இருப்பவர்களின் கருத்து என்ன? அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன் னெடுக்கும் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

கடந்த ஆண்டு சஜித் பிரேமதாச நினைவுகூர்தல் தொடர் பாக தமிழ் மக்களுக்கு சாதகமாகக் கருத்துத் தெரிவித் திருந்தார். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்மக்கள் துப்பாக்கியின் நிழலில்தான் நினைவுகூர முடிகிறது. கடந்த ஆண்டு மட்டக்களப்பில் நினைவு கூர்தலை அனுஷ்டித்தவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு, கடந்த திங்கட்கிழமைதான் விடுவிக்கப்பட்டார்கள் என் பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எனவே நினைவுகூர்தல் தொடர்பில் கோட்டா கோகம கிராமத்தில் இருப்பவர்களின் தார்மீக நிலைப்பாடு என்ன என்பதனை அறிவது அவசியம். அக்கிராமத்தில் இருப் பவர்கள், மற்றும் அக்கிராமத்தை எதிர்ப்பின் மையமாக கருதுபவர்கள் அனைவரும் தமிழ்மக்களின் நினைவு கூர்தலுக்கான கூட்டுரிமை தொடர்பாக ஒரு நிலைப் பாட்டுக்கு வரவேண்டியிருக்கிறது. அந்நிலைப்பாடு தமிழ் மக்களை அக்கிராமத்தை நோக்கி போவதா இல்லையா என்ற முடிவை எடுக்க உதவக்கூடும். தென்னிலங்கையில் நிகழும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் விலகி நின்று சாட்சி களாகக் காணப்படும் தமிழ்மக்களின் மனதை மாற்ற அது உதவக்கூடும்.

இதுவிடயத்தில் தமிழ் தரப்பிலிருந்து யாராவது கோட்டா கோகம கிராமத்தோடு உரையாடினால் என்ன ?

இலங்கைத் தீவில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்துவது என்றால் அதற்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய மூன்று தரப்புக்களும் இணைந்தால்தான் உண்டு. அதைத் தனிய சிங்கள மக்களால் செய்ய முடியாது என்பதைத்தான் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் உணர்த்தியது. இப்பொழுதும் அடிப்படையான கட்டமைப்பு மாற்றத்துக்கு மூன்று இனங்களும் இணையவேண்டும்.

ஆனால் அரசாங்கத்துக்கு எதிராக போராடும் பெரும் பாலானவர்கள் ஒரு குடும்பத்தை ஆட்சியில் இருந்து அகற்றினால் எல்லாம் சரியாகிவிடும் என்று கருதுவதாக தெரிகிறது. அவர்கள் தமது எதிர்ப்பு முழுவதையும் ஒரு குடும்பத்தின் மீதே குவிக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பசில் ராஜபக்ஷவின் மீது முழு வெறுப்பையும் காட்டு கிறார்கள். பசில் ராஜபக்சவை ஒரு காகமாக உருவகித்து அவர் மீது தொடர்ச்சியாக தனிப்பட்ட முறையில் தாக்கி வருகிறார்கள். கடந்த செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சிகள் ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தில் ஒரு பிரம்மாண்டமான காகச்சிலையை செய்து அதன் கழுத்தில் குரக்கன்



சால்வையைக் கட்டி ஊர்வலமாக எடுத்துச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. பூமிகா ஜெயசிங்க என்ற ஓவியர் காகத்தை குரக்கன் சால்வையோடு கழிப்பறைக் குழிக்குள் வைத்து ஓவியம் வரைந்திருக்கிறார். பெரியவர்கள் தொடக்கம் சிறுகுழந்தைகள் வரையிலும் காகம் என்றால் பலில் என்று நக்கலடிக்க காணலாம்.

ஆனால் இங்கு பிரச்சினை ஒரு பசில் ராஜபக்ஷ

கோட்டா கோ கோகமவும், மே பதினெட்டும்

மட்டுமல்ல. அவர் பத்து வீதம் கொமிஷன் பெற்றதால் மட்டும் நாடு கெட்டுப் போகவில்லை. அல்லது ஏனைய ராஜபக்சக்கள் கொள்ளை அடித்ததால் மட்டும் நாடு கெட்டுப் போகவில்லை. இந்த எல்லா ராஜபக்சக்களும் எப்படி ஒரேயடியாக நாடாளுமன்றத்துக்குள் வந்தார்கள்? என்ற கேள்வியை சிங்களமக்கள் தங்களைத் தாங்களே கேட்கவேண்டும். யுத்தவெற்றிதான் அதற்கு அடிப்படைக் காரணம். தமிழ் மக்களுக்கு எதிராக பெற்ற வெற்றிதான். அதாவது இனவாதம். இனவாதத்தை முதலீடு செய்துதான் ஒரு குடும்பம் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த குடும்பம் மட்டுமல்ல இதற்கு முன்னரும் கொழும்பை யார் ஆட்சி செய்வது என்பதனை இனவாதம்தான் பெருமளவுக்கு தீர்மானித்திருக்கிறது. அதுதான் இலங்கைத்தீவின் சிங்கள-பௌத்த அரசுக் கட்டமைப்பின் அடிப்படைப் பண்பு. அதை மாற்ற வேண்டும். அதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தயாரா? எதிர்க்கட்சிகள் தயாரா?

தமிழ் மக்கள் கேட்கும் மாற்றம் என்பது நாடாளுமன்றத்தில் இப்பொழுது நடப்பது போன்ற அரசியல் சங்கீதக்கதிரை விளையாட்டு அல்ல. அரசாங்கம் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறது. பௌத்த மகா நாயக்கர்களின் எச்சரிக்கையையடுத்து ஜனாதிபதி மீண்டும் அவ்வாறான ஒரு சங்கீதக்கதிரை விளையாட்டுக்கு தயாராகி வருகிறார். அதை இன்னும் திருத்தமான வார்த்தைகளில் சொன்னால் இப்போது இருக்கும் யாப்புக்குள், இப்போதுள்ள நாடாளுமன்றத்துக்குள், என்னதான் மாற்றத்தைச் செய்ய முற்பட்டாலும் அது ஒரு சங்கீதக்கதிரை விளையாட்டாகத்தான் முடியும். எனவே ஆர்ப்பாட்டக்காரர்கள் கேட்க வேண்டியது அடிப்படையான கட்டமைப்பு மாற்றத்தை. அதுதான் அவர்களுக்கும் நிரந்தர மீட்சியைக் கொடுக்கும். அதைத்தான் தமிழ்மக்களும் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக



கேட்டுவருகிறார்கள்.

கோட்டா கோகம கிராமத்தில் தேசியகீதம் தமிழில் இசைக்கப்பட்டது. ஒரு நல்ல சகுனம்தான். எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் தமிழில் தேசியகீதம் இசைக்கப்பட்டது ஒரு நல்ல சகுனம்தான். ஆனால் தமிழ் மக்களை இது போன்ற சீர்திருத்தங்களால் மட்டும் திருப்திப்படுத்த முடியாது. ஏனெனில் தமிழ்மக்களின் சந்தேகங்கள் நூற்றாண்டு காலத்துக்குரியவை. காயங்கள் ஆழமானவை, இப்பொழுதும் ஆறாதவை.



தமிழ் மக்கள் வாகனத் தகட்டு இலக்கங்களில் பொறிக்கப்பட்ட சிங்களச் சிறீ எழுத்து, சிங்கக்கொடி, தேசியகீதம் எல்லாவற்றுக்கும் எதிராக ஒருகாலம் போராடினார்கள். இப் பொழுது இனப்படுகொலைக்கு எதிரான நீதியை கேட்டுப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். சின்னச்சின்ன சீர்திருத்தங்களைக் கேட்டு அல்ல.

சிங்கள பௌத்த மேலாண்மையை பாதுகாக்கும் ஒற்றையாட்சி கட்டமைப்பை உடைத்து பல்லினத்தன்மைமிக்க ஒரு தீவைக் கட்டியெழுப்புவதே தமிழ்மக்கள் கேட்கும் கட்டமைப்பு மாற்றம் ஆகும். காகச்சிலையை தெருத்தெருவாக இழுத்துச்செல்லும் சிங்களமக்கள் இந்த அடிப்படை மாற்றத்தை ஏற்றுக் கொள்வார்களா?

அண்மையில் மட்டக்களப்பில் அன்னை பூபதி நினைவு தினம் வந்தது. அந்த நினைவு நாளை அனுஷ்டிக்கக் கூடியவர்கள் என்று அரசாங்கம் இனங்கண்ட ஒரு தொகுதி அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக தடையுத்தரவுகள் விநியோகிக்கப்பட்டன. அதே சமயம் கடந்த ஆண்டு நினைவு கூர்தலை அனுஷ்டித்த பத்துபேர் கைது செய்யப்பட்டு நான்கு மாதங்களின்பின் இந்த வாரம் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். தென்னிலங்கை குழம்பிப் போயிருக்கும் ஒரு பின்னணியில் இம்முறை மே 18ஐ நினைவு கூர்வது தொடர்பில் அரசாங்கம் எப்படிப்பட்ட ஒரு முடிவை எடுக்கும்? ஆனால் அதைவிட முக்கியமானது, இப்பொழுது அரசுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் சிங்கள மக்கள் அது தொடர்பாக என்ன முடிவெடுப்பார்கள் ?

நன்றி: நிலாந்தன் - 01 மே 2022

சங்கத்தமிழ்

ஓவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203



உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்

லஷ்சுமி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6

மகாசங்கமே உண்மையில் எழுதப்பாடாத நடைமுறை அரசயில் யாப்பு

அ.மயூரன், M.A

ஏப்பிரல் 28, 2022



இன்றும் அதே பௌத்த மகாசங்கமே கோட்டாபய ராஜபக்சவை பதவியில் அமர்த்தி இன்றுவரை ராஜபக்ச குடும்பத்தினரை பாது காக்கிறது.

பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கும், பேணி வளர்ப்பதற்கும், புத்த பிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவே இலங்கை என்ற “தம்மதீபக்” கோட்பாடே மகாசங்கத்தின் அடிப்படைச் சித்தாந்த மாகும்.

அதனடிப்படையில் தமிழின அழிப்பு,

இந்திய எதிர்ப்பு என்பன அதன் பிரதான நிலைப்பாடாகும்.

இன்றைய நிலையில் அரசியல் யாப்பில் பௌத்தத்தை பேணிப் பாதுகாப்பதும், வளர்ப்பதும் இலங்கை அரசின் பொறுப்பாகும் என்று திட்டவட்டமாக வரையப்பட்டுள்ளது. இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற பிரகடனம் இதன்மூலம் நடைமுறைரீதியாக வலியுறுத்தப்படுகிறது.

இந்த மகாசங்கம் இலங்கையின் சட்டங்களுக்கு அப்பாற்பட்ட தாகவும், அதன் அரசியலை தீர்மானிக்கும் சக்தியாகவும் உள்ள தனால் அந்த மகாசங்கத்தை எழுதப்படாத அரசியல் யாப்பு என்றே சொல்லாம்.

இதுவரைகால இலங்கையின் வரலாற்றில் இந்த மகாசங்கமே ஒரு எழுதப்படாத யாப்பு விதியாக அரசியலைத் தீர்மானித்திருக் கிறது. இதை 1959 ஆம் ஆண்டு பௌத்தத்தின் பெயரால் பண் டாரநாயக்கவை ஒரு பிக்கு கொலை செய்ததை முதன்மை உதாரணமாகக் கொள்ளலாம்.

கூடவே இதற்கு முன் பண்டா – செல்வா ஒப்பந்தத்தை இருநூறு பிக்குகள் பண்டாரநாயக்கா முன் கூடி அந்த ஒப்பந்தத்தை கிழித் தெறிய செய்ததையும் காணலாம். இவ்வாறு தமிழர்களுக்கு பேச்சளவிலேனும் தீர்வினை வழங்க சிங்கள தலைவர்கள் முயன்ற போதெல்லாம் அதற்கெதிராக சிங்களப் பேரினவாத பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் செய்து

அவற்றை நீர்த்துப்போகச் செய்ததுதான் வரலாறு.

மேலும் சுனாமியின் பின்னர் அரசிற்கும் – விடுதலைப் புலிகளுக் கும் இடையே பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது 5000 வரையிலான பௌத்த பிக்குகள் ஜனாதிபதி செயலகம் வரை சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு மட்டுமல்லாது நீதிமன்றம் வரை சென்று தடையுத்தரவையும் பெற்று அவற்றை நீர்த்துப்போகச் செய்தனர்.


அதே பௌத்த மகாசங்கமே தமிழர்களுக்கு எதிரான போரை ராஜபக்ச அரசாங்கம் நடத்திய போது அப்போரை வழிநடத்திய அன்றைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கும், அப் போதைய பாதுகாப்பு செயலாளராகவும், இன்றைய ஜனாதிபதி யாகவும் உள்ள கோட்டாபய ராஜபக்சவிற்கும் பிரித் ஓதி அவர் கள் கையில் மந்திர நூல்கட்டி தமிழின அழிப்பிற்கு ஆசீர்வதித்து அனுப்பிய தோடல்லாமல், தமிழர்கள் மீது துண்டு மழை பொழிந்த பீரங்கிகளின் குழல்களுக்கும் மந்திர நூல்கட்டி பிரித் ஓதி தமிழர்களை கொல்வதற்கு ஆசீர்வதித்து அனுப் பியதும்

தமிழர்களுக்கு எதிரான போரைத் மகிந்த ராஜபக்சவின் ஆஸ்தான குருவாக இருந்த ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்க, அத்துரலிய ரத்ன தேரர் முதலானவர்கள் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என இனவாதம் பேசி போரைத் தூண்டுவித்து போரின் பின்னர் இரத்தம் படிந்த இராணுவத் தையும், ராஜபக்ச குடும்பத்தினரையும் பாதுகாத்து ஆட்சிப் பீட மேற்றி இன்றுவரை பாதுகாப்பதோடல்லாமல், தாமும் நாடாளு மன்றம் சென்று இன்றுவரை இனவாதத்தை தூண்டிக்கொண் டிருக்கின்றனர். இவர்கள் மறைமுகமாக மகிந்தவிற்கு ஆதரவை வழங்கிக் கொண்டு சகட்டு மேனிக்கு மகிந்த பதவி விலக வேண்டும் என்று கூச்சலிடுகின்றனர். இதுதான் மகாசங்க மனநிலை.

இதை இன்னுமொரு வழியில் விளக்கினால் ஜனாதிபதியை வீட்டுக்குச் செல்லுமாறும், பிரதமரை பதவி விலகுமாறும் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் நிலையில் தமிழ ருக்கு எதிரான போரில் பச்சைக் கொடிகாட்டி ஆசீர்வதித்த அதே மகாசங்க பிக்குகளே கோட்டாபய ராஜபக்சவை பாதுகாக் கின்றனர்.

கடந்த 20 ஆம் திகதி சியாம், இராமணிய, அமரபுர நிகாயங் களும், அஸ்கிரிய மல்வத்த பீடங்களும் இணைந்து 20 ஆவது சீர்திருத்த சட்டத்தை நீக்கி 19 வது சீர்திருத்த சட்டத்தை நடை முறைப்படுத்தவும் இல்லாதவிடத்து சங்க ஆணையை பிறப் பிக்க வேண்டிவருமென பௌத்த மகாசங்கம் அறிக்கை வெளியிட்டது.

இதன் பின்னர் 25.04.22 திகதி தேசிய பிக்கு நிபுணர்கள் மன்றம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது. முக்கியமான அக்கடிதத்தில் கடந்த 20.04.22 நான்கு பௌத்த பீடங்களும் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்திய அரசமைப்பு திருத்த விடயத்தில் (20 தை நீக்கி 19 பாதை நடைமுறைப்படுத்தல்) நாம் இணங்கவில்லை என்றும், புதிய அரசமைப்பினூடாக நாட்டிலுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்படும் என்று சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தில் குறிப் பிடப்பட்டதனால்தான் கோட்டாபய ராஜபக்சவை நாட்டு



மக்களும், மகாசங்கமும் தெரிவு செய்து அதற்கமையவே 20 வது சீர்திருத்த சட்டம் முன்வைக்கப்பட்டது. இதன்போது விரைவில் புதிய அரசமைப்பு வருமென மக்களும், மகாசங்கத் தினரும் நம்பினர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் அந்த தேசிய பிக்கு நிபுணர்கள் மன்ற கடிதத்தில் தற்போதைய சூழ்நிலையில் துரித அரசியலமைப்பு திருத்தத் திற்கான தேவை ஏற்படவில்லையென்றும், மக்களும் அக் கோரிக்கையை முன்வைக்கவில்லையென்றும். இதனால் தற் போது நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் முன் னேற்றத்திற்காக அன்றி மாயைக்குள் மட்டுப்படுத்தப்பட்

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு

437.345.4203

மகாசங்கமே உண்மையில் எழுதப்பாடாத நடைமுறை அரசயில் யாப்பு

அ.மயூரன், M.A



டுள்ளன.

எனவே நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சுதந்திர மாக செயல்படுவதற்கு இடையூறு ஏற்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் அரசமைப்பு திருத்தச் சட்டத்திற்கு அழுத்தம் பிரயோகிக்கப் படு கின்றமை பிறிதொரு சதித் திட்டத்திற்கேயாகும்.

19வது சீர்திருத்த சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டபோது நீதிமன்றத்தைப் புறக்கணித்து தெரிவுக்குழுவில் 40 இற்கும் மேற்பட்ட திருத்தங்களை முன்வைத்த சூழ்ச்சி யாளர்கள் இத்திருத்தத்தின் பின்னணியிலும் உள்ளனர்.

அத்துடன் 13 வது சீர்திருத்த அரசமைப்பு திருத்தத்தைக் கோருவதனூடாக பிரிவினை வாதத்திற்கு எதிராக காணப்படும் தடைகளை நீக்குவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

இரண்டரை ஆண்டுகளாக புதிய அரசமைப்பை முன்வைக் காமை தொடர்பில் கேள்வி கேட்காதவர்கள், பிரிவினை வாதிகளின் அழுத்தங்கள் மூலம் பிரிவினை வாதத்திற்கான தேவையை நிறைவேற்றிக்கொள்ள இச்சந்தர்ப்பத்தை பயன் படுத்தக் கூடும். பிரிவினை வாதத்திற்கு எதிராக 30 ஆண்டு காலமாக நாம் செய்த அர்ப்பணிப்புக்கள் அனைத்தையும் தோல்வியடையச் செய்து அரசமைப்பின் வசனங்களில்

மாற்றத்தைச் செய்து பிரிவினை வாதிகளின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடும். இதற்கு ஒரு போதும் இட மளிக்கக கூடாது என்று குறிப்பிடப்பட்டிருந்தானது மகாசங்கத் தின் மனோநிலையை தெளிவு படுத்துகிறது.

மேலும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதானது நாடு, தேசம். பௌத்த சாசனம் என்ற ரீதியில் செயற்படும் மகாநாயக்க தேரர்களுக்கு பொய்யான தகவல்களை வழங்கி தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் மோசடி செய்பவர்களை அடை யாளம் காண இது ஒரு சந்தர்ப்பமாகும். அதற்கிணங்க தற்போதைய நெருக்கடியைத் தணிக்க சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தை உண்மையாகவும், முறையாகவும் நடைமுறைப்படுத்துவது பொருத்தமானது என நாங்கள் வலி யுறுத்துகிறோம்.

குறுகிய கால பிரச்சனைகளுக்கு உடனடி நிவாரணம் வழங் கப்பட வேண்டும். இந்த வழிமுறையின் கீழ் தற்போதுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டதன் பின்னர் நீங்கள் ஏற்கனவே கூறியதை போன்று புதிய அரசியலமைப்பை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இதற்கிடைப்பட்ட காலத்தில் நாட்டிற்கு அரசமைப்பு திட்டம் ஒன்று தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் என தேசிய பிக்கு நிபுணர்கள் மன்றம் ஜனாதிபதிக்கு கடிதத்தில் தெரிவித் திருந்தது. இது மகாசங்கத்தின் நிலைப்பாட்டையும் பௌத்த சிங்கள பீடங்களின் இரட்டை முகத்தினையும் தெளிவுபடுத்தி யிருக்கிறது.

இந்த கடிதத்திற்கு ஜனாதிபதியின் கையெழுத்துடன் அதன் செயலகத்தினால் 26.04.22 அனுப்பிவைக்கப்பட்ட பதில் கடிதத் தில் மகாசங்கத்தினரிடம் மேலதிக ஆலோசனை வழங்குக என உங்கள் பாதங்களை வணங்கிக் கேட்கிறேன் என்றும், நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப் புடன் செயற்படுவேன், நீங்கள் குறிப்பிட்டுள்ளதைப்போன்று 20வது சீர்திருத்த சட்டத்தை நீக்குவது தொடர்பாக நாடாளு மன்றத்தில் ஏதேனும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுமாயின் எனது ஒத்துழைப்புக்களை வழங்குவதோடு அதை ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றம் இணைந்தே கொண்டுவர வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு சர்வகட்சி மாநாட் டிற் கு விடுக் கப் பட் டுள் ள அழைப்பிற்கும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதற்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பிற்கும் சாதகமான பதில் கிடைக் காமை கவலையளிக்கிறது. எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்களால் முன்வைக்கப்பட்ட யோசனையை உதாசீனப்படுத்த வில்லை. அனைத்து அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு நெருக்கடியான அரசியற் சூழலை சுமுகமாக்கு வதற்கும், பொருளாதாரத் தை கட் டியெழுப் புவதற் கும் உங் களது ஆலோசனைகளையும், தலையீட்டையும் வழங்க வேண்டும் என்று உங்கள் பாதங்களை வணங்கி கோருகிறேன் என பதிலனுப்பப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்களுடன் புத்த பிக்குகள் கலந்துகொண்டு நாம் உங்களுடன் நிற்கின்றோம் என்று சாட்டுப்போக்குக்கு எதிர்ப் பைக்காட்டிக்கொண்டு மறுபக்கம் கோட்டாபய ராஜபக்சவிற்கு மறைமுக ஆதரவு வழங்குவதனை அவ்வப்போது தனித்தனிய பௌத்த தேரர்கள் விடும் அறிக்கைகள் மூலம் உணரலாம். உதாரணமாக சம்பிக்க ரணவக்க, அத்துரலிய ரத்ன தேரர் முதலானவர்களைக் குறிப்பிடலாம்.

இது ஒரு பௌத்த பேரினவாதத்தின் தந்திரோபாயமாகும். ஒரு புறம் கடந்த 20 ஆம் திகதி 20 ஆவது சீர்திருத்த சட்டத்தை நீக்கி 19 வது சீர்திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் இல்லாவிட்டால் சங்க ஆணையை பிறப்பிக்க வேண்டி வரும் என பௌத்த மகாசங்கம் அறிக்கை வெளியிட மறுபுறம் தேசிய பிக்கு நிபுணர்கள் மன்றம் துரித அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் நாம் இணங்கவில்லை எனவும் தெரிவித்திருந்ததுடன், 13 வது சீர்திருத்த சட்டம் பிரிவினை வாதத்தை தூண்டுவதாகவும், அதற்கு இடமளிக்க கூடாது என்றும் தற்போதைய நெருக்கடியான பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டதன் பின்னர் புதிய அரசமைப்புக்கு தீர்வு காணுமாறும் அதற்கு இடைப்பட்ட காலத்தில் அரசமைப்பு சீர்திருத்தம் தேவை யில்லை என்றும் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

மேலும் மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று இடைக்கால அரசொன்றை அமைப்பதற்கு கோட்டாபய ராஜபக்ச உடன்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக தங்களுக்கு அறிவிக் கப்பட்டுள்ளதாகவும், மகாசங்க சபையின் செயலாளர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்திருந்தார். இக்கருத்து தேசிய பிக்கு நிபுணர்கள் மன்றத்தின் கடிதத்துக்கு எதிர்மாறானவை.

அத்துடன் தேசிய பிக்கு நிபுணர்கள் மன்றத்தின் கடிதத்திற்கு பதிலளித்த ஜனாதிபதி நெருக்கடியான சூழ்நிலையில் சர்வகட்சி மாநாட்டினை கூட்டி முடிவெடுப்பதற்கு பிக்குகள் அம்மாநாட் டினை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்கப்பட்டதனால் 28.04 22 திகதி மகாநாயக்க தேரர்களின் அறிக்கை வெளி யாகியது. அதில் மகாநாயக்க தேரர்களின் தலைமையில் வரும் கிழமையில் அனைத்துக்கட்சி கூட்டத்தை நடாத்தி இடைக்கால அரசாங்கம் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட உள்ளதாக தேசிய பிக்கு நிபுணர்கள் மன்றம் தெரிவித்துள்ளது. இது முதல் இவர்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் இருந்தும் முரண் பட்டதாகும்.

அத்துடன் இது வரலாற்றில் டட்லி - செல்வா ஒப்பந்தம் கிழித் தெறியப்பட்டபோது நடந்த நிகழ்வை நினைவுபடுத்துகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் 1966 ஆம் ஆண்டு ஏற படுத்தப்பட்ட டட்லி - சொல்வா ஒப்பந்தப்படி 1966 இல் மாவட்ட சபை உருவாக்கப்பட வேண்டும் ஆனால் 1967 ஆம் ஆண்டா கியும் மாவட்ட சபை நிறைவேற்றப்படுவது குறித்து எந்தவித மான அறிகுறிகளும் தென் படாதவிடத் து ஏமாற்றத் தை உணர்ந்த தந்தை செல்வா டட்லி சேனநாயக்கவிடம் அதுபற்றி தொடர்ச்சியாக அழுத்தங்களை கொடுத்தபோது அப்போது மந்திரியாக இருந்த ஜே.ஆர் ஆங்கில பத்திரிகை ஒன்றினை அழைத்து மாவட்ட சபையை நிறுவுவதற்கு எதிராக எழுதுமாறு கூறினார்.


அந்தப்பத்திரிகையும் அவ்வாறே எழுத அதனைத்தொடர்ந்து சிங்களப்பத்திரிகையிலும் அச் செய்தியை வரவைத்துவிட்டு சிங்கள மக்கள் மாவட்டசபையை விரும்பவில்லை என பத் திரிகை செய்தியைக் காரணம் காட்டி மாவட்டசபையை நிறு வாது டட்லி - செல்வா ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட்டது. அதா வது டட்லி, ஜேஆர் மனதில் உள்ள தமிழருக்கு எதுவும் வழங்கக்கூடாது என்ற தமது நிலைப்பாட்டை பத்திரிகையில் செய்தியாக்கிவிட்டு ஒட்டுமொத்த சிங்கள மக்களின் நிலைப் பாடாக காட்டமுயன்று தந்தை செல்வாவை நம்பவைத்தது போலவே தற்போது இந்தப் பொருளாதார நெருக்கடியிலும், மகாசங்கம் தனது நிலைப்பாட்டை சிங்கள மக்கள்மீதே காட்டிய அதேவேளை 13 வது சீர்திருத்ததிற்கு எதிரான கருத்து மூலம் தமிழ் மக்களுக்கு எதிராக திரும்பியுள்ளது. இதற்கு பௌத்த மகாசங்கம் தாம் இரு வேறாகப் பிரிந்து நிற்கிறது பேன்ற நிலைப்பாட்டை மக்கள் மீது விதைத்து மகாவம்ச மனநிலை யில் இருந்துதித்த சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்த முற் படுகிறது.

இது இப்படியிருக்க கண்டியிலிருந்து அரசுக்கெதிராக ஆர்ப்பாட டத்தை மேற்கொள்ளும் சஜித் பிறேமதாசவை கண்டி தலதா மாளிகையில் அழைத்து பிரித் ஓதி ஆசீர்வதித்து ராஜபக்ச குடும்பத்தினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதற்கு பகட்டு ஆதரவினை வழங்கியுமுள்ளது.

அதேபோல்தான் 13 வது அரசியலமைப்பு சட்டத்தை நடை முறைப்படுத்துவேன் என சஜித் கூறிய நிலையில், 13 வது சீர் திருத்த சட்டத்திற்கு எதிரான கோசங்களுடன் குணதாச அமர சேகர போன்ற சிங்கள இனவாத சக்திகள் கிளம்பியிருப்ப தானது. தேசிய பிக்கு நிபுணர்கள் மன்றம் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததை நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. இது மகாசங்கமே உன்மையில் எழுதப் படாத யாப்பு என்பதை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது.

இன ஒற்றுமையை வலியுறுத்தி காலி முகத்திடலில் சிங்கள இளைஞர்கள் ஒன்றுதிரண்டு வருகின்ற சூழ்நிலையில் எழுந் திருக்கின்ற இந்த தமிழ் மக்களுக்கு எதிரான எதிர்ப்பு, தமிழர் களுக்கு எதிராக இப்போராட்டத்தை திசை திருப்புவதன் ஆரம்பப்புள்ளி எனலாம்.

ஆகக்குறைந்தது அரசியலமைப்பில்கூட தமிழர்களுக்கு சாதக மான மாற்றங்கள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் மகாசங் கமும், சிங்கள பௌத்த இனவாத கும்பலும் திட்டமிட்ட முறை




யில் செயற்பட்டு வருகிறது. இதுதான் கடந்த 70 ஆண்டு களுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது.

அடிப்படையில் தமிழின அழிப்பு, இந்திய எதிர்ப்பு மனநிலையில் கட்டமைக்கப்பட்ட சிங்கள பௌத்த இனவாத சக்திகளிடம் தமிழருக்கு எதிரான நிலைப்பாட்டில் அரசியல் சிந்தனையி லாவது அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை அல்லது அவர்கள் அதற்கு தயாராக இல்லை. இந்த ஆபத்தான சூழ்நிலையை தமிழ் தலைவர்களும், தமிழ் மக்களும் இனியும் புரிந்து கொள்ளாதவிடத்தும், இவ்வாறான பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளின் சிந் தனை மாறாதவிடத்தும் எத் தனை காலிமுகத்திடல் ஆர்ப் பாட்டங்கள் நடைபெற்றும் பய னில்லை. அரசியல் தீர்வின்றி நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு நீண்ட காலத் தீர்வு முடியாது.

Call today to Save energy

Free Estimate!
Call today
$50 OFF
When you order more than $1000



Let us help with...

- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



ஒரு விரல் விண்வப் பிரம்மமே முயலை

R.S தங்கப் பட்டறை

நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்

குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்

திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்



பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough

அகரம்
Akaram

வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant

தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)

இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள

அழையுங்கள் (Call):
437.345.4203

Nickon நிக்கொன்
Photo & Video போட்டோ & வீடியோ
Digital Album டிஜிட்டல் அல்பம்



உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...





மாங்குளம் பனிக்கன்குளக் காட்டுப்பகுதியில் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டுபிடிப்பு

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழகம்

கொக்காவிலுக்கும் மாங்குளத்திற்கும் இடைப்பட்ட பிரதான வீதிக்கு தெற்கே ஏறத்தாழ பத்து கிலோ மீற்றர் தொலைவில் காடுகள் சூழ்ந்துள்ள பனிக்கன்குளம் ஆற்றின் கரை யோரங் களில் இருந்து கற்கால மக்கள் வேட்டையாடப் பயன்படுத்திய கற்கருவிகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பனிக்கன்குளத்தில் வாழ்ந்து வரும் திரு.கஜன், திரு. ஜெயகாந்தன் ஆகியோர் காட்டுபிரதேசத்தில் உள்ள ஆற்றின் கரையோரத்தில் காணப்பட்ட தானியங்கள் அரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதெனக் கருதக்கூடிய கருங்கல்லின் புகைப் படம் ஒன்றை எமக்கு அனுப்பியிருந்தனர். இக்கருங்கலின் வடி வமைப்பும் அதன் பயன்பாட்டு நோக்கமும் மிகவும் பழமை வாய்ததாகக் காணப்பட்டதால் அவ்விடத்திற்குத் தொல்லியல் விரிவுரையாளர் திரு. க.கிரிகரனுடன் இவ்வாரம் சென் றிருந்தோம் அவ்விடத்திற்குச் செல்வதற்கான உதவிகளை திரு.கஜன், திரு.ஜெயகாந்தன் ஆகியோர் செய்திருந்தனர்.

தற்போதைய இக்காட்டுப் பிரதேசத்தில் பிரதான வீதிக்கு ஒரு மையில் சுற்றுவட்டத்திலேயே சில குடியிருப்புகள் காணப படுகின்றன. ஏனைய பிரதேசம் வன்னேரிக்குளம் வரை மக்கள் வாழ முடியாத அடந்த காடாகவே காணப்படுகின்றது. ஆயினும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததை உறுதிப்படுத்தும் நம்ப கரமான தொல்லியற் சான்றுகள் ஆற்றின் இரு மருங்கிலும் செறிவாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பல அளவுகளில், பல வடிவங்களில் செய்யப்பட்ட மட்பாண்ட ஓடுகள், செங்கற்கள், இரும்பு படிமங்கள், கருங்கற்களில் வடிவமைக்கப்பட்ட பாவ னைப் பொருட்கள் முதலியன ஆற்றையண்டிய மேட்டுப் பகுதியில் இருந்து கண்டுபிடிக்க முடிந்தது. இவ்வாதாரங்கள் இலங்கையில் கந்தரோடை, கட்டுக்கரைக்குளம், அநுராதபுரம் தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், அழகன்குளம், அரிக்கமேடு ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதியிரும்புக்கால (பெருங்கற்கால) பண்பாட்டுக்குரிய சான்றாதரங்களை நினைவு படுத்துவதாக உள்ளன.





ஆயினும் இப்பிரதேசத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் நிரந்தரமான குடியிருப்புகள் தோன்றுவதற்கு முன்னர் நாடோடிகளாக உணவுக்காக மிருகங்களை வேண்டியாடி வாழ்ந்த கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் இங்கு கிடைத்திருப்பது முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது. அவற்றை உறுதிப்படுத்தும் நம்பகரமான சான்றுகளாக குவாட்ஸ், சேட் கற்களிலிருந்து வடிவமைக்கப்பட்ட சிறுதொழிட்பத்துடன் கூடிய கற்கருவிகளும், கருவிகளை வடிவமைக்கும் போது ஏற்பட்ட கற்களின் பாகங்களும் ஆற்றின் கரையோரங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதரங்கள் இப்பிரதேசத்தில் பெருங்கற்காலப் பண்பாடு தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இடைக்கற்கால அல்லது நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் பழங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்தனர்



எனக் கூறப்பட்டலும் இடைக்கற்கால அல்லது நுண்கற்காலப் பண்பாடிலிருந்தே மனித வரலாற்றையும், பண்பாட்டு



வரலாற்றையும் தொடர்ச்சியாக அறிய முடிகின்றது. அவற்றுள் நாடோடி வாழ்க்கை முறையைப் பின்பற்றிய நுண்கற்காலப் பண்பாடு (இடைக்கற்காலப் பண்பாடு) இற்றைக்கு 37000 ஆண்டிலிருந்து 3000 ஆண்டுகள் நிலவியதாகவும், நிலை யான குடியிருப்புக்களைக் கொண்ட நாகரிக வரலாற்றுக்கு




வித்திட்ட பெருங்கற்காலப் பண்பாடு இற்றைக்கு 3000 ஆண்டிலிருந்து 1700 வரை நிலவியதாகவும் காலங்கள் கணிப் பிடப்பட்டுள்ளன.


இவ்விரு பண்பாடுகளும், அப்பண்பாடுகளுக்குரிய மக்களும் தென்தமிழகத்தில் இருந்தே புலம்பெயர்ந்து வந்தவை என்பது தொல்லியலாளர்களின் கருத்தாகும். தற்போது அவ்விரு பண்பாடுகளுக்கும் உரிய சான்றாதாரங்கள் பனிக்கன்குளக் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை வட இலங் கையின் பூர்வீக வரலாற்றுக்கு புதிய செய்தியைச் சொல்வதாக உள்ளது. இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இவ்விடத்தை தொல்லியல் மையமாகப் பிரகடனப்படுத்துமாறு இலங்கைத் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத் திடம் கோரிக்கை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


09.10.2019

மே 18 147,000 ஈழத்தமிழர் படுகொலை




























தமிழீழ உட்கட்டுமானம்

STRUCTURES OF THAMILEELAM



சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விரும்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரியையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. திரு. வே. பிரபாகரன் அவர்கள்


தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வெளியீடு


1. சிறப்பான ஆய்வுகள் பற்றி தேவை

மாநிலங்களாகத் தெரியப்பட்ட ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒரு தமிழீழத்தின் பிரதான தலைநகரான திருகோணமலையின் நகராக்கம் தொடர்பான விபரமான ஆய்வு தனியான நகரத் திட்டமிடல் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் அவசியம்.

வட தமிழீழப் பிரதேசத்தின் தலைநகராக மாங்குளம் விருத்தி செய்யப்படும்போதும் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு தனியான நகரத்திட்டமிடல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1. மாங்குளம் மாநகரத்துக்குரிய பிரதான நீர்விநியோக முறைக்கு உதவக் கூடிய வகையிற் கனகராயன் ஆற்றை மையமாக வைத்து, பொருத்தமான ஒரு நீர்த்தேக்கத் திட்டம் அமைக்கப்படல் வேண்டும்.
2. தேவை ஏற்படின் பொருத்தமான வகையிற் கனகராயன் ஆற்றைத் திசைதிருப்புவதும், வவுனிக்குளம் ஆறு, அல்லது முத்தையன் கட்டு ஆறு என்பவற்றுடன் தொடர்புபடுத்தி இந்நீர்த்தேக்கம் அமைக்கப்படலாம்.





அமைக்கப்படலாம்.

தெரிவுக்குழுவினால் தெரிவான நகரங்கள்
(வரைபடம் பார்க்கவும்)

மாநிலம்	பிரதான நகரம்
1. நல்லூர்	யாழ்ப்பாணம்
2. வரணி	கொடிகாமம்
3. கரைச்சி	கிளிநொச்சி
4. பூநகரி	பூநகரி
5. முல்லைத்தீவு	தண்ணீரூற்று
6. மாங்குளம்	மாங்குளம் **
7. மாந்தை	உயிலங்குளம்
8. மடு	மடுறோட்
9. வவுனியா–வன்னி	ஓமந்தை
10. குச்சவெளி	திரியாய்
11. திருகோணமலை	திருகோணமலை ***
12. மூதூர்	கிளிவெட்டி
13. வாகரை	மாங்கேணி
14. வெல்லாவெளி	பேராறு(மகாஓயா)
15. மட்டக்களப்பு	கரடியன்ஆறு **
16. அக்கரைப்பற்று	பாலமுனை
17. பொத்துவில்	பொத்துவில்
18. அறுவாக்காடு	பொம்பரிப்பு
19. புத்தளம்	புத்தளம்
20. சிலாபம்	சிலாபம்

*** தமிழீழத் தேசியத் தலைநகரம் ** மாநிலத் தலைநகரம்

தொடரும்


உலக வணிகம் ULAGA VANIKAM

2023



LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஒர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஒர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

தொடர்புகளுக்கு 437.345.4203

முள்ளிவாய்க்கால்

வலி சுமந்த பதிவுகள்...



61

முள்ளிவாய்க்கால் நினைவு நாள்

Mullivaikkal Remembrance Day

13 ஆம் Yrs ஆண்டு

மே May 18

2009

ஈழத்தமிழின அழிப்பு நாள்

தமிழ்த்தேசிய துக்க நாள்

Eelam Thamil GENOCIDE DAY

Thamil National MOURNING DAY

May 18 2022

Only in 2009 Over 146. 679 Eelam Thamils were murdered and more then 70,000 Thamils unaccounted. Over 95,000 Thamil Women Widowed by Sri Lanka's Government Forces, More then 50,000 Thamils Children Orphaned.



1948 தொடக்கம்
தமிழீழத்தில் தமிழர்களுக்கு
எதிரான கட்டமைக்கப்பட்ட
இன அழிப்பு
தொடர்கிறது...

Since 1948 Structural Genocide Continues Against Eela Thamils by Sri Lankan Government

Ontario Government Recognized Thamil Genocide Education Week May 12 to 18 2022

The Genocide of Thamils in Sri Lanka is one of biggest tragedies of the 21st century and yet the World still remains silent

Government of Canada & United Nations Recognize Thamil Eelam Genocide and demand International Investigationon Genocide of Eelam Thamils

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The thirst of the Thamils is the Homeland of Thamileelam சங்கத்தமிழ்